Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU





முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 29 ஞாயிற்றுக்கிழமை (12.05.2013) பக்கங்கள் 20 ஓசை – 224

மீண்டுமா? 06

சீன வானொலியிலும்... 08



சம்பியன் 09



பாதிக்குமா? 12



தடை 18

# இணக்கமெதுவும் ஏற்படாத கூட்டமைப்பு பதிவுக் கூட்டம்

## மன்னார் ஆயரின் முயற்சி பிசுபிசுப்பு



(மன்னார்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவுசெய்வது தொடர்பாக மன்னாரில் நேற்றைய தினம் நடைபெற்ற முக்கிய கூட்டத்தில் முடிவேதும் எடுக்கப்படாத நிலையில் அக்கூட்டம் பிசுபிசுத்துப் போனது.

தமிழ்த் தேசியக கூட்டமைப்பில் இணைந்துள்ள ஐந்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் இடையே, மன்னார் ஆயர் வண. இராயப்பு யோசெப் தலைமையில் மன்னார் ஞானோதய மண்டபத்தில் நடைபெற்ற முக்கிய கூட்டம் நேற்றுக் காலை 10.00 மணியளவில் ஆரம்பமானது. சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை

19 ஆம் பக்கம் பார்க்க

## வாசனும் எதிர்ப்பு

(சென்னை)

பொதுநலவாய தலைவர்களின் மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாதென இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம். இலங்கையில் நடத்தினால் அதில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று வலியுறுத்துவோம் என தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளரொருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பின் பதிவு குறித்து தலைவரே தீர்மானிக்கவேண்டும்

### கையை விரித்தார் மன்னார் ஆயர்

(மன்னார்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதா அல்லது இல்லையா என்பதை கூட்டமைப்பின் தலைவரே முடிவெடுக்கவேண்டும். இதில் நான் தலையிடவேண்டிய அவசியம் இல்லை என மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் அரசியல் கட்சியாகப் பதிவுசெய்ய வேண்டும் என அதில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்த்து ஏனைய கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைக் களைய மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் முயற்சித்து வருகின்றார் எனத் தகவல்கள் வெளியாகின.

இது தொடர்பில் மன்னார் ஆயருடன் தொடர்புகொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு தொடர்பில் தங்கள் நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளர்கள் வினவினர். இதற்குப் பதிலளிக்கும்போதே மன்னார் ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் தேர்தலுக்கு முன் தேர்தல் சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

வடமாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக தேர்தல் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

கடந்த 1983 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரையில் வடக்கு வாக்காளர் இடாப்பில் பதிவு செய்து கொண்டவர்கள், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் வாக்களிக்கக்கூடிய வகையில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் மூலம் வாக்காளராக தங்களைப் பதிவு செய்து கொள்ளவும், வாக்களிக்கவும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. வேறு மாவட்டங்களில் தங்களை பதிவு செய்து கொள்ளாதவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான அமைச்சரவை

19 ஆம் பக்கம் பார்க்க

## பால்மாவின் விலையில் விரைவில் அதிகரிப்பு?

(கொழும்பு)

400 கிராம் பால்மா பைக்கற்றின் விலை 40 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாக பால்மா உற்பத்தி நிறுவனங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலக சந்தையில் பால்மாவின் விலை அதிகரித்துள்ளமையும் டொலரின் பெறுமதிக்கேற்ப ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளமையுமே இந்த விலை அதிகரிப்புக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய சந்தைப் பெறுமதிக்கு பால்மாவை விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதால் இது தொடர்பில் பால்மா உற்பத்தி நிறுவனங்கள், நுகர்வோர் அதிகார சபையுடன் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு பால்மாவை ஏற்றுமதி செய்யும் அவுஸ்ரேலியா மற்றும் நியூஸிலாந்து

19 ஆம் பக்கம் பார்க்க

## நான்கு நாள் பயணமாக உகண்டா சென்றார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நான்கு நாள் அதிகாரபூர்வ பயணமாக நேற்று முன்தினம் இரவு உகண்டாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது உகண்டா அதிபர் யொவேரி முசெவேனியுடன் இருதரப்புப் பேச்சுக்களை நடத்தவுள்ளதுடன், கொமன்வெல்த் உள்ளூராட்சி கருத்தரங்கையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

கம்பாலாவில் தங்கியிருக்கும் போது ஜனாதிபதி வர்த்தகக் கண்காட்சி ஒன்றை ஆரம்பித்து வைக்கவுள்ளதுடன், மசுலிடா தொழிற்பயிற்சி நிலையத்தையும், 1924 இல் ஆரம்பிக்கப்பட்டதும், அந்த நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கை வகிப்பதுமான உகண்டா சீனிக் கூட்டுத்தாபனத்தையும் பார்வையிடவுள்ளார்.

1972 ஆம் ஆண்டில் உகண்டாவுடன் இலங்கை இராஜதந்திர உறவுகளை ஆரம்பித்தது. இதன்பின்னர், உகண்டா அதிபர் மற்றும் பிரதமர் ஆகியோர் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தனர்.

எனினும் இலங்கை ஜனாதிபதி ஒருவர் உகண்டா செல்வது இதுவே முதல் முறையாகும்.



## தாமரைப்பூ பறிக்க முயன்றவர் குளத்தில் மூழ்கி உயிரிழந்தார்

(யாழ்ப்பாணம்)

இருபாலைப் பகுதியில் தாமரைக்குளம் ஒன்றில் தாமரைப்பூ பறிக்கச் சென்ற ஒருவர் குளத்தில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று நடைபெற்றுள்ளது.

இருபாலை கிழக்கு கோப்பாயைச் சேர்ந்த வீரகத்திப்பிள்ளை யோதிவர்மன்

19 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாணத் தேர்தலில் தமிழினியும் போட்டி?

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவின் - பெண்கள் பிரிவு முன்னாள் தலைவி தமிழினி, ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் முன்னணி சார்பாக வடமாகாண தேர்தல் களத்தில் குதிக்கவுள்ளார்.

தற்போது வன்னியில் புனர்வாழ்வு நிலையத்தில்உள்ள அவர் வெகுவிரைவில் விடுதலையாகவுள்ளதுடன், அவருக்கெதிராக நீதிமன்றில் பதிவுசெய்யப்பட்டுள்ள வழக்குகள் அனைத்திலிருந்தும் அவர் விடுதலை பெறவுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் சர்வதேச தலைவர் கே.பி யினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக உறுதியாகியுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

# ஹற்றன் நஷனல் வங்கியின் வடக்கு அலுவலகம் திறப்பு

## - நவீன வசதிகளுடன் மின்சாரநிலைய வீதியில் நிர்மாணம் -

(யாழ்ப்பாணம்)

யாழ்.மின்சார நிலைய வீதியில் 400 மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியின் வட மாகாணக் காரியாலயம் நேற்று முற்பகல் வைபவரீதியாக திறந்துவைக்கப்பட்டதுடன், வியாபார நடவடிக்கைகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 10.45 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் ஹற்றன் நஷனல் வங்கியின் பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர் யோனதன் அனஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு காரியாலயக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

பலமாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடத்தில் யாழ்.வைத்தியசாலை வீதியில் இயங்கி வந்த ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை, ஸ்ரான்லி வீதியில் இயங்கிவந்த வங்கிக்கிளை, வடமாகாணத்திற்கான தலைமை அலுவலகம் என்பன இயங்கவுள்ளன. அத்துடன் இந்தக் கட்டடத்தில் உள்ள 260 இருக்கைகளைச் கொண்ட பார்வையாளர் அரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அது விரைவில் பொது மக்களின் பாவனைக்கு (வாடகைக்கு) விடப்படவுள்ளதாகவும் பொது முகாமையார் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு கடன் பத்திரங்களை வங்கியின் பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர் யோனதன் அனஸ் வழங்கிவைத்துடன் முதலாவது பணவைப்பையும் வாடிக்கையாளர் ஒருவரிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் ஹற்றன் நஷனல் வங்கியின் வடமாகாணக் கிளையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வணிகர்கள், கல்விமான்கள், வாடிக்கையாளர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

(பா)



# தாய், மகன் முதியோர் இல்லத்தில்; ஒருவரை ஒருவர் காணாத அதிசயம்

(திருநெல்வேலி)

வயோதிபத் தாயும், வயோதிப மகனும் கைதடி முதியோர் இல்லத்தில் சமகாலத்தில் தங்கியிருந்தபோதும் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளாத நிலையில் சில மாதங்கள் இருந்துள்ள அதிசயம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கனகசபை பார்வதி என்னும் தாயார் பத்து வருடங்களாகவும், கனகசபை சின்னத்தம்பி (வயது 65), மூன்று மாதங்களும் முதியோர் இல்லத்தில் தங்கினர். தாயாரைத்தேடிப் பல இடங்களிலும் அலைந்த மகன் இயலாத நிலையில் மூன்று மாதங்கள் இல்லத்தில் இருந்தார்.

இருந்தும் தாய்ப்பாசத்தால் உறுத்தப்பட்ட அவர் இல்லத்தை விட்டு விலகிச் சென்று பல இடங்களிலும் தாயாரைத் தேடி அலைந்தார். இடையில் ஒருநாள் இவரைக் கண்ட இவரது உறவினர் ஒருவர் இவரது தாயாரும் கைதடி முதியோர் இல்லத்தில் இருப்பதைத் தெரிவித்தபோது மீண்டும் இல்லத்திற்கு விரைந்து வந்த மகன் தாயாரைக் கண்டு கட்டிப்பிடித்து முத்தமிட்டு பல காலத்திற்குப் பிறகு ஒன்று சேர்ந்ததைக் கூறி மனம் மகிழ்ந்தார்.

பின்னர் மீதமிருக்கும் உறவினர்களைத்தேடி வருவதாக மகன் கூறிச் சென்றார். அதற்கு கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் தனது 100 ஆவது வயதில் தாயார் இயற்கை மரணம் எய்தினார்.

மகனுக்குச் சொல்லி அனுப்பப்பட்டது. இருந்தும் அவர் காலதாமதமாக வந்ததினால் தாயாரின் உடலை அவரால் தரிசிக்க முடியவில்லை. இல்ல அத்தியட்சகர், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் முதியோரினால உரிய மரியாதையுடன் உடல் அடக்கம் செய்யப்பட்டுவிட்டது.

(137)

# மணியந்தோட்டம் கர்த்தரின் விண்ணேற்றப்பெருவிழா இன்று

(மணியந்தோட்டம்)

மணியந்தோட்டம் கர்த்தர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின் இறுதிநாள் விழாவான விண்ணேற்றப்பெருவிழா இன்று காலை 6.30 மணிக்கு திருப்பலி பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

யுத்த சூழலில் அழிவுகளுக்குள்ளாகிய இந்த ஆலயச் சூழலில் அமைக்கப்பட்ட தற்காலிக மண்டபத்தில் இந்த ஆலய பங்குமக்கள் தமது பூசை வழிபாடுகளை நிகழ்த்திவரும் சூழ்நிலையிலேயே இந்த வருடதிற்கான திருவிழா நடைபெற்று இன்று விண்ணேற்றப்பெருவிழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(பா)

# விதி முறைகள் மீறப்படுவதே விபத்துக்கள் அதிகரிக்கக் காரணம்

## - பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பொது மக்கள் அதிகளவில் வீதி போக்குவரத்து நடைமுறைகளை பின்பற்றாத நிலைமையே யாழ்மாவட்டத்தில் இடம்பெறும் வீதி விபத்துக்களுக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது.

இத்தகைய நிலைமையில் இருந்து பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் வகையில் போக்குவரத்து சம்பந்தமான ஆவணப் படங்களை பாடசாலைகள் சனசமூக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் காண்பிப்பதுடன் கொழும்பில் இருந்து வரவழைக்கப்படும் போக்குவரத்துப் பொலிஸாரின் விசேட அனுபவங்களுடன் பொது மக்களுக்கு விழிப்பணர்வுக் கருத்தரங்குகளையும் நடத்த யாழ்.பொலிஸாரால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனால் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வீதி விபததுக்களை கட்டுப்படுத்த விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என காங்கேசன்துறை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். மஹிந்த ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.





யாழ்.முகாமையாளர் நிறுவனத்தின் 'குரல்கள் ஊடாக மாற்றம்' என்னும் ஆய்வு நூல் நேற்று மாலை 5 மணிக்கு யாழ்.யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் வெளியிடப்பட்டது. யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் நூலை வெளியிட்டு வைப்பதனையும், நிகழ்வில் கலந்து கெண்டவர்களையும் காணலாம்.

# வெளிவந்தது "உயிர் எழுத்து"

(முழங்காவில்)

முழங்காவில் அன்புபுரத்தில் 'உயிர் உழுத்து' என்னும் குறும்படம் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

அன்புபுரம் கடற்தொழிலாளர் சங்கத்தில் நேற்று முனதின்ம் நண்பகல் இக்குறும்திரைப்படம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

உள்ளூர் கலைஞர் கே.ஜி. கண்ணதாஸனின் உருவாக்கத்தில் கடற்தொழிலாளர்கள் வழங்கிய நிதியிலிருந்து இப்படம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மாகாணமட்டப்போட்டிக்கும் தெரிவாகியுள்ளது.

'கல்வியே வாழ்க்கைக்கு தேவை' என்னும் விடயத்தை உள்ளடக்கிய இக்குறும்படத்தை பூநகரி பிரதேச செயலர் வசந்தகுமார் வெளியிட்டுவைத்தார்.

(09)

# வசமாக மாட்டினர் சைக்கிள் திருடர்கள்

(அச்சுவேலி)

அச்சுவேலி மக்கள் வங்கிக்கு முன்னால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள்களைத் திருடியவர்களை பொலிஸார் கையும் மெய்யுமாகப்பிடித்துள்ளனர்.

இதன் போது இரண்டு சந்தேக நபர்களை கைது செய்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வளளாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பாகபொலிஸார் தெரிவிக்கையில், பிடிபட்ட சந்தேகநபர் ஒருவரை விசாரணை செய்தபோது தாங்கள் இருவரும் இதுவரை நீர் இறைக்கும் நான்கு, ஒருநீர் இறைக்கும் பம்பி, மூன்று சைக்கிளினையும் திருடியதாக ஒப்புக்கொண்டுள்ளதை அடுத்து இவர்கள் இருவரையும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

(15)


## சிறுவிளம்பரங்கள்

### வீடு விற்பனை

நல்ல சுற்றாடலில் ஒரு காணியிலுள்ள சகல வசதிகளும் கொண்ட இரண்டு வீடுகள் தனித்தனியாகவோ, ஒன்றாகவோ விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம்: காலை 12 மணிவரையும், மாலை 3 மணிவரையும்.

தொடர்பு: க.சீவறட்ணம் (சிவராசா), றியிஸ்ரார் சம்பந்தர் லேன், சுதுமலை (R/181)

### வைத்தியர் தேவை

ஆயுர்வேத வைத்தியர் தேவை. பதிவுபெற்றவராக இருதல் வேண்டும்.

தொடர்பு: க.சீவறட்ணம் சிவராசா, சம்பந்தர் லேன், சுதுமலை தெற்கு. (R/181)


# வலிகாமம் கல்வி வலயத்தில் சிங்கள தினப்போட்டிகள்

சிங்கள தினப் போட்டி வலிகாமம் கல்வி வலயத்தில் முதல் தடவையாக பெரும் எடுப்பில் அதிகளவான மாணவர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்று முடிவடைந்துள்ளது.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு இடையே இரண்டு நாட்கள் இடம்பெற்ற போட்டியில், சுமார் ஆயிரத்தி அறுநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டதாக வலிகாமம் கல்வி வலய சிங்கள பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி சயந்தன் சிவசக்தி தெரிவித்தார்.

ஆரம்பப் பிரிவில் ஐம்பத்தி நான்கு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்தி இருநூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களும் இடைநிலை மற்றும் மேற்பிரிவுகளில் இருபது பாடசாலைகளைச் சேர்ந்த முன்நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களும் கலந்து கொண்டுள்ளார்கள்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் கடந்த இரண்டு நாட்களாக இடம்பெற்ற ஆசிரிய சிங்கள வளவாளர்களுடன் ஏனைய மாவட்டங்களில் உள்ள ஆசிரிய சிங்கள வளவாளர்களும் இணைக்கப்பட்டு மத்தியஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டு போட்டி இடம் பெற்றது.

போட்டியில் 'எழுத்தாக்கம், பேச்சு, கட்டுரை, நாடகம், குழுப் பாடல் என பல நிகழ்வுகளும் இடம்பெற்றன்.

# உலக அன்னையர் தினம்

(ஆனைக்கோட்டை)

நவாலி ஊன்றுகோல் அறம் பணியகம் நடாத்தும் உலக அன்னையர் தின நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

மாலை 2.30 மணியளவில் நவாலி முருகானந்த சனசமூக நிலையத்தில் ஆரம்பமாகவிருக்கும் இந்த நிகழ்விற்கு லயன் வை.கமலநாதன் தலைமை தாங்குவார்.

(104)

# அடிப்படைத்தேவைகள் இன்னும் பூர்த்தியாக வில்லை

நாகர்கோவில் கிராமத்தைக் கட்டியெழுப்ப தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முன்வரவேண்டும். நாகர்கோவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளது எனக்கூறப்பட்டாலும் அதன் உட்கட்டுமானப்பணிகள் இன்னும் முழுமையடைய வில்லை என பருத்தித்துறை பிரதேசசபையின் எதிர்க்கட் சித்தலைவரும், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி இணைப்பாளருமான ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

லீட்ஸ் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபம் கிராம நிர்வாகத்திடம் கையளிக்கும் வைபவம் நேற்றுமுன்தினம் கிராமசேவையாளர் செபமாலை யூட் தலைமையில் நாகர்கோவிலில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மூன்றாம் கட்டமாக மீள் குடியேற்றம் செய்யப்பட்ட நாகர் கோவில் பிரதேசம் எனக் கூறப்பட்டாலும் நாகர்கோவில் மேற்கு, நாகர்கோவில் கிழக்குப் பிரிவின் ஒரு பகுதி மட்டுமே மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளில் மிதி வெடிகள் அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. மீள்குடியேறிய மக்களுக்கு லீட்ஸ் நிறுவனத்தின் ஊடாக ஏற்கனவே 30 கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது இப்பிரதேச மாணவர்களின் மாலை நேர வகுப்புகளுக்கும் சமூகமட்ட அமைப்புக்களின் பயன்பாட் டிற்குமென சுமார் மூன்று இலட்சம் ரூபா செலவில் இப் பொது மண்டபம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அத்து டன் மாதர் சங்கத் தின் வளர்ச்சிக்கென 75 கதிரைகளும் மற்றும் நாகர்கோவில் மேற்கு கடற்தொழிலாளர் சங்கத்திற்கு மேசைகள், அலுமாரிகள் வழங்கப்பட்டுள்ளன.

எமது கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நாகர்கோவில் கிராமத்திற்கு வருகை தந்தபோது இங்குள்ள அமைப்புக்களின் கோரிக் கைக்கு இணங்க நாகர்கோவில் மகாவித்தியாலயத்திற்கு மற்றொரு வகுப்பறை கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. அதனை அடுத்த வாரம் பாடசாலை அதிபரிடம் கையளிக்கவுள்ளோம். இப்பகுதி மக்களுக்கு அமைச்சரின் ஏற்பாட்டில் மீள்குடியேறிய 35 குடும்பங்களுக்கு மலசலகூடம் வழங்குவதற்கு நடவடிக் கை எடுக்கப்பட்டுள்ளது. எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் லீட்ஸ் நிறுவனத்தின் உத்தியோகத்தர் திரு குகதாஸ் இந்திரன், மருதங்கேணி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திரு.எஸ்.கணேசமூர்த்தி, நாகர்கோவில் மகா வித்தியாலய அதிபர் திரு இரத்தினசபாபதி சிவசங்கர், நாகர்கோவில் மேற்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கத் தலைவர் ஜோசப் ஜோன்சன், சமயப்பெரியவர்கள் கலந்து கொண்டனர்.



## கிளினிக் சிகிச்சையினை இரு நாட்கள் நடத்தக்கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரதி திங்கட்கிழமைகளில் நடைபெறும் காது, மூக்கு, தொண்டை கிளினிக் சேவைகள் வாரத்தில் 2 நாட்கள் நடத்துமாறு நோயாளர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் காது, மூக்கு, தொண்டை கிளினிக் சேவை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

பிரதி திங்கட்கிழமைதோறும் பிற்பகல் 1 மணிக்கு இக்கிளினிக் நடைபெறும் எனவும், இதனையடுத்து தென்மராட்சியில் பல பாகங்களிலிருந்து மட்டுமல்லாது தூர இடங்களான பூநகரி, வடமராட்சியில் சில பகுதிகள் மற்றும் பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களிலிருந்தும் 100 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் கிளினிக்கில் கலந்து கொள்கின்றனர். (11)

## இன்று அக்ஷய திருதியைக் கொண்டாடுவோம்

காசியில் நித்ய வாசம் செய்யும் அன்னபூர்னேஷ்வரி தேவி, தாம் தான் அன்ன அரசி என்று, சிறு கர்வம் கொண்டாள்.

அந்த எண்ணத்தைப்போக்குவதற்கு, சிவபெருமான் ஒரு சிவயோகியாக தோற்றம் கொண்டு அன்னபூர்னேஷ்வரி மாளிகைக்கு வந்து, "தாயே பசி என்று கூச்சல் போட, அதை செவிக்கொண்டு அன்னபூரணி தேவி, இலையிட்டு தன்னால் இயன்ற வஸ்துக்கள் அனைத்தையும் பரிமாற, சிவ யோகியோ, இன்னும் இன்னும் என்று அனைத்தையும் உட்கொண்டு கொண்டே இருந்தார்.

வஸ்துக்கள் அனைத்தும் பூர்த்தியாக, அன்னபூரணி தேவிக்கு, என்னசெய்வதென்று புரியவில்லை. உடனே, காசியில் பிந்து மாதவன் என்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்ற, தன்னுடைய அண்ணனாகிய மஹா விஷ்ணுவிடம் பிரார்த்தித்து அழைத்தாள். மஹாவிஷ்ணுவாகிய பிந்து மாதவன், ஒரு அந்தணர் கோலத்தில் வந்தார்.

அன்னம் தயார் செய்யும் இடத்திற்கு சென்றார். அங்கு, அன்னம் தயார் செய்த பாத்திரங்கள் அனைத்தும் சுத்தம் செய்து வைக்கபட்டிருந்தது.

அன்ன பூரணி தேவி நடந்த விஷயங்களைக் கூற, அதைக் கேட்ட மஹாவிஷ்ணு, சுத்தம் செய்து வைக்கபட்டிருந்த பாத்திரத்தின் ஒரு ஓரத்தில் இருந்த பருக்கை அன்னத்தை, அக்ஷயம் என்று சொல்லிக்கொண்டு அவர்தம் தன் திரு வாயால் உட்கொண்டார்.

உடனடியாக, சங்கல்ப மாத்திரத்தால் [பகவத் அனுக்ரகஹத்தால்] அன்ன வகைகள்



அனைத்தும் தோன்றின. அன்னபூரணி தேவி அந்த சிவயோகிக்கு அருகில் இலையிட்டு மஹா விஷ்ணுவை அமர்த்தினார். மஹா விஷ்ணுவோ, உட்கார்ந்த சிறிது நேரத்தில் திருப்தி என்று கூறி எழுந்து விட்டார்.

தமக்கு அருகில் உண்பவர் எழுந்து விட்டால் தாமும் எழ வேண்டும் என்ற முறையைப் பின்பற்றியாக வேண்டிய கட்டாயத்தினால், சிவயோகியும் தமக்கு திருப்தி என்று எழுந்து விட்டார். அன்ன பூரணி தேவி அந்த சிவயோகியை வணங்க, சிவ–யோகி சிவனாகவே காட்சியளித்தார். "உமைக்கு ஏற்பட்ட கர்வம் கொண்ட எண்ணத்தை மாற்றுவதற்கே தாம் இங்கு வந்தோம்", எனக் கூறினார்.

உடனே, மஹா விஷ்ணு, "இன்றைய தினம் எவர் ஒருவர் நல்ல காரியங்களை தொடங்குகிறார்களோ, அது இனிதே வளரும்", என்று ஆசிர்வதித்தார். அன்று முதல் சித்தரை மாதம், சுக்ல பக்ஷ திரிதியை அக்ஷய திதியைத் திருநாளாக கொண்டாடுகின்றோம்.........










ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை. - ஆபிரகாம் லிங்கன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## அன்னையின் மலர்ப் பாதத்தில்!

ஒவ்வொரு வருடமும் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமையை அன்னையர் தினமாக – Mother's day, பெரும்பாலான நாடுகளில் கொண்டாடப்படுகின்றது. கடவுள் எல்லா இடங்களிலும் இருக்க முடியாததால் தாயைப் படைத்தார் என்று ஒரு யூதப் பழமொழி கூறுகிறது. தாயிற் சிறந்த கோவிலுமில்லை என்னும் தமிழ்ப் பழமொழியும் இதே கருத்தில் அமைந்ததுதான்.

வருடம் தோறும் வரும் சித்திரைப் பூரணையில் இறந்து போன தாயை விரதமிருந்து நினைவு கூரும் வழக்கம் தமிழ் இந்துக்களிடம் உள்ளது.

பண்டைய எகிப்தியர் தான் அநேகமாக உலகில் முதல் அன்னையர் தினத்தைக் கொண்டாடியவர்கள் எனலாம். இவர்கள் ஐஸிஸ் என்ற பெண் கடவுளை மேன்மைப்படுத்தும் வகையில் இந்நாளைக் கொண்டாடினர். ஐஸிஸ் இயற்கை அன்னையாக போற்றப்பட்ட தெய்வம். இந்தப் பெண் தெய்வமானது அடிமைகளுக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும், நோய்வாய்ப்பட்டோருக்கும், சிநேகமானவளாயும், ஏழை எளியோரின் பிரரர்த்தனைகளை செவிமடுப்பவளாயும் நம்பப்பட்ட தெய்வமாகும்.

இந்த எகிப்திய விழாவை ரோமானியர்களும் கொண்டாடினர். பின்னாளில் ரோமானியர்களின் பிரத்தியேக தெய்வமான ஸீயுஸ் (Zeus) உட்பட பல தெய்வங்களுக்கும் சிரேஷ்ட தாயாக வணங்கப்பட்ட ரெஹா (Rhea) என்ற பெண் தெய்வத்தை அன்னையர் தினமாக மூன்று நாள் கொண்டாட்டமாக கொண்டாடி வந்தார்களாம். இதே போல் கிரேக்கத்தின் பல பெண் தெய்வங்களுக்கும், ஆசியாவின் பெண் தெய்வங்களுக்கும் இத்தகைய விழாக்கள் கொண்டாடப்பட்டு வந்திருக்கின்றன.

உலகளாவிய அன்னையர் தினம் கொண்டாடப்படுதல் ஆரம்பமானது அமெரிக்காவில். 1908–இல் அமெரிக்காவைச் சேர்ந்த அன்னா என்பவர், தனது தாயாரான ரீஸ் ஜார்விஸ் நினைவாக "தாயார் நட்பு தினம்" என்று ஒரு தினத்தைக் கொண்டாட ஒரு குழுவை அமைத்தார். 1912 டிசம்பரில் "அன்னையர் தின சர்வதேச சங்கம்" நிறுவப்பட்டது. மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையை தாய்க்குரிய நாளாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை, 1914 மே 8–இல் அமெரிக்க காங்கிரஸ் நிறைவேற்றியது.

அதன்பின் எல்லா நாடுகளிலும் இந்த தாய்க்குரிய நாள் கொண்டாட்டங்கள் பிரபலம் அடைந்தன. அந்த நாளை தாயுடன் தொடர்பு கொண்டு நன்றி தெரிவிப்பதற்கான நாளாக அனைவரும் ஏற்றுக் கொண்டனர். தாயன்பின் சிறப்பைக் காட்ட எத்தனையோ கதைகள் உண்டு. அவற்றுள் சிறப்பான ஒரு நாடோடிக் கதை இது:

ஒருவன் ஒரு பெண்ணை மிக அதிகமாகக் காதலித்தான். ஆனால் அவள் மிகக் கொடுமையான மனம் கொண்டவள். எனவே, தான் அவனைத் திருமணம் செய்வதானால் அவன் தனது தாயின் இதயத்தைப் பரிசாகத் தரவேண்டும் என்ற ஒரு கொடிய வேண்டுகோளை இதயமே அற்றவளாகக் கேட்டாள். அவனுடைய கண்களை காதல் முற்றாக மறைத்திருந்தது. அவன் அவளது கோரிக்கைக்குச் சம்மதித்து தனது தாயைக் கொன்று அவளது இதயத்தை ஒரு தட்டில் வைத்து காதலிக்குத் தருவதற்காக எடுத்து வந்தான். வரும் வழியில் அவன் கல் தடுக்கி ஓரிடத்தில் விழுந்து விட்டான். அப்போது அந்தத் தட்டில் இருந்த தாயின் இதயம் கேட்டதாம் "மகனே நோகிறதா?"

வானுலகு சென்று திரும்பிய நபித்தூதர் சொன்னார்: சொர்க்கம் விண்ணில் இல்லை; அது இருப்பது அன்னையின் மலர்ப் பாதத்தில்!

- ஆசிரியர்

# யுத்த வடுக்களை மறக்க நினைக்கிறோம்

## அவலத்தை ஞாபகமூட்டுகிறது அரசு என்கிறார் மனோ

(கொழும்பு)

யுத்த அவலங்களை மறந்து விடவேண்டும் என்று நினைக்கிறோம் ஆனால் அரசு அதை வருடா வருடம் நினைவூட்டுகிறது என்றும் ஏறக்குறைய ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட சொந்த நாட்டு மக்களின் மரணத்துக்கு காரணமாக அமைந்த உள்நாட்டு யுத்தத்தில் கிடைத்த வெற்றியை மாபெரும் தேசிய வெற்றி விழாவாக கொண்டாடும் ஒரே நாடு உலகத்தில் இலங்கை மட்டும்தான் என்றும் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்டை நாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராக யுத்தம் செய்து பெற்ற வெற்றியை போன்று உள்நாட்டு யுத்த வெற்றியை கொண்டாடுபவர்கள், இந்த யுத்த வெற்றியின் பின்னால் மறைந்து நிற்கும் மனதை கொல்லும் சோகத்தை அங்கீகரிக்க மறுக்கின்றார்கள். அதனால் யுத்தத்தில் தமது உறவுகளை இழந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்கள், உயிரிழந்த தமது அந்த உறவுகளை நினைவு கூறுவதற்கும் உரிமைகளை இழந்து நிற்கிறார்கள். இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து யுத்தம் நடத்திவிட்டு, இவ்வாரம் கொழும்பில் நடைபெறும் வெற்றி விழாவிலும் கலந்து கொள்ளும் இந்தியா, அமெரிக்கா மற்றும் உலக நாட்டு அரசாங்க பிரதிநிதிகள் இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் முடிவுக்கு வந்த யுத்தத்தை நாங்கள் மறக்க நினைக்கின்றோம். ஆனால் அதை வருடா வருடம் ஞாபகப்படுத்தி இந்த அரசாங்கம் அரசியல் செய்கிறது.

யுத்தம் நடத்தியவர்களது கோணத்தில் பார்த்தாலும்கூட, யுத்தத்தை நடத்திய அன்றைய இராணுவ தலைமை தளபதி சரத் பொன்சேகாவுக்கு, இந்த வெற்றி விழாவில் இடமில்லை. இதன்மூலம் இந்த வெற்றி விழாவை இந்த அரசாங்கம் தனது சொந்த வெற்றியாக அரசியல் இலாப கண்ணோட்டத்தில் நடத்துகின்றது என்பது தெளிவாகின்றது.

ஆகவே தனது சொந்த அரசியல் நோக்கங்களுக்காக யுத்தத்தில் தங்கள் இன்னுயிரை இழந்த ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட அப்பாவி தமிழ் மக்களின் நினைவுகளை இந்த அரசாங்கம் துச்சமாக நினைக்கின்றதும் தெளிவாகின்றது.

அதேபோல் இவர்கள் வெற்றிவிழா கொண்டாடும் அதே வேளையில் தங்கள் உறவுகளை இழந்து வாழ்பவர்களுக்கு, இறந்து போனவர்களை நினைத்து நிகழ்வுகள் நடத்தவும் உரிமை மறுக்கப்படுகின்றது. இதன்மூலம் இந்த அரசாங்கம் இறந்து போனவர்களை அவமரியாதை செய்கின்றதும் தெளிவாகின்றது.

இந்த பின்னணியில் இந்த அரசாங்கம் நடத்தும் யுத்த வெற்றி விழாவில் கலந்து கொண்டு, இந்த விழாவுக்கு அங்கீகாரம் தந்து சிறப்பிக்க போகும் தமிழ், முஸ்லிம், சிங்கள அரசியல்வாதிகள் யார் என்பதையும், சர்வதேச சமூக பிரதிநிதிகள் யார் என்பதையும் இலங்கை வாழ் தமிழ்மக்களும், நல்லெண்ணம் கொண் அனைத்து மக்களும் எதிர்நோக்கி இருக்கின்றார்கள் என்று அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவர் பாதுகாப்பு பொறிமுறை செயல் இழந்து போனதா?

## – ஆபத்தான சூழலில் இருந்து இருவர் மீட்பு –

(கொழும்பு)

சிறுவர் உரிமைபேணும் பொறிமுறைகள் அனைத்தினதும் கண்களில் தென்படாமல் பாதுகாப்பு எதுவும் அற்ற சூழலில் வாழ்ந்து வந்த இரு சிறுவர்கள் மீட்கப்பட்டிருக்கின்றனர்.

எவரது உதவியுமின்றி வீட்டில் தனித்து வாழ்ந்து வந்த 9 வயது மற்றும் 6 வயதுள்ள இரு சகோதரர்களை பொலிஸாரும் சிறுவர் பராமரிப்பு பணியகமும் மீட்டெடுத்த சம்பவமொன்று பதுளை, வினீதகம பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச்சிறுவர்களின் தாய் கொழும்பு வைத்திய சாலை ஒன்றில் சிற்றூழியராக பணியாற்றி வருகின்றார். தந்தை தொடர்பில் தகவல்கள் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

9 வயதான சிறுவன், விடியற்காலை 5 மணிக்கு எழுந்து 6 வயதான தனது சகோதரருக்காக உணவு சமைத்து பரிமாறிவிட்டு தானும் உண்டு, பின்னர், சுமார் ஒன்றரை மைல் தொலைவில் அமைந்துள்ள பாடசாலைக்கு செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது. அடுப்பைப் பற்றவைப்பதற்குக்கூட உயரமற்ற மேற்படி சிறுவன், சிறு கதிரையொன்றை வைத்து, அதன் மீதேறி அடுப்பைப் பற்றவைத்தே உணவு சமைத்து வந்துள்ளார்.

இவர்களின் தாய், தனது பிள்ளைகளுடன் இருப்பதற்காக பதுளைக்கு இடமாற்றம் கோரியிருந்த போதிலும் அதற்கான அனுமதி கிடைக்காத நிலையில், இரண்டு மாதங்களுக்கு ஒ[illegible] முறை கொழும்பிலிருந்து பதுளைக்குச் செல்லும் அவர், பிள்ளைகளுக்கு தேவையான உணவு மற்றும் ஏனைய பொருட்களை வாங்கி வைத்து விட்டு மீண்டும் கொழும்புக்குத் திரும்புவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சிறுவர்கள் தொடர்பில் அயலவர்கள் பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார், அச்சிறுவர்களின் பாதுகாப்பு கருதி அவர்களை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளதுடன் நீதிமன்றத்திலும் ஆஜர்ப்படுத்தியுள்ளனர். இச்சிறுவர்கள் இருவரையும் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் விடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கஷ்டப்பிரதேசத்தில் 5 வருடங்கள் சேவையாற்றினால் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

குறைந்தது ஐந்து வருடங்களாவது கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் சேவையாற்றியவர்களுக்கே இடமாற்றத்தின் போது முன்னுரிமை வழங்கப்படும் என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்தார்.

பூநகரிக் கோட்டத்தில் கடமையாற்றும் மூன்று ஆசிரியர்கள், குறிக்கப்பட்ட நிபந்தனையாகிய ஐந்து வருட கஸ்டப் பிரதேச சேவையை பூர்த்தி செய்யாத காரணத்தினால் அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை எனவும் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்தார். கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பூநகரிக் கோட்டத்தில் கடமையாற்றும் மூன்று ஆசிரியர்கள் கடந்த வருடம் தமக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை என உச்ச நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது தொடர்பாக கேட்டபோது இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் 2012ஆம் ஆண்டு இடமாற்றத்திற்கு தகுதியுடையவர்களுக்கு சில நிபந்தனைகள் வழங்கப்பட்டன. அந்நிபந்தனைகளாக கஸ்டப் பிரதேசத்தில் ஐந்து வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். அல்லது வசதியான பிரதேசமாக இருந்தால் ஆறு வருடங்களை வன்னிப் பிரதேசத்தில் பூர்த்தி செய்திருக்க வேண்டும். இவை இரண்டையும் பூர்த்தி செய்யாத காரணத்தினால் வழக்குத்தாக்கல் செய்த மூன்று ஆசிரியர்களுக்கும் கடந்த வருடம் இடமாற்றம் வழங்கப்படவில்லை என செயலாளர் எஸ். சத்தியசீலன் மேலும் தெரிவித்தார். குறித்த ஆசிரியர்கள், வடமாகாண ஆளுநர், வடமாகர்ண கல்வி அமைச்சு மற்றும் வடமாகாண கல்விப் பணிப்பாளர், இடமாற்ற சபைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வழக்குத்தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கூட்டமைப்பின் எதிர்ப்பு அரசியல் தமிழ் மக்களுக்கு விரோதமானது

> கூட்டமைப்புத் தலைவர்கள் என்னதான் கூறினாலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வருவதை அவர்கள் விரும்பவில்லை என்பதே அவர்களின் எல்லா முடிவுகளுக்குமான உண்மைக் காரணம். கூட்டமைப்பின் நான்கு வருட செயற்பாடுகளைக் கூர்ந்து நோக்கினால் இந்த உண்மை பளிச்செனத் தெரியும். கடந்த நான்கு வருடங்களில் ஒரு தடவையாவது கூட்டமைப்புத் தலைமை மட்டத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய விவாதம் இடம்பெறவில்லை. அரசியல் தீர்வுக்கான கொள்கைத் திட்டமொன்றைத் தயாரித்து வெளியிடக் கூட்டமைப்பு பிடிவாதமாக மறுத்து வருகின்றது. அரசாங்கத்துடன் அரசியல் தீர்வு பற்றிப் பேச விரும்பவில்லை. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிக்கின்றார்கள். இவை எல்லாம் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை என்பதையே காட்டுகின்றன.



■ சங்கர சிவன்

**தமிழ்த்** தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகளை விமர்சனத்துக்கு உள்ளாக்குவதானால் புலிகளின் முள்ளிவாய்க்கால் தோல்விக்குப் பிந்திய காலத்தையே கவனத்தில் கொள்ளவேண்டும். அதற்கு முந்திய காலத்தில் இவர்கள் புலிகளின் செயலாணைக்குக் கட்டுப்பட்டவர்களாகப் புலிகளின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துபவர்களாகவே இருந்தனர்.

முள்ளிவாய்க்கால் தோல்விக்குப் பிந்திய நான்கு வருட காலத்தில் தமிழ் மக்களுக்காகச் சாதித்தது என்ன என்ற கேள்விக்கு இவர்களிடம் திருப்திகரமான பதில் இல்லை. தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் எந்தப் பிரச்சினைக்கும் இவர்களால் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. குறைந்த பட்சம் பிரதேச அபிவிருத்தியிலும் இவர்கள் கவனம் செலுத்தவில்லை.

தமிழ் மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள். இவை எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருப்பது இனப்பிரச்சினை. எனவே, தமிழ் மக்களின் அரசியல் தலைமை இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முன்னுரிமை அளித்துச் செயற்படக் கடமைப்பட்டுள்ளது. இனப்பிரச்சினை தீர்க்கப்படும் பட்சத்தில் மற்றைய பிரச்சினைகளுக்கு இடமிருக்காது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு கடையில் ஏதாவது சாமான் வாங்குவதைப் போல் இலகுவானதல்ல. இதில் இரண்டு பிரதான விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒன்று நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறை. மற்றது பதவியிலுள்ள அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை. இரண்டு விடயங்களிலும் கூட்டமைப்புத் தலைவர்கள் எதிர்மறை நிலைப்பாட்டையே வெளிப்படுத்துகின்றார்கள்.

கடந்த காலங்களில் இரு தரப்பு அரசியல் தலைவர்களும் விட்ட தவறுகளின் விளைவாக இனப்பிரச்சினையின் தீர்வு முயற்சி சிக்கலான கட்டத்தை அடைந்திருக்கின்றது. முழுமை யான அரசியல் தீர்வை ஒரே தடவையில் பெறுவதற்கான சூழ்நிலை இப்போது இல்லை. உடனடியாகச் சாத்தியமான தீர்வை, அது குறைபாடுகள் உடையதாக இருப்பினும்,ஏற்றுக் கொண்டு காலத்துக்குக் காலம் மேலதிக அதிகாரங்களைப் பெற்றுப் படிப்படியாக முழுமையான தீர்வை அடைவதுதான் இன்றைய நிலையில் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறை. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி இந்த அணுகுமுறையைப் பின்பற்றுகின்றது. பதின்மூன்றாவது திருத்தத்தை ஏற்றுக் கொண்டு படிப்படியாக முன்னேறிச் செல்ல வேண்டும் எனக் கூறுகின்றது. கூட்டமைப்பு இவ்விடயத்தில் தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. படிப்படியாகவே அரசியல் தீர்வை அடைய வேண்டும் என்ற யதார்த்தத்தைக் கூட்டமைப்பு ஏற்கவில்லை.

இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் கூட்டமைப்பு விரும்பவில்லை. நொண்டிச்சாட்டுகள் கூறிப் பேச்சுவார்த்தையைத் தவிர்க்கின்றது. செயற்படத் தொடங்கி ஆறு மாதத்துக்குள் சிபார்சுகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்தெரிவுக் குழுவையும் நிராகரிக்கின்றார்கள். கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவொன்று இந்தியாவுக்குச் சென்று திரும்பியவுடன் தெரிவுக் குழு தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்த கருத்து முக்கியமான கவனத்துக்குரியது. ஏற்கனவே, வழங்கப்பட்ட உரிமைகள் மற்றும் அதிகாரங்களைக் குறைப்பது பற்றிய கருத்தாடல் இடம்பெறாது என்ற உத்தரவாதத்தை அரசாங்கத்திடம் கோரவுள்ளோம் என்று அவர் கூறினார். பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் குறைப்பதில்லை என்ற உத்தரவாதம் கிடைத்தால் தெரிவுக் குழுவுக்குச் செல்லத்தயார் என்பதே இதன் அர்த்தம். ஆனால், கூட்டமைப்பு இந்த நிலைப்பாட்டில் தொடர்ந்து இருக்கவில்லை. தெரிவுக் குழுவுக்குச் செல்வதில்லை என்று முடிவு செய்தார்கள்.

கூட்டமைப்பின் இந்த முடிவுக்குப் பின்னால் ஏதோவொரு சக்தியின் அழுத்தம் இருப்பதாலேயே முதலில் எடுத்த முடிவை சில தினங்களுக்குள்ளேயே மாற்றினார்கள். தெரிவுக் குழுவுக்குச் செல்வதால் எந்தப் பலனும் இல்லை என்று கூறுவதன் மூலம் தங்கள் பிந்திய முடிவை நியாயப்படுத்த முயற்சிக்கின்றார்கள். தெரிவுக் குழுவுக்குப் போகாமலே எப்படி இவ்வாறு கூறலாம் என்பது அவர்களுக்குத்தான் வெளிச்சம்.

கூட்டமைப்புத் தலைவர்கள் என்னதான் கூறினாலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வருவதை அவர்கள் விரும்பவில்லை என்பதே அவர்களின் எல்லா முடிவுகளுக்குமான உண்மைக் காரணம். கூட்டமைப்பின் நான்கு வருட செயற்பாடுகளைக் கூர்ந்து நோக்கினால் இந்த உண்மை பளிச்செனத் தெரியும். கடந்த நான்கு வருடங்களில் ஒரு தடவைய்யாவது கூட்டமைப்புத் தலைமை மட்டத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய விவாதம் இடம்பெறவில்லை. அரசியல் தீர்வுக்கான கொள்கைத் திட்டமொன்றைத் தயாரித்து வெளியிடக் கூட்டமைப்பு பிடிவாதமாக மறுத்து வருகின்றது. அரசாங்கத்துடன் அரசியல் தீர்வு பற்றிப் பேச விரும்பவில்லை. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிக்கின்றார்கள்.

இவை எல்லாம் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை என்பதையே காட்டுகின்றன. இனப்பிரச்சினை தீர்க்கப்படாதிருக்கும் வரை தமிழ் மக்கள் பிரச்சினைகளுக்கு உட்பட்டவர்களாகவே வாழ வேண்டும். அப்படியான வாழ்க்கையைத் தமிழ் மக்களுக்குக் கூட்டமைப்பு கொடுப்பதற்கான காரணம் என்ன? தமிழ் மக்களுக்கு உள்ள பிரச்சினைகள் தான் கூட்டமைப்புத் தலைவர்களின் அரசியலுக்கு மூலதனம். இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தால் மற்றைய பிரச்சினைகள் தொடரப் போவதில்லை. தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் இல்லையென்றால் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு அரசியல் இல்லை. அரசியலில் தாங்கள் வாழ வேண்டும் என்பதற்காகத் தமிழ் மக்களைப் பிரச்சினைக்குள் தள்ளுகின்றார்கள். இது அப்பட்டமான சுயநல அரசியல். தமிழ் மக்களுக்கு விரோதமான அரசியல்.

இந்தப் பச்சைத் துரோகத்தைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக மக்களை வீதியில் இறக்கி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் சத்தியாக்கிரகமும் நடத்துகின்றார்கள். மக்களிடம் அரச எதிர்ப்பு உணர்வை வளர்த்து உசுப்பேற்றுகின்றார்கள்.

இந்த எதிர்ப்பு அரசியலால் மக்களுக்கு ஏதாவது பலன் உண்டா என்ற விடயத்துக்கு வருவதற்கு முன், இதன் மூலம் பலனடைபவர்கள் யார் என்பதைப் பார்ப்போம்.

ஆர்ப்பாட்டங்களின்போது உணர்ச்சிகரமாக நிகழ்த்தப்படும் உரைகளின் மூலம் அரச எதிர்ப்பு நிலைப்பாட்டுக்குள் தமிழ் மக்கள் கொண்டுவரப்படுகின்றனர். மக்களிடம் திணிக்கப்பட்ட அரச எதிர்ப்பு உணர்வுகளை வாக்குகளாக மாற்றும் கெட்டித்தனம் தமிழ்த் தலைவர்களுக்கு உண்டு. எதிர்ப்பு அரசியலால் மக்களுக்கு எந்த நன்மையும் இல்லாத போதிலும் தலைவர்கள் தங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைப் பாதுகாத்தும் கொள்கின்றார்கள். ஆக, எதிர்ப்பு அரசியலால் தலைவர்களே பயனடைகின்றார்கள்.

தமிழ்த் தலைவர்களின் எதிர்ப்பு அரசியலால் தமிழ் மக்களுக்கு ஒரு நன்மையும் கிடைக்கப்போவதில்லை. எதிர்ப்பு அரசியல் மூலம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாகுமென்றால் அதை நியாயப்படுத்தலாம். ஆனால், அந்த நிலை இங்கு இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் அமர்த்தும் இலக்குடனேயே கூட்டமைப்பு எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கின்றது. முதலாவதாக, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைப்பதற்கான சாத்தியக்கூறு அறவே இல்லை. இரண்டாவதாக இனப்பிரச்சினையைப் பொறுத்த வரையில் ஐக்கிய தேசியக் கட்சி பேரினவாத நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றது. பதின்மூன்றாவது திருத்தத்தை வெட்டிக் குறுக்கும் வகையில் திருத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை கூறியதை நாம் மறந்துவிடக்கூடாது.

எதிர்ப்பு அரசியல் மூலம் சாதகமான அரசாங்கமொன்றைப் பதவிக்குக் கொண்டு வருவது சாத்தியமில்லை என்பதைப் பார்த்தோம். இனப்பிரச்சினையின் நியாயமான தீர்வை ஆதரிக்கும் சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து எதிர்ப்பு அரசியலை முன்னெடுப்பதன் மூலம் அரசியல் தீர்வுக்குச் சாதகமான அணியொன்றைத் தென்னிலங்கையில் உருவாக்கலாமென்றால் அதையும் நியாயப்படுத்தலாம்.


அதற்குக் கூட்டமைப்பு தயாராக இல்லை. இடதுசாரி மற்றும் முற்போக்கு சக்திகளுடன் இணக்க அரசியலில் ஈடுபடுவதைக் கூட்டமைப்பு விரும்பவில்லை. எனவே, கூட்டமைப்பின் எதிர்ப்பு அரசியல் தமிழ் மக்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்தித் தாங்கள் பயனடையும் சுயநல நோக்கத்தைக் கொண்டது.

தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையையும் தர முடியாதது.

கூட்டமைப்பினரின் எதிர்ப்பு அரசியல் மூலம் தமிழ் மக்களுக்கு இதுவரையில் எந்த நன்மையும் கிடைக்கவில்லை.. இனியும் கிடைக்கப்போவதில்லை. இத்தலைவர்கள் இணக்க அரசியலைப் பின்பற்றுவார்களேயானால் தமிழ் மக்களுக்குச் சில நன்மைகளைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

கூட்டமைப்புத் தலைவர்கள் தங்கள் நலனை முன்னிலைப்படுத்துகின்றார்களேயொழிய மக்களின் நலனை முன்னிலைப்படுத்தவில்லை.

# கஜேந்திரகுமாருடன் கைகுலுக்க தயாராகிறாரா சம்பந்தன்?



(கொழும்பு)

வடக்கில் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை தம்முடன் இணைத்துக் கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது முயற்சித்து வருவதாக தெரிய வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென மட்டு அம்பாறை மாவட்ட புத்திஜீவிகள் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் திரு.கலையரசன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2001ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட காலத்தில் கூட்டமைப்பில் கஜேந்திரகுமார் அவர்களும் அங்கம் வகித்திருந்தமை யாவரும் அறிந்த விடயம் இருந்தும் இடையில் ஏற்பட்ட சில மனக்கசப்புக்கள் காரணமாக அவர்கள் கூட்டமைப் பில் இருந்து விலகியதுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற கட்சியையும் உருவாக்கி செயற்பட்டு வருகின்றனர்.

கூட்டமைப்பில் இருந்து இவர்கள் விலகியிருந்தாலும் இவர்களின் கொள்கைகள் தமிழ் மக்களின் நலன் சார்ந்ததாகவே உள்ளது. இவர்கள் எந்தக் கட்சியையும் சாராது கடந்த 2001ஆம் ஆண்டு நேரடியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தெரிவுசெய்யப்பட்டவர்கள் எனவே இவர்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்றும் தமிழ் மக்களின் உரிமைகளை அரசாங்கத்திடமிருந்து நாம் போராடிப் பெறவேண்டுமானால் தமிழ்க் கட்சிகள் அனைவரும் ஒன்றுபட்டு புரிந்துணர்வுடன் ஒரே குடையின் கீழ் அணி திரள வேண்டும் என்பதே மட்டு அம்பாறை தமிழர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்காக மன்னார் ஆயர் ஊடாக முயற்சிகள் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

## புதை குழி விசாரணை கிளம்புமா பூதம்?

(மாத்தளை)

மாத்தளை மனித புதைகுழி தொடர்பான விசாரணைகளை மாத்தளையிலேயே நடத்துமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளதுஇந்தச் சம்பவம் தொடர்பில், குடும்ப அங்கத்தவர்களால் முன்வைக்கப்பட்ட 11 சத்தியக் கடதாசிகளையும் பரிசீலித்த பின்னர் மாத்தளை நீதவான் ஷதுரிகா டி சில்வா இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

உறவினர்களால் முன்வைக்கப்பட்டிருக்கும் சத்தியக் கடதாசிகள் தொடர்பில், எதிர்வரும் 14ஆம் திகதி அவர்களிடம் வாக்குமூலங்களை பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

## மின்சாரம் தாக்கி சிறுமி மரணம்

(திருமலை)

திருகோணமலை - கந்தசுவாமி கோயில் வீதியில் வீட்டில் இருந்த சிறுமி மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். வீட்டில் மின்சார வயரொன்றை குறித்த சிறுமி பிடித்ததால் கடந்த வியாழன் மாலை இவ்வுயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. மூன்று வயதும் நான்கு மாதங்களும் நிரம்பிய சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# ஐரோப்பாவுக்கு தூது செல்கிறது பொது பல சேனா

## கோத்தாபயவின் முயற்சி பலிக்குமா?

(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்களுடன் பேசி இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் உன்னத முயற்சிக்காக பொதுபலசேனா அமைப்பினர் ஐரோப்பிய நாடுகளுக்கு தூது செல்லவுள்ளனர்.

புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காகவே, தாம் உள்ளிட்ட பிக்குகள், வெளிநாடு சென்றதாக பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தேச ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார். நோர்வே பிரஜை ஒருவரின் அழைப்பின் பேரில் இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டதாகவும் புலம் பெயர் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தமது அமைப்புக்கு பெரும் தேவை இருந்தது எனவும் அவர் கூறியுள்ளார்.


பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் முழுமையான அறிவுறுத்தல்களுடனேயே தமது அமைப்பின் பிக்குமார் அமெரிக்காவுக்கு சென்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கு வெளியில் நாட்டை நேசிக்கும் தேசப்பற்றாளர்கள் இருப்பதாகவும் துரதிஷ்டவசமாக அவர்கள் இலங்கை சமூகத்திற்குள் இல்லை எனவும் ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார். போரில் வெற்றியோ தோல்வியோ இல்லை என்பதால், தமிழ் சகோதரர்களுடன் இணைந்து நாட்டை அபிவிருத்தி செய்யும் தேவை தமக்கு இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். தற்போதைய அரசாங்கம் முதல் நாட்டில் ஆட்சி செய்த அரசாங்கங்கள் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியதாகவும் ஜெனிவாவுக்கு சென்றும் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகவும் அது ஜனநாயக உரிமை எனவும் தேரர் கூறியுள்ளார்.

நாட்டிற்கு தலைமை ஏற்றுள்ள சிவில் அமைப்பு என்ற வகையில், தமக்கு புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தும் உரிமை இருப்பதாக தெரிவித்துள்ள அவர், தாம் நோர்வே அரசாங்கத்திடம் இருந்து பணத்தைப் பெற்றுள்ளதாக கூறுவது எந்த அடிப்படையிலானது என்பதைத் தான் அறியவில்லை எனவும் ஞானசாரதேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சொத்துக் குவிப்பு குற்றச்சாட்டு உண்மையா?

## அறிக்கை சமர்ப்பித்தார் ஷிராணி




(கொழும்பு)

தமது சொத்துக்கள் தொடர்பில் எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் ஒன்பது பக்கங்கள் கொண்ட அறிக்கையொன்றை முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிடம் ஒப்படைத்துள்ளார்.

லஞ்ச ஊழல் ஆணைக்குழு விடுத்த எழுத்து மூல அறிவித்தலுக்கிணங்க திருமதி ஷிராணி பண்டாரநாயக்க நேற்று முன்தினம் சொத்துக்கள் அடங்கிய விபரங்களை தமது சட்டத்தரணிகள் சகிதம் சென்று ஆணைக்குழுவிடம் ஒப்படைத்தார். ஜனாதிபதி சட்டத்தரணி நளின் லத்துவஷெட்டி, மற்றும் சட்டத்தரணி சுகத் கல்தேரா ஆகியோருடன் லஞ்ச ஊழல் ஆணைக்குழு காரியாலயத்துக்குச் சென்ற திருமதி ஷிராணி பண்டாரநாயக்க 45 நிமிடங்களை ஆணைக் குழு காரியாலயத்தில் செலவிட்டுள்ளார்.

## கள்ள நோட்டுடன் சிறுவர்கள் கைது



ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள் கொடுத்து தொலைபேசிக் கட்டண மீள்நிரப்பு அட்டை வாங்கிய மூன்று சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ராகம - எட்கொரள பகுதியில் உள்ள கடை ஒன்றிற்குச் சென்ற இச்சிறுவர்கள் போலி நாணயத்தாளை் கொடுத்து தொலைபேசி கட்டண மீள்நிரப்பு அட்டை வாங்கியுள ளனர். இது குறித்து கடை உரிமையாளர் உடன் 119 என்ற பொலிஸ் அவசர அழைப்பு இலக்கத்திற்கு தகவல் தெரிவித்தார். இதனையடுத்து அங்கு விரைந்த ராகம பொலிஸார் சந்தேகநபர்களான 16 தொடக்கம் 18 வயதுடைய மூன்று சிறுவர்களைக் கைது செய்துள்ளனர். இவர்களுக்கு போலி நாணயத்தாள் எங்கிருந்து கிடைத்தது என்பதுபற்றி விசாரணை நடாத்திவரும் ராகம பொலிஸார் சந்தேகநபர்களை இன்று நீர்கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யவுள்ளனர்.

# கருக்கட்டுகிறதா? யுத்த சூழல் உன்னிப்பாக அவதானிக்கிறது ஐ.நா.

(ஜெனிவா)

இலங்கையில் யுத்த சூழல் மீண்டும் கருக்கட்டுவதைத் தடுக்கும் முயற்சியில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் உன்னிப்பாக கண்காணித்து வருகிறது.

இதற்காக இலங்கை குறித்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கை தீவிரமாக கவனிக்கப்பட்டது என அமைப்பின் பிரதி பொதுச் செயலாளர் ஜேன் எலிசன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயற்பாடுகள் குறித்து அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் இடம்பெற்றது போன்ற சூழ்நிலைகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்கக் கூடிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிரேஷ்ட பிரதிநிதிகளினால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.



குறித்த அறிக்கையின் பரிந்துரைகள் உன்னிப்பாக கவனிக்கப்பட்டதாகவும், பரிந்துரைகள் எதிர்காலத்தில் பயன்படுத்திக் கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அறிக்கை குறித்த இறுதி பரிந்துரை அறிக்கை வெளியிடப்படும் எனவும், உள்ளடக்கங்களை தீவிரமாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் அமைப்பின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு இந்த அறிக்கை உறுதுணையாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மாணிக்கபுரம் பிரதான வீதியின் புனரமைப்பு எப்போது நிறைவடையும்?

## மக்கள் பெரும் அவலம் இந்தியவீட்டுத்திட்டப்பணிகள் முடக்கம்

(விசுவமடு)

விசுவமடுப்பகுதியில் அமைந்துள்ள வள்ளுவர்புரம், மாணிக்கபுரம், இளங்கோபுரம் அகிய குடியிருப்புகளுக்குச் செல்லும் பிரதான வீதியைப் புனரமைக்கும் பணிகள் கடந்த வருடத்தின் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன.

வேலை ஆரம்பமாகி முதற்கட்டமாக சல்லிக்கற்கள் பறிக்கப்பட்டநிலையில் சுமார் ஆறுமாதங்களாக அடுத்தகட்டப் பணிகள் ஆரம்பமாகவில்லை. இக்காலப் பகுதியில் குறித்தவீதியால் பயணித்த மக்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் பெரும் சிரமங்களை எதிர் கொண்டனர்

மிதிவண்டியில் பயணித்த பல மாணவர்கள் கற்களில் சறுக்கிவிழுந்து காயங்களுக்குள்ளானதுடன், விவசாயிகள் தமது உற்பத்திப்பொருட்களைச் சந்தைப் படுத்துவதற்காக மிதிவண்டிகளில் பயணித்தவேளை மிதிவண்டியை செலுத்த முடியாமல் விழுந்து பாதிக்கப்பட்டதும் உண்டு. இவ்வாறு மக்களைப் பல பாதிப்புக்களுக்குள்ளாக்கியதன் பின்னர் பல மாதங்களைக்கடந்து மீண்டும் கொங்கிறீட் போடும் பணி ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து சிலமாதங்களாக அப்பணி பல இழுத்தடிப்புக்களுக்கு மத்தியில் முடிவுறுத்தப்பட்டது.

இக்காலப்பகுதியில் குறித்தவீதியின் முடிவுப்பகுதிக்கு அப்பால் அமைந்துள்ள இளங்கோபுரம் கிராமத்திற்கு, சுமார் 300 வரையான குடும்பங்களுக்கு இந்தியவீட்டுத்திட்டம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு தற்போது வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் வீதியின் இருமருங்கும் கிரவல் போடும் செயற்பாட்டுக்காக வீதியின் நடுவே சுமார் ஒரு கிலோமீற்றருக்கு மேற்பட்ட பகுதிக்கு கிரவல்பறிக்கப்பட்டுள்ளது.

இதனால் குறித்த வீட்டுத்திட்டத்திற்கான பொருட்களைக் கொண்டுசெல்ல முடியாதநிலையில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதேவேளை வீட்டுத்திட்டப்பணிகளை விரைவுபடுத்த வேண்டிய கட்டாய நிலையிலும் மக்கள் உள்ளனர்.

இதேவேளை குறித்த மூன்று கிராமங்களிலும் சுமார் 1500 இற்கும் அதிகமான குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பிரதான வீதியின் அருகே அப்பகுதிகளுக்கான இருபாடசாலைகள் மூன்று முன்பள்ளிகள் உட்பட பல முக்கிய மக்கள் சேவை நிலையங்களும் உள்ளன.

ஆனால் குறித்த வீதி மிகக்குறுகிய அகலத்தைக் கொண்டதாகவே அமைக்கப்பட்டுள்ளது அத்தோடு சாதாரண நில மட்டத்திலிருந்து சற்று உயரமாக அமைந்துள்ள. இவ்வீதியால் மிதிவண்டிகளும் பாதசாரிகளும் மட்டுமே பயணிக்கமுடியும் நான்குசில்லுவாகனங்கள் பயணிக்கின்ற சந்தர்ப்பத்தில் எதிரேபயணித்தவர் எதிர்வரும், வாகனத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகவோ வீதியிலிருந்து சறுக்கிவிழுந்து விபத்துக்குள்ளாகவோ நேரிடும்.

எனவே வீதியின் முக்கியத்துவம், குறித்து வீதியைபயன் படுத்தும் மக்கள் தொகை என்பவற்றை கொண்டு இவ்வீதி அமைக்கும் திட்டம் தீர்மானிக்கப் படவில்லை என்பது அப்பகுதி மக்களின் குற்றச்சாட்டாக அமைந்துள்ளது.

அதேவேளை அபிவிருத்தித்திட்டங்கள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற அரசின் கொள்கைக்கு அப்பால அதிகாரிகளால் மக்களிற்குத் திணிக்கப்படும் திட்டமாகவே இவ் வீதிப்புனரமைப் புப்பணி அமைந்துள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.


இதேவேளை குறித்த காலத்திற்குள் இவ்வாறான முக்கிய பணிகளை நிறைவுசெய்யத்தவறுவதால் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாடு முடக்கப் படுவதாகவும் அப்பகுதியின் புத்தி ஜீவிகள் தெரிவிக்கின்றனர் (29)

## இணையத்தள வடிவமைப்பில் வெற்றி

(சாவகச்சேரி)

வடமாகாண கல்வித் திணைக்களமும், யாழ்.பல்கலைக்கழக கலைச்சங்கமும் இணைந்து யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே 2012ஆம் ஆண்டு நடத்திய இணையத்தள வடிவமைப்புப் போட்டியில் யாழ்.மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்களான ந.தேனுஷன், ஸ்ரீ கும்பவாணன், ம.கர்வீசன் ஆகியோர் இணைந்து 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளனர். (11)

## முல்லைமாவட்ட அபிவிருத்தி கூட்டம்



முல்லைமாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் முல்லைமாவட்ட அரசாங்கஅதிபர் பணிமனையில் கேட்போர்கூடத்தில் அரசாங்க அதிபர் நா.வேதநாயகம் தலைமையில் கடந்த 9ஆம் திகதி பிற்பகல் இரண்டு மணியளவில் நடைபெற்றுள்ளது.

இதில் சென்ற ஆண்டு நடைபெற்ற அபிவிருத்திகள் தொடர்பாகவும, பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் சுசந்தை புஞ்சி நிலமே கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிஸாட்பதியுதீன் கலந்துகொண்டு கருத்துக்கள் வழங்கியதோடு குறைபாடுகளையும் கேட்டு அறிந்து கொண்டனர்.

5 பிரதேச பிரிவுகளை உள்ளடக்கி பிரதேசங்களில் உள்ள அரச உத்தியோகத்தர்களும், சமபந்தப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்களும், கிராம அமைப்புகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர். (க)

## துவிச்சக்கரவண்டிகளுக்கு உரிமத்தகடு அவசியம்

(முழங்காவில்)

பூநகரிப் பொலிஸ் பிரிவு எல்லைக்குள் வசிப்போரில் பிரதேச சபையின் துவிச்சக்கர வண்டி உரிமத்தகடுகளைப் பெறாதவர்கள்மீதும், இரவு நேரத்தில் டைனமோ வெளிச்சம் இல்லாமல் பயணிப்போர் மீதும் பூநகரிப் பொலிஸ் பகுதியினர் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

முக்கிய இடங்களிலும், பிரதான சந்திகளிலும் வீதிச்சோதனையில் ஈடுபட்டும் பொலிஸார் உரிமத்தகடு இல்லாத துவிச்சக்கரவண்டிகளைத் தடுத்துவைத்து, உரியவர் பிரதேச சபையின் உரிமத் தகடுகளைப் பெற்று வந்த பின்பே துவிச்சக்கர வண்டி கொண்டுசெல்ல அனுமதிக்கப் படுவதால் மக்கள்துவிச்சக்கர் வண்டி உரிமத்தகடுகளைப் பெறுவதில் முனைப்புக்காட்டி வருகின்றனர். (112)



**இலங்கை பகிரங்க சேவை ஒய்வூதியர் நம்பிக்கை நிதிய பருத்தித்துறை பிரதேச சங்கத்திற்கு இவ்வருடம் தெரிவான செயற்குழு உறுப்பினர்கள் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன் கணக்காளர் கே.யோகேந்திரன் பகிரங்க சேவை நம்பிக்கை நிதிய யாழ்.மாவட்டத்தலைவர் வி.ஸ்ரீசக் திவேல் ஆகியோருடன் உறுப்பினர் சிலரைக் காணலாம். (01)**

## முரசின் இன்றைய பலன்

**(12.05.2013 - ஞாயிற்றுக்கிழமை)**

**விஜய வருஷம் சித்திரை மாதம் 29 ஆம் திகதி.**
**நட்சத்திரம் ரோகினி பிற்பகல் 01.10 வரை. திதி - துதியை.**
**முற்பகல் 09.36 வரை. இராகுகாலம் 04.24 - 05.54 வரை.**
**சுபநேரம் 08.54 - 10.24 வரை. சித்தம்,**

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| **மேடம்** | அறிமுகம் இல்லாதவரிடம், பொது விஷயம் பேசவேண்டாம். வேலைகள் முடிவதில் தாமதம் இருக்கும். முயற்சியில் பின்வாங்க மாட்டீர்கள். தொழில், உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது. முக்கிய செலவுக்கு கடன் பெற நேரும். |
| **ரிஷபம்** | பேச்சில் நிதானமும், விவேகமும் கலந்திருக்கும். முக்கியஸ்தர்களிடமிருந்து உதவி கிடைக்கும். தொழிலில் அபிவிருத்தி கூடும். பணவரவு திருப்திகரமாகும். வீட்டுப் பொருள் வாங்குவீர்கள். குடும்பத்தினருடன் உல்லாசம். |
| **மிதுனம்** | பிடிக்காத மனிதரிடம் வாக்குவாதம் உருவாகலாம். விலகுவது நல்லது. தொழில், தாமதகதியில். பணத் தேவை அதிகரிக்கும். இயந்திரங்களுடன் பழகுவோர் பாதுகாப்பில் கவனம். பிள்ளைகள் குறித்து கவலை உண்டாகும். பக்தியில் நாட்டம். |
| **கடகம்** | கவித்துவமாகப் பேசி பிறரைக் கவர்வீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழிலில், புதிய சாதனை உருவாகும். தாராள பணவரவு. பொன், பொருள் சேர்க்கைக்கு அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் பலம் பெறும். |
| **சிம்மம்** | கோபமூட்டச் சீண்டுவார்கள். பொறுமையால் மட்டுமே, சிரம சூழ்நிலையை சமாளிக்கலாம். தொழில், சுமாரான அளவில். தவிர்க்க இயலாத செலவு வரும். உறவினரால், சில நன்மை பெறுவீர்கள். உடல் நலத்திற்கு உணவில் கவனம். |
| **கன்னி** | இனம்புரியாத அச்ச உணர்வு ஏற்படலாம். நேர்மையைக் கைவிடாமல், சிரமம் தவிர்ப்பீர்கள். தொழில், அதிக உழைப்பால் சராசரி இலக்கை அடைவீர்கள். போக்குவரத்தில் கவனம். பொருள் எதையும் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். |
| **துலாம்** | பிறரது கஷ்டம் உணர்ந்து நடப்பீர்கள். பணிவு மரியாதை பெற்றுத் தரும். வேலையிடத்தில் தற்காப்பு அவசியம். தொழிலில் இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவைப்படும். தாராள செலவு செய்வீர்கள். பயணத்திட்டத்தில் மாறுதல். |
| **விருச்சிகம்** | பல நாள் முயற்சித்த வேலை, இன்று எளிதாக நிறைவேறும். தொழிலில், கூடுதல் மூலதனம். பணவரவு சீராகும். இல்லறத்துணை விரும்பியது வாங்கித்தருவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை கூடும். பழைய விவகாரம் ஒன்றில் தீர்வு வரும். |
| **தனுசு** | நண்பரின் கருத்தை விமர்சனம் செய்ய வேண்டாம். தொழிலில் இடையூறை விலக்கி மேம்படுத்துவீர்கள். அளவான பணவரவு. விலையான பொருட்கள் பயன்படுத்துவதில் கவனம். பொதுப்பணி ஆர்வம். ஓய்வில் இசை ரசித்து மனம் இலகுவாகும். |
| **மகரம்** | எதிரியால் வரும் சங்கடத்தை, மாற்று உபாயத்தினால் வெல்வீர்கள். மனதில் நம்பிக்கை வளரும். தொழில், கடினமாக உழைப்பீர்கள். உபரி பணவரவில், கடன் கொஞ்சம் தீரும். அரசால் அனுகூலம். உத்தியோகத்தில் நெருக்கடி வந்து மறையும். |
| **கும்பம்** | உறவினர்களுடன் சந்தோஷ உறவாடல். பல நாள் வேலை, முழுவடிவம் பெறும். தொழிலில் தேங்கிய வேலைகள் முடிப்பீர்கள். ஆதாய பணவரவு. உத்தியோகத்தர் பாராட்டு வெகுமதி பெறுவர். எதிர்காலம் பற்றிய தெளிவு பிறக்கும். |
| **மீனம்** | முக்கிய வேலை ஒன்றை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வளர்ச்சி திருப்திகரம். உபரி பணவரவு. விரும்பிய பொருள் வாங்குவீர்கள். தொலைபேசி மூலம் மனம் மகிழும் செய்தி. விருந்து விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். |

# சீனாவின் சர்வதேச வானொலியில் தமிழ்சேவைக்கு முதலிடம்




சென்னையில் சீன வானொலியின் சர்வதேச தமிழ்ச் சேவை (சி.ஆர்.ஐ) தனது பண்பலை(எ.்.ப்.எம்) வானொலி நிலையத்தை விரைவில் தொடங்க உள்ளது.

சி.ஆர்.ஐ. எனப்படும் சீன வானொலியின் சர்வதேச தமிழ்ச் சேவைப் பிரிவு கடந்த 1963ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சாவோ ஜியாங் தலைமையில் செயல்படும் இப்பிரிவில் மரியா மைக்கேல், புஷ்பா ரமணி ஆகிய இரு இந்தியர்கள் உள்பட 18 உறுப்பினர்கள் உள்ளனர். தமிழ் தவிர, பெங்காலி, உருது, ஹிந்தி ஆகிய 3 இந்திய மொழிகளிலும் சி.ஆர்.ஐ. தனது ஒலிபரப்புச் சேவைகளை வழங்கி வருகிறது.

இந்நிலையில், சீன வானொலியின் சர்வதேச தமிழ்ச் சேவைப் பிரிவு தனது 50ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, இந்தியாவில் பண்பலை வானொலி நிலையத்தை விரைவில் தொடங்க உள்ளதாக இப்பிரிவின் துணை இயக்குநரான வாணி என்ற காய் ஜுன் தெரிவித்தார்.




அவர் மேலும் கூறுகையில், நாங்கள் ஏற்கெனவே தமிழ்நாட்டில் சிற்றலை வரிசை மூலம் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகிறோம். இப்போது சென்னையில் உள்ள சில பண்பலை(எ.்.ப்.எம்.) வானொலி நிலையங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இதன் மூலம் அங்கு பண்பலைத் துறையில் நாங்கள் அடியெடுத்து வைக்கிறோம் என்றார். கடந்த 1941இல் தொடங்கப்பட்ட சீன வானொலி இப்போது உலகின் 63 மொழிகளில் சேவைகளை வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது

# கர்நாடக முதல்வராக சித்தராமையா தெரிவு


கர்நாடக முதல்வராக சித்தராமையா தெரிவு செய்யப்பட்டார். கர்நாடகாவில் கடந்த 5ஆம் திகதி சட்டசபைத் தேர்தல் நடந்தது. இதில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டன. தேர்தலுக்கு முந்தைய மற்றும் வாக்குப் பதிவுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளை உண்மை என நிரூபிக்கும் வகையில், தேர்தல் நடந்த 223 தொகுதிகளில் 121 தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளது.

ஏழு ஆண்டுகளுக்குப் பின் கர்நாடகாவில் காங்கிரஸ் ஆட்சியை கைப்பற்றியுள்ளதால், அந்தக் கட்சியினர் மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளனர். இருந்தாலும் அடுத்த முதல்வர் யார் என்ற பரபரப்பும் கிளம்பியுள்ளது. அதற்கேற்ற வகையில் மாநில காங்கிரஸ் தலைவர்கள் இடையே முதல்வர் பதவிக்கான போட்டி கடுமையாக உள்ளது. இந்நிலையில் காங்கிரஸ் சட்டசபை கட்சித் தலைவரை தேர்ந்தெடுக்கும் கூட்டம் பெங்களூரிவில் நடைபெற்றது.




இதனையடுத்து எம்.எல்.ஏ.க்கள் மத்தியில் நடந்த இரகசிய வாக்கெடுப்பில் கர்நாடக முதல்வராக சித்தராமையா தெரிவு செய்யப்பட்டார். பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவரான சித்தராமையா, தெற்கு கர்நாடகாவில் உள்ள வருணா தொகுதியிலிருந்து 5 முறை எம்.எல்.ஏ. வாக தெரிவு செய்யப்பட்டவர்.

இரகசிய வாக்கெடுப்பில் சித்தராமையாவுக்கு ஆதரவாக 80 வாக்குகளும், கார்கேவுக்கு ஆதரவாக 40 வாக்குகளும் கிடைத்தன.கர்நாடக முதல்வராக தெரிவு செய்யப்பட்டுள்ள சித்தராமையா திங்களன்று முதல்வராக பதவியேற்க உள்ளார்.



காரைக்குடி ஆசிரியர் வள்ளியப்பன் கை வண்ணத்தில் உருவாகும் மிகப் பெரிய அளவிலான தஞ்சாவூர் கலை ஓவியம்.

# சூரிய மின்சக்தியில் இயங்கும் சென்னை பல்கலைக்கழகம்



சென்னை பல்கலைக்கழகம் சூரிய மின்சக்தியில் இயங்க உள்ளதாகவும் பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள நான்கு வளாகங்களிலும் இத்திட்டம் நடைமுறைப்புடுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து சென்னை பல்கலை துணைவேந்தர் தாண்டவன் கருத்துத் தெரிவிக்கையில்,

புகழ் பெற்ற கட்டட அமைப்பைக் கொண்ட சென்னை பல்கலைக்கழகத்தில் சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் கருவிகள் நிறுவப்பட உள்ளன. இப்பணியை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (டெடா) மேற்கொள்ளும்.

மெரினா, சேப்பாக்கம், கிண்டி, தரமணி என நான்கு வளாகத்திலும் சூரிய சக்தி மின் உற்பத்திக் கருவிகள் நிறுவப்படும். சென்னை பல்கலையில் உள்ள அனைத்து துறைகள் மற்றும் அலுவலகங்களில், சூரிய சக்தி மின்சாரம் பயன்படுத்தப்படும். ஆனால் ஆய்வகங்களில் இவ்வசதியை பயன்படுத்த முடியாது. இதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும். நான்கு வளாகங்களிலும் சூரிய சக்தி மின் உற்பத்திக் கருவிகள் ஐந்து கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்றார். நாட்டின் பழமையான பல்கலைக் கழகங்களில் சென்னை பல்கலைக்கழகமும் ஒன்று. லண்டன் பல்கலைக் கழகத்தின் அமைப்பில் சென்னை பல்கலைக்கழகம் 1851இல் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஞாயிறு நற்சிந்தனை

### அகத்துக்குள் தேடுதல்

(லூக்கா 24 : 44 - 53)

விண்ணேற்றத்தைப் பற்றி புனித அகுஸ்தீனார் குறிப்பிடும் போது,

“நம் இதயத்தில் அவரை நாம் தேடவேண்டும் என்றே, அவர் நம் கண்களுக்கு மறைவாகிப் போனார்” என்கின்றார்.

உலகத்தின் ஒளி இனியும் நம்மோடு உலகில் இல்லை. அவர் நமது உள்ளங்களில் ஒளிர்கின்றார். சீடர்கள் கண்டதுபோல் நாம் அவரது மாட்சியை நமது ஊனக்கண்களால் காண்பது இல்லை. மாறாக நமது அகக்கண்களினால், விசுவாசத்தின் கண்களினால் நாம் அவரின் மாட்சியை நமது உள்ளத்தில் காண்கின்றோம்.

இப்படி நாம் நமது விசுவாசக் கண்களினால், நமது அகத்தில் நாம் காணும் கிறிஸ்துவின் மாட்சி நமக்கு என்ன செய்கின்றது. அதற்கு ஸ்தேவானின் உதாரணத்தைத் தவிர வேறுஎந்த உதாரணத்தையும் காட்டமுடியாது.

“அவரே தூய ஆவியின் வல்லமையை நிறைவாய்ப் பெற்று, வானத்தை உற்றுநோக்கினார். அப்போது கடவுளின் மாட்சியையும் அவர் வலப்பக்கத்தில் இயேசு நிற்பதையும் கண்டு இதோவானம் திறத்திருப்பதையும், மானிட மகன் கடவுளது வலப்பக்கத்தில் நிற்பதையும் காண்கின்றேன்” என்று கூறினார்.

திருத்தூதர் பணிகள் 7:55-56)

இந்த வார்த்தைகளோடு ஸ்தேவான் தன்னை துன்புறுத்துவோரோடு, துணிவோடு சந்தித்தார் தம்மை நோக்கி வந்த கொடூர மரணத்தை மிகுந்த அமைதியுடன் மும்கொடுத்தார்.

கிறிஸ்துவின் விண்ணேற்ற காட்சி நமது மனதில் வெறும் கற்பனையன்று. அது நம் வாழ்விற்கு, நம் விசுவாசத்திற்கு, நம் நடத்தைக்கு உரமூட்டும் உண்மைத் தரிசனம் நமக்குப் பாதகமான சந்தர்ப்பங்களை,' நம்மை அது மேற்கொள்ள வைக்கின்றது. மரணம் வரினும் உயிர்த்தியாகம் செய்ய நேரிடினும் தலைநிமிர்ந்து அது நம்மை மேலே நோக்கிப் பார்க்கச் செய்கின்றது.

வி.பி.தனேந்திரா.

## வாழ்க வளமுடன்

பெயர் : ர.அபிநயா

முகவரி : கைதடி மேற்கு, கைதடி.

அகவை 9 இல் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



பெயர் : வி.கனிஸ்மன்

முகவரி : 42:08 மவுன்கார் மேல் வீதி, குருநகர்.

அகவை 8 இல் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# கிரிக்கெட் தரத்தை மேம்படுத்த யாழில் சர்வதேச தரத்திலான ஆடுகளம்

## கிரிக்கெட் சபை நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கிரிக்கெட் தரத்தை மேம்படுத்தும் வகையில் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையில் சர்வதேச தரத்திலான புற்தரை (Turf) ஆடுகளங்களை அமைக்க இலங்கை கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அதன் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஜயந்த தர்மதாசவின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாகாணங்களில் தற்போது கிரிக்கெட் மீதான ஆர்வம் அதிகரித்திருக்கின்றது. இந்த ஆர்வத்தை மேலும் அதிகரிக்கும் வகையிலும், ஊக்குவிக்கும் நோக்குடனும் யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையில் தலா ஒரு புற்தரை ஆடுகளம் (சர்வதேச தரத்திலான ஆடுகளம்) அமைப்பதற்கு நிறைவேற்றுக் குழு கூடியபோது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இலங்கையின் கிரிக்கெட் தரம் மேலும் அதிகரிக்க வாய்ப்பு உருவாகும் அதே வேளை, சர்வதேசத்தில் மின்னக்கூடிய பல வீரர்கள் வடகிழக்கு மாகாணங்களில் உருவாகக் கூடிய சூழ்நிலையும் விரைவில் உருவாகும் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மகளிர் மத்தியில் தொழில்சார் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய மகளிர் கிரிக்கெட் அணியில் இடம்பெறும் வீராங்கனைகளை ஒப்பந்த அடிப்படையில் உள்வாங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



**சோழங்கன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட கொலின்ஸ் அணி விருந்தினர்களுடன் நிற்பதைக் காணலாம். இப்போட்டித் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (116)**

# இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இளைஞர் அணிகளுக்கிடையிலான மாவட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் அணியை எதிர்த்து உடுவில் பிரதேச இளைஞர் அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

(மல்லாகம்)

தெல்லிப்பளை பொலிஸ் நிலையம் மற்றும் தெல் லிப்பளை பிரதேச செயலகம் ஆகியன இணைந்து நடத்தும் புத்தாண்டு விளையாட்டு விழா இன்றைய தினம் மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மரதன், சைக்கிள் ஓட்டம், கயிறிழுத்தல், தேங்காய் திருவுதல், தேங்காய் அடித்தல், முட்டை உடைத்தல், சங்கீதக் கதிரை, யானைக்கு கண் வைத்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகவும், இப்போட்டி நிகழ்வில் பிரதேசத்திற்குட்பட்ட இளைஞர், யுவதிகளைக் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்துமாறு போட்டி அமைப்பாளர்கள்கேட்டுள்ளனர். (93)

(புத்தூர்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்படும் மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் மாலை புத்தூர் கலைமதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை வங்கி மற்றும் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் மாவட்ட மட்டத்தில் கரப்பந்தாட்டத் தொடர் நடத்தப்பட்டு வருகின்றது. இதில் ஏ பிரிவுக்கான அரையிறுதிப் போட்டிகளே இடம்பெறவுள்ளன. இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் பன்னாலை சணேசன் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணியும், ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் மோதவுள்ளன. (93, 118)

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டுச் செயலகத்தினால் நடத்தப்படும் மாவட்ட மட்ட கராத்தேப் போட்டி இன்றைய தினம் யாழ். ஓ.எல்.ஆர். தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில்பங்குகொள்ளவுள்ளபோட்டியாளர்களை உரிய நேரத்திற்கு வருகை தருமாறும், இதில் தனிக்காட்டா, குழுக் காட்டா மற்றும் சண்டை போட்டி போட்டிகள் இடம்பெறவுள்ளதாகவும், மாகாண மட்டப் போட்டி அடுத்த வாரம் இடம்பெறவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

# தெல்லிப்பளை, கோப்பாய் இளைஞர் அணிகள் சம்பியன்





(ஆவரங்கால்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் யாழ். மாவட்ட பிரதேச தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணிகளுக்கிடையே நடத்திய கரப்பந்தாட்ட போட்டியில் தெல்லிப்பளை மற்றும் கோப்பாய்ப் பிரதேச இளைஞர் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. பெண்களுக்கான இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச தேசிய இளைஞர் சம்மேளன அணியும் கோப்பாய் பிரதேச தேசிய இளைஞர் சம்மேளன அணியும் மோதிக் கொண்டன. எதிர் பார்த்தளவுக்கு கோப்பாய் பிரதேச இளைஞர் சம்மேளன அணி விளையாடாத நிலையில் தெல்லிப்பளை பிரதேச இளைஞர் சம்மேளன அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது. மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. தொடர்ந்து நடைபெற்ற ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இளைஞர் அணியும், கோப்பாய் இளைஞர் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே சிறப்பான முறையில் செயற்பட்ட கோப்பாய் இளைஞர் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. (93)

# வடமாகாண வீரர்களும் தேசிய அணியில் இடம்பிடிப்பர்

## தேசிய பயிற்றுவிப்பாளர் நவீட் நவாஸ் யாழில் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கிரிக்கெட் மீது ஆர்வம் கொண்ட பலர் உள்ளனர் என்பதை இந்தப் பயிற்சி முகாம் எங்களுக்கு உணர்த்தியிருக்கின்றது. இரண்டொரு வருடங்களில் வடமாகாண வீரர்களும் தேசிய அணியில் இடம்பிடிக்கக்கூடிய வாய்ப்பு உருவாகும் என இலங்கை கிரிக்கெட் சபையின் 19 வயதுப் பிரிவுக்கான தேசிய பயிற்றுவிப்பாளர் நவீட் நவாஸ் தெரிவித்துள்ளார்.


வடமாகாண பாடசாலை கிரிக்கெட் பயிற்றுநர்கள் மற்றும் பாடசாலை வீரர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாம் நிறைவின் பின் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2011ஆம் ஆண்டு நாங்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தோம். அந்த நிலையுடன் ஒப்பிடுகின்றபோதும் இந்த இரண்டு வருட காலத்தில் வீரர்களிடையே நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதை நம்புகின்றேன். குறிப்பாக இந்தப் பயிற்சி முகாம் ஊடாக கண்கூடாகப் பார்த்திருக்கின்றோம். இவ்வாறான பயிற்சி முகாம் எதிர்வரும் காலங்களில் வருடத்தில் ஒரு தடவை மேற்கொள்வதற்கான பரிந்துரையை நாங்கள் நிச்சயம் இலங்கை கிரிக்கெட் சபையிடம் முன்வைப்போம். இதன் மூலம் தென்னிலங்கை வீரர்களுக்கு இணையான பெறுபேறுகளை வெளிப்படுத்தக்கூடிய வீரர்களை வடமாகாணத்திலும் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டிருக்கின்றது. கடந்த காலப் போர் எம்மைப் பல வழிகளிலும் பின்னடைவுகளை ஏற்படுத்த வழிவகுத்துவிட்டது. அந்த வகையில் வடமாகாண விளையாட்டும் பெரும் பின்னடைவுகளை அடையக் காரணமாக அமைந்துவிட்டது. இருப்பினும் வடமாகாண வீரர்கள் இந்தப் பின்னடைவுகளில் இருந்து விரைவில் மீண்டது மகிழ்ச்சி. இதன் மூலமே சிலோஜன், ரியூடர் போன்ற வீரர்களை எங்களால் இனங்காண முடிந்தது. இன்னும் பல வீரர்களை அடுத்து வரும் ஆண்டுகளில் எங்களால் இனங்காண முடியும். அந்த வகையில் இலங்கை தேசிய அணியில் இடம்பிடிக்கக் கூடிய திறமை மிக்க வீரர்கள் வடக்கு மாகாணத்திலும் இருப்பதில் மகிழ்ச்சி. பயிற்றுநர்களின் வழி நடந்து, தொடர் பயிற்சிகளை அர்ப்பணிப்பு உணர்வுடன் மேற்கொள்வதன் மூலம் விரைவாக குறித்த இலக்கை வடக்கு மாகாண வீரர்கள் அடைவார்கள் என்று நம்புகின்றேன். வடமாகாணத்திலுள்ள கிரிக்கெட் பயிற்றுநர்கள் சகலரும் ஒரே தரத்தில் இல்லை. இதுவும் வீரர்களின் வளர்ச்சிக்கு பின்னடைவைத் தரும். அவர்கள் முழு நேரப் பயிற்றுவிப்பாளர்களாக தங்களை ஆக்கிக் கொள்ள வேண்டும். அதுவே வீரர்களுக்கு சிறந்த பயனைக் கொடுக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்.பி.)



# சாட்சியங்களுடன் தொடரும் வரலாறு

- முருகபூபதி கட்டுரையிலிருந்து.




இலங்கையில் இனப் பிரச்சினை உக்கிரமடைந்து இனவிடுதலைப் போராட்டம் தொடங்கியதற்கு பல்கலைக் கழக பிரவேச கல்வியில் அறிமுகமான தரப்படுத்தலும் ஒரு காரணம் என்பது ஆய்வாளர் கூற்று. அதேசமயம், பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்திலா..? திருகோணமலையிலா..? என்ற போராட்டத்தில் தந்தை செல்வநாயகத்தின் தமிழரசுக்கட்சியும் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் தமிழ்க்காங்கிரசும் இழுபறிப்பட்ட வேளையில் எவருக்குமே இல்லை என்று 1965 பதவிக்கு வந்த டட்லி சேனாநாயக்கா கையை விரித்தார்.

திருகோணமலை தமிழரின் தலைநகரம் அதனால் அங்குதான் பல்கலைக்கழகம் வேண்டும் என்றனர் தமிழரசுக் கட்சியினர். ஜி.ஜி.பொன்னம்பலம் 1965 இல் யாழ்ப்பாணம் தொகுதியில் தெரிவானதும் அங்கே ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவிவிட்டால் அந்தப் புகழ் ஜி.ஜி. வசம்போய்விடும் என்பதானல் தமிழரசுக்கட்சி யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் வருவதை அன்று தடுத்தது.

அத்துடன் நிற்கவில்லை. 1970 இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் கூட்டர சாங்கம் அமைந்தவேளையில் யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வரா கல்லூரியையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியையும் பல்கலைக்கழக வளாகங்களாக மாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்தபோதும் அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக்கூட்டணி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது.

கோவை மகேசன் சுதந்திரன் இதழில் இதுதொடர்பாக தொடர்ந்து விஷம் கக்கினார். அதற்கு இன்னுமொரு காரணமும் இருந்தது. முற்போக்கு இலக்கிய முகாமிலிருந்த பேராசிரியர் கைலாசபதிக்கு யாழ். பல்கலைக்கழக வளாகத்தலைவர் பதவி நியமனம் கிடைத்ததும் அவர்களுக்குப் பொறுக்கவில்லை.

கைலாசபதிக்கும் அவரது ஆசான் பேராசிரியர் சு.வித்தியானந்தனுக்குமிடையே சிண்டுமுடியும் வேலைகளையும் கனகச்சிதமாக மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் 1965 இலேயே பல்கலைக்கழகம் வந்திருக்கக்கூடிய நல்லதொரு சந்தர்ப்பம் தமிழ்த்தலைவர்களின் ஈகோவினால் சாத்தியமாகவில்லை. 1970 இற்குப் பின்பும் அவர்கள் திருந்தவில்லை. தமிழரசுக்கட்சியும் தமிழ்க்காங்கிரசும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி அமைத்தபின்பும் அவர்களின் ஈகோ அவர்களை விட்டு அகலவில்லை.


ஆனால் அவர்கள் யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக்கழக வளாகமாக மாறுவதை எதிர்ப்பதாக நொண்டிச்சாட்டு சொன்னார்கள்.

ஆனால் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, டட்லி சேனாநாயக்கா கைவிரித்தது போன்று தமிழ்த்தலைவர்களின் ஈகோவை பொருட்படுத்தாமல் திட்டமிட்டவாறு அங்கு பல்கலைக்கழகத்தை நிறுவினார். அங்கு கைலாசபதிக்குப் பின்னர் வித்தியானந்தன் உபவேந்தரானார். புலிகள் நீர்வேலியில் அமைத்த பங்கர் மருத்துவமனையின் மாதிரியை வடிவமைத்தார் உபவேந்தர் பேராசிரியர் துரைராஜா.

இதே பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த மாணவி மதிவதனியைத்தான் பிரபாகரனும் ஒரு உண்ணாவிரத நிகழ்விலிருந்து அழைத்துவந்து தனது துணைவியாக்கிக் கொண்டார். இங்கு கல்வி கற்றுக்கொண்டிருந்த மாணவர்கள் விஜிதரன், விமலேஸ்வரன் ஆகியோர் புலிகளினால் கடத்தப்பட்டு காணாமல் போனார்கள். மருத்துவபீட பேராசிரியை ராஜினி திராணகமவும் அவர்களால் கொல்லப்பட்டார்.

யாழ்.பல்கலைக்கழகமும் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. பொங்குதமிழும் எழுச்சிகொண்டது.

கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்படும் பல்கலைக்கழகத்தை நேரில் பார்த்தபோது, இந்த பொல்லாத ஞாபக சக்தி பழைய சம்பவங்களை - சாட்சியங்கள் நிரம்பிய காலகட்டங்களை நினைவுக்கு அழைத்துவந்தது.



# புகழ்ச்சியும் இகழ்ச்சியும்

ஒரு ஊரில் பணக்காரன் ஒருவன் இருந்தான். அவனுக்குக் குழந்தைகள் இல்லை. இருப்பினும், அவன் கருமியாகவே இருந்தான். ஊர் மக்கள் அனைவரும் அவனைக் குறை கூறி வந்தார்கள்.

ஒருநாள், அந்தக் கருமி ஒரு துறவியைச் சென்று சந்தித்தான்.

அவன் துறவியிடம், 'சுவாமி! நான் இறந்த பிறகு, என்னுடைய சொத்துக்கள் அனைத்தையும் தரும காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள எழுதி வைத்து விட்டேன். இருந்தாலும், என்னை இந்த ஊர் மக்கள் என்னைப் பாவி என்று திட்டுகிறார்கள். ஏன் என்று தெரியவில்லை?' என்றான்.

அதற்குத் துறவி, 'இங்கு உனக்கு பசுமாடு, பன்றிக் கதையைச் சொல்கிறேன். அதன் பிறகு ஏன் உன்னைத் திட்டுகிறார்கள் என்று தெரிந்து கொள்' என்றார்.

கருமியும், 'சுவாமி சொல்லுங்கள்' என்றான்.

துறவியும் கதை சொல்லத் தொடங்கினார்.

'ஒரு சமயம் பன்றி ஒன்று பசு மாட்டைச் சந்தித்து வருத்தத்துடன், 'பசுவே, உன்னைப் பற்றியும், உன் இயல்பைப் பற்றியும் மக்கள் எல்லோரும் புகழ்ந்து பேசுகிறார்கள். அது உண்மைதான். நீ, மக்களுக்குத் தேவையான பாலை வழங்குகிறாய்... ஆனால் நானோ உன்னை விட அதிகமாகத் தருகிறேன். என் இறைச்சியை மக்கள் உண்ணப் போகிறார்கள். என் தொடைக்கறியை ஆசையாய்த் தின்பார்கள். என் பாதங்களைக் கூட மென்று தின்பார்கள். என் உடலின் எந்தப் பகுதியையும் அவர்கள் விடப் போவதில்லை. என் உடலையே முழுமையாகத் தரப் போகிறேன். இருந்தாலும் என்னைப் புகழாமல் என்னை இழிவாகப் பேசுகிறார்கள். இதன் காரணம் என்னவென்று சொல்ல முடியுமா?' என்று கேட்டது.

இதைக் கேட்ட அந்தப் பசுமாடு சிறிது நேரம் சிந்தித்தது.

பிறகு அது பன்றியைப் பார்த்து, 'நான் உயிருடன் இருக்கும் போதே மக்களுக்குப் பயன்படுகிறேன். அதனால் என்னை எல்லோரும் புகழ்கிறார்கள். நீயோ இறந்த பின்புதான் பயன்படுத்தப்படுகிறாய். அதனால்தான் உன்னை இகழ்கிறார்கள்' என்றது.

துறவி சொன்ன கதையைக் கேட்ட அந்தக் கருமிக்கு தன்னுடைய தவறு தெரிந்தது.

# எம்.ஜி.வல்லபன்

- R.P. ராஜநாயஹம்

எம்.ஜி.வல்லபன் பத்திரிகையாளர். சினிமாப் பாடலாசிரியர். "மீன் கொடித் தேரில் மன்மத ராஜன் ஊர்வலம் போகின்றான்" பாடலை எழுதியது வல்லபன் தான். ".பிலிமாலயா" சினிமா பத்திரிகைக்கு ஆசிரியராயிருந்தார். அதில் மிகப் பரபரப்பான சந்திரபாபுவின் "மாடி வீட்டு ஏழையின் கதை"யை எடிட் செய்து எழுதியவர்.

பிலிமாலயாவின் எடிட்டராயிருக்கும்போதே பின்னால் "தைப்பொங்கல்" என்ற ஒரே ஒரு படத்தை இயக்கினார். ராதிகா, விஜயன், ராஜேஷ் ஆகியோர் நடித்த படம். "பனி விழும் பூமலரில் பாவை நீ கண் மலர்ந்தாய்" என்ற பாடல் ராஜேஷுக்கும் ராதிகாவுக்கும். இளையராஜா இசை.






தயாரிப்பாளர் சரியில்லாத மனிதர். "தைப்பொங்கல்" படம் utter flop! மிக மோசமான இயக்கம். இத்தனைக்கும் வல்லபன் மீது அப்போது ரொம்ப எதிர்பார்ப்பு இருந்தது.

"ராசுக்குட்டி" படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த சமயத்தில் "பாக்யா" அலுவலகத்தில் அந்தப் பத்திரிகையில் அப்போது வேலை பார்த்துக்கொண்டிருந்த எம்.ஜி.வல்லபனைப் பார்த்த போது சொன்னேன், "உங்களுக்கும் எனக்கும் ஒரு சின்ன சம்பந்தம் இருக்கிறது."

அவருக்குப் புரியவில்லை. "நீங்கள் எடுத்த "தைப்பொங்கல்" படத்தில் ராதிகாவின் வீட்டில் தியாகராஜ பாகவதரின் பாடல் ரேடியோவில் ஒலிப்பது போல வரும் காட்சியில் பயன் படுத்தப்பட்ட கஸட் என்னுடையது தான்! அதை நீங்கள் திருப்பித்தரவில்லை." என்று சிரித்தவாறு சொன்னேன். அவருக்கு முகத்தில் தெளிவு ஏற்பட்டு "ஆமாம்! எனக்கு நினைவிருக்கிறது. அதை டப்பிங்கில் உபயோகப்படுத்திய பின் தொலைந்து போய் விட்டது." என்றார்.

அந்த நேரத்தில் ஆமுவு பாடல்கள் கஸட்டை இழந்தது ரொம்ப வருத்தமாகத்தான் இருந்தது. தைப்பொங்கல் படத்தின் டப்பிங்கில் பயன்படுத்துவதற்காக அந்தப் படத்தில் நடித்த மற்றொரு நடிகரிடம் நான் இந்தக் கஸட்டைத் தரும்போது ரொம்ப ஸ்ட்ரிக்டாக "கட்டாயம் பத்திரமாகத் திருப்பித் தந்து விட வேண்டும்" என்று கறாராகச் சொல்லியிருந்தேன்.

**காடையைக் காட்டில் விட்டால் திரும்பப் பிடிக்கவா முடியும்?**

# எத்தனை எத்தனை மூட்டைப் பூச்சியடா?



மூட்டைப் பூச்சிக்கு அந்நாளில் இருந்த ஒரு தடுப்புமுறை ராஜ்மா எனப்படும் சிவப்புக் காராமணிச் செடியின் இலைகள் மூட்டைப் பூச்சிகளின் கால்களை நுண் தளைகளில் சிக்க வைத்து பிடித்துக் கொள்கின்றனவாம். இலை காயும்போது மூட்டைப் பூச்சியும் காய்ந்து போகுமா என்று தெரியவில்லை. ரோம் மக்கள் இந்த இலைகளைப் படுக்கையைச் சுற்றிப் பரப்பி விட்டுக் காலையில் அகப்பட்ட பூச்சிகளை இலைகளோடு எடுத்துப் போய்க் கொன்று விடுவார்களாம். சமீபத்திய தலைமுறை மூட்டைப் பூச்சிகள் இதுவரை பயன்பட்ட பல பூச்சிக் கொல்லி மருந்துகளை எல்லாம் ஜிலேபி போலச் சாப்பிட்டு விட்டு ஜம்மென்று ஊர்வலம் வருவதால், அவற்றைக் கொல்ல வழி தெரியாமல் 5 நட்சத்திர விடுதிகளில் இருந்து தெருக்கோடி லொட்ஜ் வரை எல்லாரும் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறார்களாம். அறிவியலாளர்கள் இரண்டாம் உலகப் போர் காலத்தில் இந்த இயற்கை தடுப்பு முறை பற்றி எழுதப்பட்ட ஒரு ஆய்வுக் கட்டுரையை இப்போது அகழ்ந்தெடுத்து, இந்த இலைகளைப் போன்ற அமைப்பு முறை கொண்ட துணிகளை உருவாக்கி பூச்சிகளை அவற்றின் மீது நடக்க விட்டபின் அவை இலையளவுக்கு பூச்சிகளைத் தடை செய்யவில்லை என்றறிந்திருக்கிறார்கள். ஆனாலும் மனம் தளராமல் இன்னும் மேம்பட்ட அமைப்பை அடையத் தவம் செய்யத் துவங்கி இருக்கிறார்கள். "எத்தனை எத்தனை மூட்டைப் பூச்சியடா, அவை எல்லாம் நமக்கே பண மூட்டையடா?" என்று பாடியபடி ஆய்வு செய்வதாகக் கேள்வி.



# சின்னச் சின்ன....

◗ ஆண்கள் தீக்குச்சியைப் பற்ற வைக்கும் போது, பெட்டியின் கீழ்ப்புறத்திலிருந்து மேற்புறத்துக்கு குச்சியைத் தேய்க்கின்றனர். பெண்களோ மேலிருந்து கீழாக குச்சியைத் தேய்த்துப் பற்ற வைக்கின்றனர். அமெரிக்கப் பேராசிரியர் ஒருவரின் ஆராய்ச்சி முடிவு இது. "சந்தேகமிருந்தால் நீங்களே கவனித்துப் பாருங்கள்..." என்கிறார் அவர்.

◗ ஏப்ரல் 1 முட்டாள் தினத்திற்கு வேறு பெயர் உண்டா? உண்டு April Gowk என்று பறவையின் பெயரால் அழைக்கிறார்கள் ஸ்கொட்லாந்தில். ஜப்பான்காரர்கள் பொம்மை
தினம் என்கிறார்கள். மீன் தினமாக கொண்டாடுபவர்கள் பிரெஞ்ச்காரர்கள். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்கள் "பூப்டே" என்கிறார்கள்.

◗ கோழிமுட்டை உலகம் முழுவதும் உண்ணப்படும் உணவு. அது மருந்தாகவும் பயன்படுகிறது. இங்கிலாந்தின் எடின்பேர்க் நகருக்கருகிலுள்ள ரோஸலின் இன்ஸ்டிடியூட், கோழி முட்டையில் முக்கியமாகக் காணப்படும் புரதம் புற்றுநோய்க்கு மருந்தாகப் பயன்படும் என்பதைக் கண்டுபிடித்து அறிவித்துள்ளது.

◗ மனித உடலிலேயே சூடான பகுதி மூளைதான். இங்குதான் பல விதமான உயிர்இரசாயன மாற்றங்கள் அதிக அளவில்
நடக்கின்றன. தலையில் வழுக்கை விழுந்தவர்களுக்கு மூளை மிக விரைவாகக் குளிர்ந்துவிடுகிறது. அவர்களுக்கு இதயமே மிகவும் சூடான பகுதி என்கிறது ஆராய்ச்சி.

◗ ஓவியர்கள் ஓவியங்களைத் தீட்டப் பயன்படுத்தும் தூரிகை வகைகளில் ஒன்றுக்கு camel hair brush என்று பெயர். ஆனால் இதில் இருப்பது ஒட்டக முடிகள் அல்ல; அணிலின் முடிகள். பிறகு ஏன் இந்தப் பெயர்? இந்த வகை பிரஷ்ஷை உருவாக்கியவரின் பெயர் கமெல்.

◗ கடிகாரத்தில் உள்ள ஸ்பிரிங்கை முதன்முதலில் பன்றியின் ரோமத்தைக் கொண்டுதான் உருவாக்கினார்கள்.

◗ அரபு நாட்டிலிருந்து, வியாபாரம் செய்ய அரேபியர்கள் தமிழ்நாட்டுக்கு வந்தபோது, அவர்கள் பேசிய மொழி, தமிழ் மக்களுக்குப் புரியவில்லை. அவர்களுக்கும் தமிழ்மொழி பேசத்தெரியாத காரணத்தால், தமிழர்களின் பேச்சுக்கு எல்லாம், "லப்பைக், லப்பைக்" என்று அரபு நாட்டினர் மறு மொழி பகர்ந்தனர். அவர்கள் மொழியில், "லப்பைக்" என்றால், "நல்லது; அப்படியே ஆகட்டும்" என்பது பொருள். அடிக்கடி அவர்கள், "லப்பைக்" என்று சொல்வதை கேட்ட மற்றவர்கள், அவர்களை, "லப்பைகள்" என்று அழைக்கத் துவங்கினர்.

**(இலக்கியக் கூட்டமொன்றில் எம்.அப்துல் வஹ்ஹப்)**

# புதிய வெனிசூலா ஜனாதிபதி மோரோஸ்



தென் அமெரிக்க நாடான வெனிசூலாவில் பொலிவேரிய புரட்சியை (Bolivarian Revolution) நடாத்தி, அந்த நாட்டை முற்போக்குப் பாதையில் வழிநடாத்திய மக்கள் அபிமானம் பெற்ற புரட்சித் தலைவர் ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் புற்று நோயால் காலமானதைத் தொடர்ந்து, அந்த நாட்டில் 2013 ஏப்ரல் 14ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், அந்நாட்டு சோசலிஸக் கட்சியின் புதிய தலைவர் நிக்கோலஸ் மதுரோ மோரோஸ் (Nicholas Maduro Moros) வெற்றி பெற்றுள்ளார்.

சோசலிஸக் கட்சி வேட்பாளரைத் தோற்கடிக்க சர்வதேச ஏகாதிபத்தியவாதிகளும், உள்நாட்டு எதிர்ப்புரட்சி சக்திகளும், வெனிசூலாவின் எண்ணெய் வளத்தை கடந்த காலங்களில் சுரண்டிச் சூறையாடிய கம்பனி முதலாளிகளும் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்ட போதிலும், வெனிசூலா மக்கள் சோசலிஸ கட்சி வேட்பாளரையே தமது ஜனாதிபதியாகத் தெரிவு செய்து, பொலிவேரியப் புரட்சியை தொடர்ந்த முன்னெடுத்துச் செல்ல ஆணை வழங்கியுள்ளனர்.

புதிய வெனிசூலா ஜனாதிபதி மோரோஸ் 2013 ஏப்ரல் 19ஆம் திகதி தலைநகர் கரகாஸில் (Caracas) நடந்த நிகழ்வில் புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக்கொண்டார். அந்த வைபவத்திற்கு இணையாக வெனிசூலாவின் 203ஆவது தேசிய சுதந்திர தினமும் அங்கு கொண்டாடப்பட்டது.

தனது பதவி ஏற்பு வைபவத்தில் உரையாற்றிய புதிய ஜனாதிபதி, மறைந்த வெனிசூலாவின் அதிபர் சாவேஸின் சோசலிஸ இலட்சியத்தைத் தாமும் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று, வெனிசூலா மக்களை மேலும் சுபீட்சமான பாதையில் இட்டுச் செல்லப் போவதாகச் சூளுரைத்துள்ளார். அந்த இலட்சியத்தின் ஒரு அங்கமாக வெனிசூலா மக்களுக்கு 3 மில்லியன் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் எனவும், சகல வெனிசூலா மக்களுக்கும் மின்சாரம் வழங்கப்படும் எனவும், அவர் த்னது பதவி ஏற்பு நிகழ்வில் தெரிவித்துள்ளார்.

**(வானவில்)**

# சாதா குழந்தை To சூப்பர் குழந்தை

**- டாக்டர்.பிரகாஷ் -**

**03**

குழந்தை வளர வளர, நம் முயற்சி எதுவுமில்லாமலேயே அதன் மூளையும் தன்னிச்சையாக வளர்ந்து விடுவதில்லை. மாறாக, அந்தக் குழந்தையின் மூளை பெறும் அனுபவங்களையும், பயிற்சியையும் பொறுத்தே அது சிறந்ததாக வளர்கிறது. குழந்தையின் மூளையை ஒரு பிரம் மாண்டமான ஸ்பொஞ்சாக உருவகப் படுத்திக் கொள்ளவும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற ஐந்து புலன்களால் நிகழும் அத்தனை அனுபவங்களையும் அந்த மாபெரும் ஸ்பொஞ்ச் உறிஞ்சிக் கொள்கிறது. இத்தகைய அனுபவங் களால், எந்த அளவுக்கு மூளையின் இணைப்புத் தொடர்புகள் (Synapses) தூண்டப் படுகின்றனவோ, அந்த அளவுக்கு அந்தப் பிஞ்சு மூளை சூப்பர் மூளையாக வளர்ச்சி அடைகிறது. எத்தனை குழந்த வயதில் எவ்வளவு அதிகமான தூண்டல்களை, புதிது புதிதான அனுபவங்களை உங்கள் குழந்தைகளுக்குத் தருகிறீர்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு அது சூப்பர் குழந்தையாகப் பரிணமிக்கும்.

குழந்தையின் மூளை வளர்ச்சி என்பது கணப் பொழுதும் மாறிக்கொண்டே அல்லது இயங்கிக் கொண்டே இருப்பது. அது நிலையாக ஒருபோ தும் நிற்பதில்லை. It is either improving or degenerating. முறையான பயிற்சிகளைப் பெறும் குழந்தையின் மூளை வளர்ந்து கொண்டிருக்கையில், பயிற்சிகளற்ற, திறன்கள் சரியாக ஊக்குவிக்கப் படாத மூளை, அதன் ந்யூரல் கனெக்ஷன்களை இழந்து வளர்ச்சியின் வேகம் குறைகிறது.

குழந்தையின் மூளை வளர்ச்சித் திறனை பாதிக்கும் காரணிகள் என்னென்ன என்று பார்ப்போம்.

- ஜெனடிக்ஸ் எனப்படும் பாரம்பரியம்,
- உணவு மற்றும் ஊட்டச் சத்து,
- பெற்றோர்களின் அன்பு, அக்கறை மற்றும் குழந்தையின் செயலுக்கான அவர்களின் பிரதிபலிப்பு,
- குழந்தை தினசரி பெறும் அனுபவங்கள்,
- குழந்தையின் உடல் இயக்கங்கள் இவை எல்லாமே முக்கியக் காரணிகள்.

ஐந்து புலன்களின் வாயிலாகக் கிடைக்கும் ஒவ்வொரு அனுபவமும் மூளையின் சுற்று இணைப்புகளை பலமாக்கி அதன் சாதுர்யத்திற்கு சரியான அடித்தளம் அமைக்கின்றன.

உதாரணமாக இப்படிச் சொல்லலாம்.

அம்மாவின் உடல் வாசம், (smell)
அப்பாவின் குரல் (hearing)
முகம் பார்ப்பது அல்லது பளபளக்கும் பொம்மையின் கலர் (vision)
மிருதுவான கை அணைப்பு (touch)
பால் குடிப்பது (taste)

அம்மாவின் அணைப்பை உணர்வது, அப்பாவின் குரலை இனங்கண்டறிவது என்று எல்லாவற்றிற்குமே அது அதற்கு என்று குழந்தையின் மூளை சேர்க்யூட் போட்டு, ஒரு அமைப்பை (pattern) உருவாக்குகிறது. தொடர்ந்து பலமுறை குழந்தையின் பெயரைச் சொல்லி அழைத் தீர்களானால், அதன் மூளையில், "தன்னைத் தான் அழைக்கிறார்கள்" என இனங்கண்டறிவதற்கான சேர்க்யூட் கனெக்ஷன்கள் நிகழ்ந்து, நீங்கள் அழைக் கையில் திரும்பிப் பார்க்கக் கற்றுக் கொள்வான்(ள்). இவ்விதமாக, மூன்று வயதாகும் குழந்தையின் மூளையில் 1000 ட்ரில்லியன் கனெக்ஷன்ஸ் உருவாகி இருக்கும். (இது வளர்ந்த மூளையில் இருப்பதை விட இரண்டு மடங்கு அதிகம்) சுமார் பதினோரு வயதில், தேவையில்லாத சேர்க்யூட்களை வெட்டி விட்டு, முக்கியமானவைகளை மட்டும் தக்க வைத்துக் கொள்கிறது.

திரும்பத் திரும்பக் கிடைக்கும் அனுபவங்களின் வாயிலாக மூளையின் சினாப்ஸிஸ்கள் பலப்படுத்தப்பட்டு, தனித் தனி இணைப்புகள் அதற்கென்று உருவாகின்றன. உபயோகிக்கப் படாத இணைப்புகள் கழற்றி விடப்படுகின்றன. (based on "Use or Lose" it principle).

வலது மற்றும் இடது மூளை:

மனித மூளையின் சிந்திக்கும் தன்மை வலது மற்றும் இடது மூளையினால் வேறு-படுகிறது. கீழ்க்கண்ட அட்டவணை வலது மற்றும் இடது மூளையின் வேறுபட்ட சிந்திக்கும் திறனைக்காட்டுகிறது.

நாம் ஒவ்வொருவரும் வலதோ, இடதோ ஏதோ ஒரு மூளையின் ஆதிக்கம் அதிகம் உடையவராக இருக்கிறோம். இரண்டு பக்க மூளையையும் முழுவதுமாக சரிவரப் பயன்படுத்தும்

| LEFT BRAIN FUNCTIONS | RIGHT BRAIN FUNCTIONS |
|---|---|
| uses logic | uses feeling |
| detail oriented | "big picture" oriented |
| facts rule | imagination rules |
| words and language | symbols and images |
| present and past | present and future |
| math and science | philosophy and religion |
| can comprehend | can "get it" (i.e. meaning) |
| knowing | believes |
| acknowledges | appreciates |
| order/pattern perception | spatial perception |
| knows object name | knows object function |
| reality based | fantasy based |
| forms strategies | presents possibilities |
| practical | impetuous |
| safe | risk taking |

புத்திசாலிகளாகவும் ஒரு சிலர் இருப்பர். மனனம் செய்ய, லொஜிக்கைக் கற்றுக் கொடுக்கும் நம் கல்வி முறை பெரும்பாலும் இடது மூளையையே அதிகம் பிரயோகிக்க வகை செய்கிறது. ஆனால், வலது, இடது இரண்டு பக்க மூளையையும் சரி யாகப் பயன்ப்டுத்தப் பயிற்சி பெறும் குழந்தைகளே சூப்பர் குழந்தைகளாக மலரும்.

முழு மூளைத் திறனைப் (whole brain development) பெறுவதற்கு என்னென்ன வழிமுறைகள் என்பதைத் தொடர்ந்து பார்க்கலாம்.

**(தொடரும்)**



# Lumia 925 Catwalk ஸ்மார்ட் செல்பேசி அறிமுகம்!



நோக்கியா தனது புதிய வடிவமைப்பில் உருவான Lumia 925 Catwalk எனும் கைப்பேசியினை அறிமுகப்படுத்தவுள்ளது. வரும் 14ஆம் திகதி லண்டனில் அறிமுகப் படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது. இக் கைப்பேசியானது 1280 x 768 Pixel Resolution, 4.5 அங்குல அளவுடைய OLED தொடுதிரையினை உள்ளடக்கியதாகவும், 1.5GHz வேகத்தில் செயலாற்ற வல்ல Dual-Core Qualcomm Snapdragon S4 Processor, பிரதான நினைவகமாக 1GB RAM ஆகியவற்றினைக் கொண்டுள்ளது.

சேமிப்பு நினைவகமாக 16GB கொள்ளளவினைக் கொண்டுள்ள இக் கைப்பேசியில் 8.7 மெகாபிக்சல்கள் உடைய கமெராவும் பொருத்தப்பட்டுள்ளது.

# புகைப்படங்களை ஐக்கன்களாக மாற்ற இணையத் தளம்

இணையத்தில் பல படங்கள் உள்ளன. இவை அனைத்தும் பல format-களில் (PNG, JPG, GIF, BMP) உள்ளன. அந்தப் புகைப்படங்களை ICON format களாக மாற்றுவதற்கு ஒரு இணையத்தளம் உதவி புரிகிறது.


கீழே தரப்பட்டுள்ள link-இல் சென்று தளத்தை open செய்து கொள்ளவும். அதன் பின் தோன்றும் window-வில் உங்களுக்குத் தேவையான புகைப்படத்தை Browse செய்து உங்கள் கணனியில் இருந்தோ, இணையத்தில் தேடியோ பதிவேற்றம் செய்து கொள்ளவும்.

பின் Convert Now என்பதை click செய்தால் உங்களது புகைப்படம் ஐகானாக மாற்றப்பட்டுவிடும்.

இந்தத் தளம் விண்டோஸ் 7-இற்கு ஏற்ற ஐக்கன்களாக மாற்றவும், ஏற்கனவே ஐக்கன்களாக இருப்பவற்றை புகைப்படங்களாக மாற்றிவிடவும் உதவி புரிகிறது.

இணையத்தள முகவரி - http://convertico.org/

# போட்டோசொப்-29 புதிய கலை நயமிக்க தூரிகைகள்.





போட்டோசொப்பில் சில வடிவத் தூரிகைகள் மட்டும் கொடுத்திருப்பார்கள். ஆனால் விளம்பரம் மற்றும் திரைத்துறை வடிவமைப்பில் வரும் வடிவமைப்புகள் நம்மைப் பிரமிக்க வைத்திருக்கும்.

ஒரே சொடுக்கில் ஒரு ஓவியத்தைப் படைக்க தூரிகைகளை சில வலைத்தளங்கள் இலவசமாக கொடுக்கின்றது. இதைப் பதிவிறக்கம் செய்து நாம் பயன் படுத்த வேண்டியதுதான். சில முகவரிகள் இதோ!

http://getbrushes.com/
http://www.brusheezy.com/
http://www.psbrushes.net/
http://www.brushesdownload.com/brushes.asp

பதிவிறக்கம் செய்த தூரிகைகளை போட்டோசொப்பில் இணைப்பது பற்றிப் பார்ப்போம். போட்டோசொப்பினுள் சென்று பிரஷ் கருவிக்குச் செல்லுங்கள். படத்தில் காட்டியுள்ளபடி முக்கோண ஐக்கனை சொடுக்க தோன்றும் பட்டையில் Load brush.. என்ற தேர்வை கிளிக் செய்து தூரிகையுள்ள கோப்பில் இருந்து பதிவேற்றுங்கள். பெரும்பாலும் ஜிப் வடிவத்தில் தான் சுருக்கிக் கொடுப்பார்கள். விரித்து பிரஷ் தேர்வு செய்து பயன்படுத்துங்கள். FlowerXXXXXXXX .abr என்ற எக்ஸ்ரென்சன் வடிவில் இக்கோப்பு கிடைக்கும். தூரிகை உங்கள் வசமாகட்டும்.




# செல்பேசிகள் தண்ணீரில் விழுந்தால் உடனடியாக சரி செய்வது எப்படி?

சிலர் போன் தண்ணீரில் விழுந்த உடன் அவசர அவசரமாக ரெண்டு உதறு உதறி விட்டு உடனே ஓன் செய்து விடுவார்கள். இதை மட்டும் நீங்கள் செய்யவே கூடாது.

உங்கள் போனில் இருந்து பற்றரி, சிம்கார்ட் ,மெமரிகார்ட் ஆகியவற்றைமுதலில் கழற்றி விடவும். பின்னர் துணி அல்லது டிஸயூ பேப்பர் கொண்டு வெளிப் பாகங்களைத்துடைக்கவும்.



உங்கள் வீட்டில் Vaccum cleaner இருந்தால் அதனை Suction mode இல் வைத்து, இப்போது உங்கள் போனைக் காட்டவும் இதனால் தண்ணீர் ஆவியாகி விடும். Vacuum cleaner இல்லை என்றால் கவலை வேண்டாம். உங்கள் வீட்டில் அரிசி வைத்து இருக் கும் பாத்திரம் இருந்தால் அதில் உங்கள் போனை வைத்து போன் தெரியாதபடி முழுவதுமாக மூடிவிடவும். இதனால் தண்ணீர் முழு வதுமாக அரிசியால் ஈர்க்கப்பட்டு விடும். ஆனால் இதற்கு பொறுமை மிக அவசியம். (குறைந்தபட்சம் இரண்டு மணி நேரம் ).

அத்துடன் ஏதேனும் சூடான கருவி கொண்டு கூட பாதுகாப்பாக நீரை எடுக்க முயற்சி செய்யலாம். Hairdryer போன்றவற்றை முயற்சி செய்யலாம்.

போன் நன்றாகக் காய்ந்த பின் அதில் நீர் இல்லை என்று உறுதி செய்து கொண்ட பின் அதை ஓன் செய்ய முயற்சிக்கவும். பெரும்பாலும் ஓன் ஆகிவிடும், இல்லை என்றால் வேறு பற்றரி இருந்தால் அதைப்போட்டு முயற்சி செய்யவும்.










# வரம்பு மீறிய பேஸ்புக் பாவனையால் மனநலம் பாதிக்கப்படும் – ஆய்வில் தகவல்

பேஸ்புக் உள்ளிட்ட சமூகவலைத்தளங்கள் உங்கள் மனநிலையைப் பாதிக்கக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர். இன்றைய காலகட்டத்தில் இன்டர்நெட், பேஸ்புக், ட்விட்டரை ஏராளமானோர் பயன்படுத்தி வருகின்றனர். நான் குளிக்கப்போகிறேன், சாப்பிடப்போகிறேன், தூங்கப்போகிறேன் என்று தாங்கள் செய்யும் அனைத்தையும் பேஸ்புக் மற்றும் ட்விட்டரில் மக்கள் தெரிவிக்கின்றனர். பலர் அலுவலகத்திலும் வேலைக்கு இடையே பேஸ்புக் மற்றும் ட்விட்டரைப் பயன்படுத்து கின்றனர். அந்த அளவுக்கு அவர்களால் இந்த சமூக வலைத்தளங்கள் இல்லாமல் இருக்க முடியவில்லை.

சமூக வலைத்தளங்கள் மக்கள் மனநிலையைப்பாதிக்கிறது என்பது குறித்த ஆய்வறிக்கை ஒன்று இஸ்ரேல் ஜேர்னல் ஓ·.ப் சைக்யாட்ரி அன்ட் ரிலேடட் சயன்சஸில் வெளிவந்துள்ளது.

பேஸ்புக், ட்விட்டர் போன்ற சமூக வலைத் தளங்களை அதிகமாகப் பயன்படுத்துவதால் அதற்கு மக்கள் அடிக்ட் ஆகிவிடுகின்றனர். இதனால் அவர்களுக்கு எதிர்மறை எண்ணங்கள், குழப்பம், கவலை, படபடப்பு, பிரமை ஆகியவை ஏற்படுமாம்.



பலர் தனிமையை விரட்டப் பேஸ்புக், ட்விட்டரைப் பயன்படுத்தத்தொடங்கி அது இல்லாமல் தாங்கள் இல்லை என்ற நிலைமைக்கு ஆளாகிவிடுகின்றனர். இறுதியில் சமூக வலைத்தளங்களில் கிடைத்த நட்பால் வாழ்க்கையில்பல பிரச்சினைகளை சந்திக்க நேரிடுகிறது. டாக்டர் நிட்சனிடம் சிகிச்சைக்கு வந்த பெண்ணொருவர் பேஸ்புக்கில் கிடையாய் கிடந்து அதில் இருந்து ஒரு நபர் தன்னைத் தொடுவதாக உணர்ந்துள்ளார். அதாவது அவருக்கு அப்படியொரு பிரமை ஏற்பட்டு அவர் பயப்படத் தொடங்கியுள்ளார்.

சமூக வலைத்தளங்களை அதிகம் பயன்படுத்தி மனநிலை பாதிக்கப்படுபவர்கள் முறையாக சிகிச்சை எடுத்துக்கொண்டால் முழுமையாக குணமடையலாம் என்று டாக்டர் நிட்சன் தெரிவித்துள்ளார்.

# யாழ்தேவி வருகிறது

# புளியம்குளம் வரைக்கும்



கொழும்பில் இருந்து ஓமந்தைவரையான யாழ்தேவி. புகையிரதசேவை நடைபெற்று வருகின்றது.

இச் சேவையானது ஒரு சில மாதத்திற்குள் புளியங்குளம் வரை நீடிப்பதற்காக இந்திய அரசாங்கத்தின் நீதியுதவியுடன் நிர்மாணப் பணிகள் அனைத்தும், ஒரு சில வாரத்திற்குள் நிறைவு செய்யப்படும்.

இப் புகையிரத சேவை புளியங்குளம் வரை நீடிப்பதால் 30 வ்ருடங்களுக்கு பின் மீண்டும் புளியங்குளம், கனகராயன குளம், நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆகியு பிரதேச மக்கள் இலகுவாக புளியங்குளத்தில் இருந்து புகையிரத சேவையினை மேற்கொள்ளமுடியும். என அப் பிரதேசங்களில் வாழும் மக்கள் நம்பிக்கை தெரிவித்தமை குறிப்பிடதக்கது. (க)

## முடிக்கப்படாத வேலை

(வேலணை)

யாழ். - குறிகட்டுவான் பிரதான வீதியின் துறையூர் பிரதேசத்தில் 100 மீற்றர் தூரத்திற்கு வீதியின் ஒரு பக்கத்திற்கு மட்டும் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது.

மழை காலங்களில் நீர் தேங்கி நிற்காது வழிந்தோடக் கூடிய முறையில் அமைக்கப் பட்டுள்ளது. எனினும் இவ் வேலைகள் தொடர்ந்து முன்னெடுக்காது நீண்ட காலமாக கிடப்பில் போடப்பட்டுள்ளதால் அவ்வீதியூடாக ப்யணம் செய்யும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுதொடர்பாக கவனமெடுத்து பயணிகளின் போக்குவரத்துக்கு உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (21)

## தடை தாண்டல் பரீட்சை

கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்பம் அல்லாத பிரிவு 2 III ஆம் தரத்தின் உத்தயோத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை 2012 நடைபெறவுள்ளது.

சேவைப்பிரிவுகளான, ஆவண உதவியாளர்கள் அமைச்சின் புள்ளிவிபர செயற்பாட்டாளர்கள், புள்ளி விபர பதியுனர்கள், பாடசாலை புள்ளிவிபர பதியுனர்கள், உதவியாளர்கள் மாணவர் விடுதி உதவியாளர்கள், மாணவர் விடுதிப் பொறுப்பாளர், இல்ல நிர்வாகி, உதவி இல்ல நிர்வாகி, இரசாயன கூட உதவியாளர், தொழில் நுட்ப உதவியாளர்கள், ஸ்ரியோ வகையின் இயந்திர செயற்பாட்டாளர்கள் ஆகிய பதவிகளுக்குரிய பரீட்சை பரீட்சைத் திணைக்களத்தினால் யூலை மாதம் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்கான கட்டணம், விண்ணப்பப் படிவம், பரீட்சை ஒழுங்குமுறைகள் போன்ற விபரங்களை மே 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரச வர்த்தமானியில் பார்வையிடலலாம். (105)

## இளைஞர் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றியீட்டியோர்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் பிரதேச செயலகப் பிரிவுகளில் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற யூத் நாடாளுமன்ற தேர்தலில் பின்வருவோர் வெற்றிபெற்றுள்ளார்கள்.

கலொக் கணநாதன் உஷாந்தன் (சண்டிலிப்பாய்), ஜோதிவேல் கோர்டன் (சங்கானை), இராசரெத்தினம் பிரணவரூபன் (உடுவில்), சர்மிளா தேவராசா (பருத்தித்துறை), கிருஸ்ணன் புவி (ஊர்காவற்றுறை), அன்ரன் கிறிஸ்ரியன் அருள்ஜீவன் (நெடுந்தீவு).


மேலும் போட்டியின்றி ஏகமனதாக தெரிவானவர்களாக அன்ரன் யோகநாதன் அன்ரன் யோவானந்தன் (நல்லூர்), பரமயோகநாதன் இராஜசோபனா (யாழ்ப்பாணம்), செல்வராசா அகில்ராஜ் (தெல்லிப்பளை), தங்கராசா பிரதீபன் (காரைநகர்), பிறைசூடி விசிதரன் (கோப்பாய்), சிவபாதம் சிவச்செல்வம் (கரவெட்டி), சிவானந்தன் பார்த்தீபன் (வேலணை), சதானந்தன் மதியுகன் (சாவகச்சேரி), தங்கராசா கார்த்தீபன் (மருதங்கேணி)

## பணிக்கூற்று காட்சிப்படுத்தல்

(வலிகாமம்)

ஒரு நிறுவனத்தின் தூர நோக்கும், அதை அடைவதற்கான பணிக்கூற்றும் அந்நிறுவனத் தலைவர் முதற்கொண்டு சகல அலுவலகளும் அறிந்திருப்பது அவசியமாகும்.

அப்போதுதான் அந்நிறுவனத்தின் இலக்கு எட்டப்படும் அந்நிறுவனத்தின் செயற்பாடுகளினால் சமூகம் பயன்பெறும் இந்த அடிப்படையில் சிந்தித்துச் செயற்படும் வலிகாமம் கல்வி வலயத்தில் புதிய கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராசா




கல்வி வலயத்திற்கான தூர நோக்கு, பணிக்கூற்று என்பவற்றை வலயத்தின் வாசலில் அமைத்து அலுவலகரும், அற்கு அதிபர், ஆசிரியர், பெற்றோர்கள் காணும் வயில் அழகிய விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தியுள்ளனர்.

இத்துடன் தூர நோக்கு விளம்பரப் பலகையில் இரு மருங்கிலும் வலயத்தின் இலட்சனையும், இலங்கை அரசின் சின்னத்தினையும் அழகிய டிஜிற்றல் பிறிண்டில் காட்சிப்படுத்தியுள்ளனர்.

இத்தகைய ஒரு காட்சியை வடமாகாணத்தின் கல்வி வலயங்களில் காண்பது அரிது என்றவகையில் இவரது இந்த முன்மாதிரியான அலுவல்களை அனைவரும் பாராட்டியுள்ளனர். (06)

## பதிவிறக்கப் பெட்டகம்

இரண்டு கழுதைகள் பேசிக் கொண்டன. முதல் கழுதை, "நீ ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறாய்? என்னுடன் வா... சந்தோஷமாகத் திரியலாம்" என்றது.

"எனக்கும் ஆசைதான்... ஆனால்...." என்று இழுத்தது இரண்டாவது கழுதை.

"என்ன ஆனால்..." சற்றுக் கோபப்பட்டது முதல் கழுதை.

"என் முதலாளிக்கு ஒரு மகள். அவர் தினமும் அவளைத திட்டி, "நீ திருந்தாவிட்டால் இந்தக் கழுதைக்குத்தான் உன்னைக் கட்டி வைப்பேன்" என என்னைக் காட்டிச் சொல்கிறார். அதுதான் யோசிக்கிறேன்" என்றது இரண்டாவது கழுதை.

*** *** *** ***

ஒரு கணவன் இரவு தாமதமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தான். மனைவி மிகவும் வருத்தப்பட்டுச் சொன்னாள்:

"மன்னிச்சுக் கொள்ளுங்கோப்பா... உங்களுக்காக ஆசையாய் ஒரு புது சமையல் ஐயிட்டம் பண்ணி வைச்சேன். அதை நம்ம நாய் சாப்பிட்டுட்டுப் போட்டுது"

கணவன் நிதானமாகச் சொன்னான்:

"கவலைப்படாதே... வேறு நாய் வாங்கிக் கொள்ளலாம்"

*** *** *** ***

"ஐம்பது ஆண்டுகளாக நடந்து வரும் கடை" என்று ஒரு கடைக்காரர் பெருமையாக விளம்பர பலகை ஒன்றை எழுதி வைத்திருந்தார்.

அடுத்த கடைக்காரர் ஒரு பலகை எழுதி மாட்டி வைத்தார். எப்படி?

"எங்கள் கடைய்யை நேற்றுத்தான் தொடங்கினோம். இங்கு பழைய ஸ்ரொக் எதுவுமில்லை"

*** *** *** ***

அந்த நீதிபதி மிகுந்த தெய்வபக்தியுடையவர். நகைச்சுவையுடன் நல்ல பேசும் திறனுடைய இவரை நாத்திக அமைப்பு ஒன்று ஒரு கூட்டத்திற்குப் பேச அழைத்திருந்தது.

அவர் பேசத் துவங்கியவுடன் ஒருவர் எழுந்து, "எனக்கு கடவுளிடம் நம்பிக்கை இல்லை" என்று பெருமிதத்துடன் கூறினார்.

உடனே நீதிபதி, "அதனால் கடவுளுக்கோ, ஆத்திகர்களுக்கோ நஷ்டம் ஒன்றுமில்லை." என்று கூறினார்.

நீதிபதியை மடக்க எண்ணிய அவர் சிறிது நேரம் கழித்து மறுபடியும் எழுந்து, "நம் கண்களுக்குத் தெரியாத எதையும் நம்புவது முட்டாள்தனம் என்று நினைக்கிறேன்" என்றார்.

உடனே நீதிபதி, "அய்யா, உங்கள் மண்டைக்குள் இருக்கும் மூளை என் கண்களுக்குத் தெரியவில்லை. அதற்காக உங்களுக்கு மூளை இல்லை என்று நான் எடுத்துக் கொள்ள முடியுமா?" என்றார்.

*** *** *** ***

பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த வின்ஸ்டன் சேர்ச்சிலின் மருமகன் ஒரு நடிகர். அவருடன் ஏற்பட்ட மன வருத்தம காரணமாக சேர்ச்சில் அவருடன் பேசிக் கொள்வதில்லை. ஆனால் மருமகனுக்கோ தனது மாமனாருடன் நெருங்கிப பழக வேண்டும் என்கிற ஆசை இருந்தது.

இருவரும் ஒரு விருந்தின் போது சந்தித்துக் கொண்டார்கள்.

இதுதான் தக்க சமயம் என்று நினைத்த அவரின் மருமகன் சேர்ச்சிலிடம், "உலகிலேயே பெரிய ராஜதந்திரி என்று பெயர் பெற்றவர் யார்?" என்று கேட்டார்.

அதற்கு சேர்ச்சில், "இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி" என்று பதில் அளித்தார்.

இதைக் கேட்டதும் அவரது மருமகனும், மற்றவர்களும ஆச்சரியப்பட்டனர்.

"வெறுமனே வேடிக்கைக்காக சொல்கிறீர்கள். முசோலினி அப்படி என்ன பெரிய ராஜதந்திரியா?" என்று கேட்டார் அவரது மருமகன்.

சேர்ச்சில் ஆற அமர, "இதிலென்ன சந்தேகம்? தனக்குத தலைவலியாக இருந்த தன் மருமகனை அவரே சுட்டுத் தள்ளி விட்டார்!" என்றார்.

*** *** *** ***

சாகப் போகும் நிலையிலிருந்த மூன்று பேரிடம் டாக்டர் "அவர்களுடைய கடைசி ஆசை என்ன?" என்று கேட்டார்.

அதற்கு முதலாமவன் சொன்னான், "தான் பாதிரியாரிடம் பாவ மன்னிப்புக் கேட்க விரும்புவதாக"

இரண்டாவதாக இருந்தவர் "தன்னுடைய குடும்பத்தவரகள் அனைவரையும் சந்திக்க விரும்புவதாக"ச் சொன்னார்.

மூன்றாவது ஆளோ "நான் வேறு ஒரு நல்ல டாக்டரைப் பார்க்க விரும்புகிறேன்" என்று சொன்னார்.

# மத்தள விமான நிலையத்துக்கு செயற்கை முக்கியத்துவமா?

## அரசைச்சாடுகிறது எதிர்க்கட்சி

(கொழும்பு)

மத்தள விமான நிலையத்திற்கு முக்கியத்துவத்தை செயற கைத்தளமாக அதிகரிக்கும் முகமாக கட்டுநாயக்கா விமான நிலையத்தை தினசரி எட்டு மணிநேரம் மூடி வைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுவருவதாக எதிர்க்கட்சிகள் அரசு மீது குற்றம் சுமத்தியுள்ளன.

அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து விமான நிலையத்தை தினமும் 8 மணிநேரம் மூட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினால் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஓடுதளத்தில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பது காரணம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மூடப்படவுள்ள இந்த 8 மணி நேரத்தில் இலங்கைக்கு வரும் விமானங்கள் அம்பாந்தோட்டை மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

தற்போது, கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஓடுதளங்கள் பராமரிப்பு பணிகளுக்காக ஒரு மணிநேரம் மூடப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக கொழும்பு வரும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கவுள்ளதாக விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

# அரபுவலய நாடுகளுடன் உறவை வலுப்படுத்த துடிக்கின்றது அரசு


(கொழும்பு)

ஆபிரிக்க வலயநாடுகளுடன் உறவை வலுப்படுத்தும் முயற்சியில் இலங்கையின் இராஜதந்திரிகள் ஈடுபட்டிருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதியுடன் இணைந்து உகண்டாவுக்கு பயணமாகிய இராஜதந்திரிகள் குழுவினரே இந்த முயற்சியில் குதித்துள்ளனர்.

நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக, உகண்டாவிற்கு சென்றுள்ளார். ஜனாதிபதியின் இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது அந்நாட்டு ஜனாதிபதி யோவரி முசவேனி உள்ளிட்ட பலருடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆபிரிக்க நாடுகளுடனான ராஜதந் திர உறவுகளை விஸ்தரித்தல், இலங்கைக்கு எதிராக மேற்கொண்டு வரும் பிரசாரங்களை முறியடித்தல், இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளல் போன்ற நோக்கங்களுக்காக இந்த விஜயம் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்நாட்டின் பல முக்கியஸ்தர்களுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# அரசியலுக்காக மட்டுமல்ல சமூகவிடுதலைக்கும் குரல் கொடுப்போம்





(யாழ்ப்பாணம்)

அரசியல் நோக்கத்துக்காக மட்டுமல்லாமல் சமூக பொருளாதார விடுதலைக்காகவும் நாம் உழைத்துவருகிறோம் என்றும். வேறெந்த அரசியல் கட்சிகளும் தமிழ் மக்களது உரிமைகளை மீட்டுத்தரப் போவதில்லையென ஈ.பி.டி.பி.யின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற யாழ் மாவட்ட சிகை ஒப்பனையாளர் ஒன்றியத்தை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாம் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்ட காலத்தில் வெறுமனவே தேச விடுதலைக்காக மட்டுமோ, ஜனநாயக வழிமுறையில் உழைத்துக் கொண்டிருக்கும் இன்று நாம் வெறுமனவே அரசியலுக்காக மட்டுமோ குரல் கொடுப்பவர்கள் இல்லை. அன்றிலிருந்து இன்று வரை அரசியல், பொருளாதார, சமூக விடுதலைக்காக தொடர்ந்து போராடியும், வாதாடியும் வருகின்றோம்.

எமது மக்களின் வாழ்வியல் எழுச்சி, வறுமையில் இருந்து எழுவதற்கான மீட்சி, அழிந்து போன எம் தேசங்களை மறுபடியும் தூக்கி நிறுத்துவதற்கான அபிவிருத்தி மற்றும் அரசியலுரிமை, சுதந்திரம் ஆகியவற்றிற்காகவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும், கட்சித் தோழர்களும் உறுதியுடன் உழைத்து வருகின்றனர். இதனைத். தவிர வேறெந்த அரசியல் கட்சிகளும் உங்களது உரிமைகளை மீட்டுத்தரப் போவதில்லையென்பதே கடந்தகால வரலாறு எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஒன்றியங்கள் துணைச் சங்கங்களின் இணக்கப்பாட்டுடனும் ஆதரவுடனும் இயங்க வேண்டுமென்பதுடன், கடந்த காலத்தில் யாழ். மாவட்ட சிகையலங்கரிப்பாளர் சங்கங்கள் சரிவர இயங்காத சூழல் காணப்பட்டது. எனவே இக் குறைபாட்டை நீக்கும் வகையில் பொருத்தமான நிர்வாக ஆளுமைமிக்க சங்கத்தை உருவாக்க வேண்டும் என்ற தேவை எம் முன்னே எழுந்தது.

இச் சங்க உருவாக்கத்தின் மூலம் நீங்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளை இனங் கண்டு தீர்ப்பதற்கான வழிவகைகள் ஏற்படும். இவ் ஒன்றிய உருவாக்கத்தில் இரண்டு ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது ஒன்று நிர்வாகத் தெரிவு மற்றையது ஒன்றியச் செயற்பாடுகள் என்பன எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பதே அதுவாகும்.

# எம்மை செல்லாக்காசாகக் கருதுவது ஏன்? வவுனியா பிரதேச சபைத்தலைவர் கேட்கிறார்

(வவுனியா)

அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு எம்மை தற்போது அழைப்பதுமில்லை நடந்த அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் எம்மால் வழங்கப்பட்ட கோரிக்கைகளை கவனமெடுப்பதுமில்லை என வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் தலைவர் க.சிவலிங்கம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களை சந்தித்த அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு தமிழ் பிரதேசசபையினர் ஒத்துழைப்பு வழங்குவதில்லை என பொருளாதார அபிவிருத்தி பிரதிஅமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே வவுனியா மாவட்ட செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற அபிவிருத்திக் குழு கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இது உண்மைக்குப் புறம்பானது. இது தொடர்பில் பிரதி அமைச்சருக்கு தவறான தகவல் வழங்கப்பட்டுள்ளது.

ஏனெனில் நாம் 2012ஆம் ஆண்டுக்கான நெல்சிப் வேலைத் திட்டத்தில் 6 வேலைத்திட்டத்தினை வழங்கியிருந்தோம். எனினும் மூன்று வேலைத்திட்டங்களுக்கு மாத்திரமே அபிவிருத்திக் குழு அனுமதியளித்ததுடன் மாத்திரமில்லாது வேறு மாவட்டத்தில் உள்ள சாளம்பபுர என்ற கிராமத்தில் பூங்காவொன்றினை அபிவிருத்தி செய்யுமாறும் சேமமடு கிராம அலுவலர் பிரிவில் இல்லாத கிராமம் ஒன்றிற்கு வீதி அமைக்குமாறும் அத்துடன் திருத்தம் செய்யப்பட்ட வீதிகளை மீண்டும் திருத்தம் செய்யுமாறும் கோரி முறையற்ற விதத்தில் வர்த்தக கைத்தொழில் அமைச்சின் கடிதத்தலைப்பில் அவ் அமைச்சரின் இணைப்பு செயலாளர் கையொப்பமிட்டு எமக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

எனவே, இவ்வாறான நிலையில் எமது சபையினால் ஏகமனதாக எடுக்கப்படும் முடிவுகளை மாற்றுமாறும் தமக்குத் தேவையான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுமாறும் கோரப்படுவதானது எமது சேவைக்கு இடையூறு விளைவிப்பதாக அமைகின்றது.

இது மாத்திரமின்றி வவுனியா அரசாங்க அதிபராக திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் இருந்தபோது எமக்கு சில அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவற்றில் நாம் தவறாது பங்கேற்று எமது பிரதேசசபைக்குட்பட்ட கிராமங்களின் தேவைகளை இனம்காட்டியிருந்தோம். எனினும் தற்போது எமக்கு எவரும் அழைப்பு விடுப்பதில்லை.

இவ்வாறான நிலையில் நாம் அபிவிருத்திக்கு இடையூறு விளைவிப்பதாக தெரிவித்து சிலர் அரசியல் செய்து வருகின்றமை கண்டிக்கத்தக்க விடயமாகும் எனத் தெரிவித்தார்.

# அதிகாரப்பகிர்வு தான் ஐக்கியத்தை உருவாக்கும்


## விமலுக்கு புரியாதா என்கிறார் ராஜித


அதிகாரப்பகிர்வு தான் நாட்டை ஐக்கியப்படுத்தும் நாடு பிளவுபடுவதைத்தடுக்க வேண்டுமாயின அதிகாரப்பகிர்வு மிகவும் அவசியம் இந்த தத்துவம் ஏன் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு புரியவில்லை என்று கேள்வி எழுப்பியுள்ளார் அமைச்சர் ராஜித சேனரத்தின நாடுகள் பிளவுபடாதிருப்பதற்கு தீர்வு அதிகாரப் பரவலாக்கம் தான் எனவும் அதிகாரங்களைப் பகிர்வதன் மூலம் நாடுகள் பிளவுபடும் எனக் கூறுவது கேலிக்குரியது எனவும் அமைச்சர் ராஜித சேனரத்தின மேலும் தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்சவுக்கு பிரிவினைவாதம் என்ன என்பது தெரியாது எனவும் உலக நிலைமைகளை அறியாத கிணற்றுத் தவளைகளின் பேச்சுக்களை கவனத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்திற்கு மேலும் அதிகாரங்களை வழங்கி, மாகாண சபையை போஷிக்க வேண்டும் எனவும் தேர்தலில் எந்தத் தரப்பு வெற்றி பெற்றாலும் அது அரசாங்கத்திற்கு பிரச்சினையில்லை எனவும் ராஜித கூறியுள்ளார்.

வட மாகாண சபைத் தேர்தலை பிரிவினைவாத அதிகாரங்களுடன் நடத்த நடவடிக்கை எடுத்தால், தாம் அமைச்சர் பதவியைத் துறக்கத் தயாராக இருப்பதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே ராஜித சேனரத்தின இதனை தெரிவித்துள்ளார்.







பருத்தித்துறை வீதி அகலிப்பின் போது கல்வியங்காடு சந்திக்கு அண்மையிலும், ஆனைப்பந்தி இந்து ஆலயம் மற்றும் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாகவும் மூடப்படாமல் காணப்படும் மூன்று கிணறுகளைப் படங்களில் காணலாம். (137)

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்



தொடர்பாடல் ஊடகத்துறைக்கற்கை - 1

P.இராஜேஸ்வரன் (ஆசிரிய வள ஆளணி, தொடர்பாடல் ஊடகக்கற்கை நெறி)
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## பகுதி 1

1) பின்னுட்டல்(feedback) தொடர்பாடல் தொழிற்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக அமையக்கூடியது?
1. அபிப்பிராயங்கள்　2, ஒருவழித்தொடர்பு　3. அறிக்கையிடல்
4. கதை புனைதல்　5. கதை உருவாக்கல்

2) பெர்லோ(Berlo) என்பவரின் தொடர்பாடல் மாதிரியின் அடிப்படையில் பெறுநர்களின் நிலையை தீர்மானிப்பவையாக சுட்டிக்காட்டப்படுபவை.
1. ஒத்துணர்வு, செவிமடுத்தல் திறன்　2. கேட்டல் மற்றும் அறிவுநிலை
3. அறிவுத்திறன், கிரகித்தல் திறன்　4. ஆயத்தம், இணக்கத்தன்மை
5. மனநிலை, ஆயத்தநிலை

3) "நிறுவனம் ஒன்றின் முறைசார் உள்ளக தொடர்பு வகையில் இடம்பெறுகின்ற மேல் இருந்து கீழ் நோக்கிய தொடர்பாடலின் போது **சுற்றறிக்கை** எழுத்து மூல வடிவமாக பயன்படுத்தப்படுகின்றது". பின்வருவனவற்றில் சுற்றறிக்கை தயாரிக்கப்படும் சந்தர்ப்பம் அல்லாதது
1 .நிறுவன ஊழியரின் திடீர் மரணம் தொடர்பான செய்திக்கு
2. விசேட நிகழ்வொன்றுக்கான அறிவுறுத்தலுக்கு
3. விசேட விடுமுறை பற்றிய அறிவுறுத்தல்களுக்கு
4. விசேட கொடுப்பனவு பற்றிய விபரங்களை தெரிவிப்பதற்கு
5. ஊழியர் ஒருவரின் கடமைகள், பொறுப்புகள் பற்றிய செய்தியை தெரிவிப்பதற்கு

4) "சொற்கள் மூலம் ஒருவர் இன்னொருவருடன் தகவல் பரிமாற்றம் செய்யும் முறை வாய்மொழி மூல தொடர்பாடல் எனப்படும்." பின்வருவனவற்றில் இத்தொடர்பாடலின் பலவீனமாக கொள்ளமுடியாதது
1. வாய்மொழி தொடர்பாடலின் நம்பகத்தன்மை இழிவளவை கொண்டமைந்தது
2. நீண்டகால தேவைக்கு பேணிப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.
3. நீண்டகால தேவைக்கு பேணிப் பாதுகாத்துக் கொள்ளமுடியாது.
4. குறித்த செய்தியை மீண்டும் மீண்டும் அனுப்ப இத்தொடர்பாடல் பொருத்தமற்றது.
5. இரகசியத் தன்மை பேணுவது கடினமானது.

5) நபரிடைத் தொடர்பில் உயர்மட்ட பின்னுட்டல் பற்றி மிகத் தெளிவாக குறிப்பிடும் தொடர்பாடல் மாதிரி
1. ஷெனோன் வீவர் மாதிரி　2. பெர்லோ மாதிரி
3. டீ.லாஸ்வெல் மாதிரி　4. ஒஸ்குட் ஷ்ராம் மாதிரி
5. வில்பர் ஷ்ராம் மாதிரி

6) எமது பிரதேசம், பரீட்சயமான இடம் அல்லது ஆட்கள் மற்றும் குழுக்கள் பற்றிய செய்திகள் வெகுசன ஊடகங்களில் அறிக்கையிடப்படுதல்
1. காலத்திற்கு ஏற்ற செய்தி அறிக்கையிடல்
2. அசாதாரண செய்தி அறிக்கையிடல்
3. முரண்பாட்டு உணர்திறன்மிக்க செய்தி அறிக்கையிடல்
4. ஆர்வமூட்டும் செய்தி அறிக்கையிடல்
5. அண்மித்த தன்மையிலான செய்தி அறிக்கையிடல்

7) பின்வருவனவற்றில் வானொலி ஊடகத்திறன் அல்லாதது
1. செவிமடுத்தல் திறன்　2. உச்சரிப்புத் திறன்
3. பிரதியாக்கத்திற்கான படைப்பாக்கத் திறன்　4. காட்சியாக்கத் திறன்
5. பல்குரல் வெளிப்பாட்டுத் திறன்

8) வெகுசன தொடர்பாடலில்
**A** – செய்தி அறிக்கைகளின் தொகுப்பு பல்வேறுபட்ட இயல்புடைய பெறுநர்களை கொண்டகுழுவிற்கு அறிக்கை செய்யப்படுதல்
**B** – செய்திகளை வேகமாகவும் தொடர்ச்சியாகவும் பரந்துபட்ட குழுவொன்றிற்கு முன்வைத்தல்
**C** - இயந்திரங்களை பயன்படுத்துகின்ற மக்கள் குழுவிற்கு செய்திகளை எடுத்துச் செல்லல்
1. A மட்டும் உண்மையானது　2. B மட்டும் உண்மையானது
3. C மட்டும் உண்மையானது　4. Aயும் Cயும் மட்டும் உண்மையானது
5. A,B,C எல்லாம் உண்மையானது

9) "செய்தியறிக்கையிடலில் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு, ஆசைகள், ஆழமான பற்று ஆகியவற்றில் ஒன்றை பிரதிபலிக்ககூடாது" என்ற குணாம்சம் தொடர்புபட்டமைவது: செய்தியின்
1. துல்லியத்தன்மையுடன் (Accuracy)　2. நடுநிலைத்தன்மையுடன் (Balance)
3. தெளிவுத்தன்மையுடன் (Clarity)　4. நம்பகத்தன்மையுடன் (Credibility)
5. அண்மித்த தன்மையுடன் (Proximity)

10) "எழுத்துமூலமான இதழ்வழிச் செய்தியானது பார்வையை மட்டும் ஈர்த்து செய்தியை புரிய வைக்கும் ஆனால் ஏனைய ஒலி,ஒளி சாதனங்கள் கண், செவிப்புலன்களை ஈர்த்து செய்தியை புரியவைக்கின்றன. எனவே செய்தி சொல்லும் வழி எதுவாக இருந்தாலும் அவ்வூடகத்தை தெரிவு செய்பவருக்கு பொருந்தும் வகையில் அமையவேண்டும" என ஊடகம் (Channel) பற்றிய முக்கியத்துவத்தை எடுத்துக்கூறியவர்
1. மார்ஸல் மெக்லூகன்　2. எட்வேட் சபிர்
3. பெர்லோ　4. லாஸ்வெல்
5. டென்னிஸ் மக்குவில்

11) தொடர்பாடல் எண்ணக்கரு (கோட்பாடுகள்) தொடர்பான இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.
**A** – ஊடகங்கள் அரசின் நோக்கங்களை நிறைவேற்ற செயலாற்றல்.
**B** – சுதந்திரமான ஊடக போக்கு காணப்படல்.
**C** – சமூகத் தொகுதியில் புதிய எண்ணக்கருக்களை , சிந்தனைகளை உருவாக்குதல்.
**D** – பொதுவான புரிந்துணர்வை சமூகத்தில் கட்டியெழுப்புதல்.
**E** – பேண்தகு மாற்றங்களை சமூகத்தில் உருவாவதற்கு பொருத்தமான நடத்தைகளுக்கு ஊக்குவிப்பு வழங்குதல்.

மேற்குறித்த கூற்றுகளில் அபிவிருத்தி தொடர்பாடல் எண்ணக்கருவை குறிப்பன
1. A யும் B யும்　2. B யும் D யும்
3. D யும் C யும்　4. B யும் C யும் D யும்
5. C யும் D யும் E யும்

12) நீங்கள் ஏதாவது ஒன்றை உங்கள் நண்பருக்கு கூறுகின்றீர்கள். இதில் உள்ள தொடர்பாடல் கூறுகளின் ஒழுங்கு
1. தொடர்புபடுபவா → தகவல் → பின்னூட்டல்
2. தொடர்புபடுபவர் → தகவல் → ஊடகம்
3. தொடர்புபடுபவர் → பெறுநர் → தகவல்
4. தொடர்புபடுபவர் → பின்னூட்டல் → கிரகிப்பவர்
5. தொடர்புபடுபவர் → தகவல் → பெறுநர்

13) ரவி தனது கையடக்கத் தொலைபேசி இணைப்பை துண்டித்தமையை முன்னிட்டு பணக்கொடுப்பனவு ரசீதை தொலைபேசி தலைமையகத்திற்கு கையளிக்கவேண்டியிருந்தது. அதற்காக அவர் அந்த அலுவலகத்திற்கு செல்வது தேவையற்றது எனவும் ரசீதை தொலைநகல் (Fax) மூலம் அனுப்புவது போதுமானது எனவும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதற்கான வலுவான காரணியாக அமையக்கூடியது
1. தொலைநகல் மூலம் அனுப்பும் போது துரிதமாக அனுப்பமுடியும்
2. செய்தி அனுப்பும் இடத்திலும் பெறும் இடத்திலும் தொலைநகல் இயந்திரம் காணப்பட்டமையால்
3. அலுவலகத்திற்கு செல்வதை விட தொலைநகல் மூலம் அனுப்புவது இலாபகரமானது
4. தொலைபேசி இணைப்புடன் தொலைநகல் இயந்திரம் இயங்கும் தன்மையை கொண்டமைவதால்
5. ரசீதில் குறித்துள்ள எல்லா எழுத்துத் தரவுகளையும் தொலைநகல் ஊடாக உறுதிப்படுத்தப்பட்ட வகையில் பெறமுடியும் என்பதால்

14) ஊடக ஆய்வு ஒன்றிற்காக தகவல் திரட்டுவதற்கான வினாக்கொத்து ஒன்றை தயாரிக்கின்ற போது பின்பற்ற வேண்டிய நடைமுறையாக அமைவது
1. அதிக தகவலை பெற அதிக எண்ணிக்கையிலான வினாக்களை உள்ளடக்குதல்.
2. விபரமான பின்னணி விடயங்களை பெறும் வகையில் வினாக்களை வடிவமைத்தல்.
3. குறுகியதும் தெளிவானதுமான விடைகளை பெறும் வகையில் வினாக்களை ஒழுங்கமைத்தல்.
4. ஆழமான விடைகளை காரண காரியத் தொடர்புடன் பெறும் வகையில் ஒழுங்கமைத்தல்.
5. ஆர்வமூட்டுகின்ற வகையிலும், அதிக தகவலை பெறும் வகையிலும் உள்ளடக்குதல்.

15) மிக முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்கு கூட்டப்படும் குழு
1. கொள்கைக் குழு　2. எழுமாறான குழு
3. தெரிவுக் குழு　4. கற்றல் குழு
5. செயற்பாட்டு குழு

16) "ஞாபகத்தில் பதிவு செய்தல் செயன்முறை மூளையின் ஆற்றலுடன் தொடர்புபட்டதாகும்" பின்வருவனவற்றில் இடது மூளையின் ஆற்றல்கள் பற்றி உளவியலாளர்கள் குறிப்பிடும் செயன்முறை தொகுதியாக அமையக்கூடியது
1. கணித ஆற்றல், வகைப்படுத்தல்　2. இனங்காணல, தர்க்கம்
3. வகைப்படுத்தல, விளக்கமளித்தல்　4. பகுத்தறிவு, ஆக்கத்திறன்
5. விமர்சனம், சிக்கலான கோலம் பற்றி புலக்காட்சி

17) ஊடகக்கலாசாரமும் சமூகமாற்றமும் பற்றிய கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன
**A** – ஊடகக் கலாசாரத்தின் நிமிர்த்தம் ஏற்படும் சமூக மாற்றத்தினால் கலாசார மோதல் ஏற்படுகின்றன
**B** – சமூகத்தின் உணர்வுபூர்வமான நடத்தைகள் மீது ஊடக கலாசாரம் மேலோட்டமான தாக்கத்தை செலுத்துகின்றன
**C** – சிறுவர் இளைஞர் பெண்களின் நடத்தைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன

இவற்றுள் மிக சரியாக அமைவன
1. A மட்டும்　2. B மட்டும்
3. A யும் C யும் மட்டும்　4. B யும் C யும் மட்டும்
5. A, B, C எல்லாம்

18) ஊடக மொழி பயன்பாட்டின் பலமாக அமையாதது
1. பயன்படுத்தப்படும் மொழி சமூகத்தில் எல்லோராலும் விளங்கமுடியாதிருத்தல்
2. சுருக்கமாகவும், ஆக்கரீதியாகவும் மொழியை பயன்படுத்தமுடியும்
3. உணர்வுகளை பெறுநர்களிடத்தில் தூண்டமுடியும்
4. பயனாளிகளின் கவனத்தை ஈர்க்க முடிதல்
5. ஊடக சிறப்பு வகைக்கு ஏற்ப மொழியை பயன்படுத்தமுடிதல்

19) "சீரான ஆளிடைத் தொடர்பாடலுக்கு கேட்டல் தேர்ச்சி பயனுள்ளதாக அமையும்" பின்வருவன கேட்டல் செயன்முறையின் நான்கு கட்டங்களாகும்
A – விளங்குதல்　B – மதிப்பிடல்
C – கேட்டல்　D – எதிர்விளைவு

மேற்குறித்த செயன்முறைகளின் படிமுறை ஒழுங்காக அமைவது
1.B,C,D,A　2.C,A,B,D　3.B,C,D,A
4.A,B,C,D　5.D,B,A,C

20) மாற்று ஊடக மற்றும் எதிர்ப்பு ஊடக இயல்புகள் பின்வருமாறு
**A** – உள்ளடக்கம் பிரதான ஊடக நீரோட்டத்தில் இருந்து வேறுபட்டது
**B** – பங்குபற்றல் தன்மையை மேம்படுத்தல்
**C** – மக்கள் மயம் வலுப்பெறல்
**D** – வெகுஜன ஜனரஞ்சகர நுகர்வு கலாசாரத்திற்கு முற்றிலும் மாறுபட்டது
**E** – சமூகத்தின் சிந்தனையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்தப்படுதல்

மாற்று ஊடகம் மற்றும் எதிர்ப்பு ஊடக இயல்புகளை மிகப்பொருத்தமாக பிரதிபலிப்பன
1. A,B ஆகியன மாத்திரம்
2. A,B,E ஆகியன மாத்திரம்
3. B,C,D ஆகியன மாத்திரம்
4. A,D,E ஆகியன மாத்திரம்
5. A,C,D,E ஆகியன மாத்திரம்

21) வகுப்பறையில் மாணவர்கள் செய்தி என்ற எண்ணக்கரு தொடர்பாக தெரிவித்த கருத்துகளுக்கு ஏற்ப

**A** – பொறித்தொகுதிகளை மட்டும் கொண்டு தீர்மானிக்கப்படும்
**B** – அந்தரங்கமான இயல்பை கொண்டதல்ல
**C** - கூட்டு முயற்சியின் வெளியீடாகும்
**D** - இலாபத்தை நோக்காக கொண்டு பெரும்பாலும் அமைந்தது
**E** – குறித்த ஒரு மக்கள் கூட்டத்திற்கு மாத்திரம் பொருந்துவன

செய்தி தொடர்பிலான இயல்பை பிரதிபலிக்ககூடியவை
1. A மட்டும்
2. B மட்டும்
3. B யும் C யும் மட்டும்
4. C யும் E யும் மட்டும்
5. A யும் D யும் E யும் மட்டும்

22) o அனைவருக்கும் தெரியும் வண்ணம் காட்சிப்படுத்த வேண்டும்.
o இடமிருந்து வலமாக எழதுதல் வேண்டும்.
o வரிகளுக்கு இடையில் இடைவெளிவிட்டு தெளிவாக எழுதவேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள அறிவுறுத்தல்கள் பின்பற்ற வேண்டிய ஊடக பயன்பாடக அமையக் கூடியது
1. பக்கப் புரட்டி பயன்பாட்டின் போது
2. ஊடுகாட்டித் தாளின் போது
3. காந்தப் பலகையில் காட்சிப்படுத்தும் போது
4. கரும்பலகையை பயன்படுத்தும் போது
5. மேந்தலை எறிவை பயன்பாட்டின் போது

23) மொழியின் பயன்நிலைகளில் பிரதியாக்கமும் ஒன்றாகும். பின்வரும் கூற்றுக்களில் பிரதியாக்க செயற்பாட்டுடன் தொடர்புபட்டமையாதது
1. பிரதியாக்கம் ஒன்றிற்கு குறித்த நோக்கம் உண்டு
2. மொழியின் இலக்கணம், குறியீடுகள் பிரதியாக்கத்திற்கு அடிப்படையானது
3. பிரதியாக்கம் பல வடிவங்களில் உள்ளன
4. பிரதியாக்க வடிவங்கள் நவீன ஊடக அறிமுகங்களினால் மாற்றமடைந்துள்ளன
5. பிரதியாக்கம் என்பது எழுத்துக்களை கோர்த்து எழதுதல் ஆகும்

24) "ஒருவர் தனது ஆற்றல்கள், தேர்ச்சிகள், தோற்றம், சமூக அங்கீகாரம் பற்றி கொண்டுள்ள மனப்பாங்கு, உணர்வுகள், அறித்தொகுதி சுயஎண்ணக்கரு எனப்படுகிறது" பின்வருவனவற்றில் சுய எண்ணக்கரு உருவாக்க காரணியாக அமையாதது
1. முன் அனுபவம்
2. வார்ப்பு எண்ணக்கரு
3. போலி எண்ணக்கரு
4. கற்றல் அனுபவம்
5. உரையாடல்

25) குமார் பத்திரிகை ஒன்றில் காணப்பட்ட கவிதை ஒன்றை வாசித்து ஒருவித உணர்வு நிலைக்கு தள்ளப்பட்டான். நாளடைவில் புதிதாக கவிதை புனையும் செயற்பாட்டிற்கு தூண்டப்பட்டான். இந்நிலைமை தொடர்புபடும் ஊடக பிரதிநிதித்துவ எண்ணக்கரு
1. கட்டுருவாக்க எண்ணக்கரு
2. சமூக படிம எண்ணக்கரு
3. தனியாள் பிம்பஉருவாக்க எண்ணக்கரு
4. இரசனை உணர்வு எண்ணக்கரு
5. பால் சமத்துவ எண்ணக்கரு

26) **A** – வழிகாட்டல் ஆலோசனை
**B** – எச்சரிக்கை விடுதல்
**C** – பொது உடன்பாட்டை பெறுதல்
**D** – பிரச்சினை தீர்த்தல்
**E** – ஞாபகப்படுத்தல்

இவற்றில் குழுத்தொடர்பு, தன்கைத் தொடர்பு இயல்புகளாக அமைவன முறையே
1. A யும் C யும்
2. B யும் E யும்
3. C யும் E யும்
4. D யும் E யும்
5. B யும் D யும்

27) உலகமயமாக்கல் செயலொழுங்கின் காரணமாக தொடர்பாடல் செயன்முறையில் ஏற்படக்கூடிய மாற்றமாக கொள்ளமுடியாதது
1. தேசிய அரசுகள் தொடர்பாடல் மீது செலுத்தும் செல்வாக்கு நலிவடைதல்
2. பூகோள தகவல் கலாசாரம் முனைப்பு பெறல்
3. செய்தி பெறுவோரின் கவனம் பிரதேச ரீதியில் மடடுப்படுத்தப்பட்டு உலக போக்கில் கவனத்தைப் பெறுதல்
4. பல்வேறு ஊடக தொடர்பு செயலொழுங்குகள் ஒன்றிணைந்து தொகுதியாக மாற்றமடைதல்
5. சமூகத்தின் அவதானமும் ஆர்வமும் தொடர்பாடல் செயன்முறையில் பிரதேச அடிப்படையில் மட்டும் கவனத்தை பெறுதல்

28) ஊடக அறிவித்தல் (Press Release) செயன்முறையின் இயல்பாக கொள்ளமுடியாதது.
1. அனைத்து ஊடகங்களுக்கும் பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்டிருத்தல்
2. அறிவித்தலில் உத்தியோக பூர்வ ஒப்பம் இடப்பட்டு இருத்தல்
3. அறிவித்தலின் உள்ளடக்க தகவல்கள் பொருத்தமானதாக அமைந்திருத்தல்
4. அறிவித்தலின் உள்ளடக்கம் பரந்துபட்ட நோக்கங்களை கொண்டதாக இருத்தல்
5. அறிவித்தலுக்கான தகவல் கவனமாக தெரிவு செய்யப்பட்டிருத்தல்

29) ஊடகக் கழகத்தின் செயற்திட்ட ஒழுங்கமைப்பாளர்களினால் முன்னெடுக்கப்படக் கூடிய ஆக்கச்செயற்றிட்டத்திற்கு எடுத்துக்காட்டுகளாக அமைவன
1. சுவர்ப் பத்திரிகை வெளியீடு, புகைப்படக் கண்காட்சி
2. கவிதை ஆக்கம், செய்தி எழுதுதல்
3. மாணவர் கற்றலுக்காக தொலைக்காட்சியை பயன்படுத்துவது தொடர்பான ஆய்வு, பாடசாலை மாணவர்களின் பத்திரிகை வாசிப்பு தொடர்பான ஆய்வு.
4. நல்ல பாடல்களை இரசித்தல், நாடகம் ஒன்றை விமர்சித்தல்
5. சமாதானம் தொடர்பான பாடல் தயாரிப்பு, காட்டூன் கண்காட்சி

30) மக்கள் தொடர்பு நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதன் நோக்கமாக அமையாதது
1. நிகழ்ச்சித்திட்ட இலாபங்களை முற்கூட்டியே அறிதல்
2. மக்கள் தொடர்பு நோக்கங்களை நிச்சயித்தல்
3. பௌதீக மானிட வளத் தேவையை கணிப்பிடல்
4. தேவைக்கு ஏற்ப முன்னுரிமைப் பட்டியலை தீர்மானித்தல்
5. நிகழ்ச்சித்திட்டத்தின் பொருத்தப்பாட்டை மதிப்பிடல்

31) - தேவையற்ற தகவல்கள் தரவுகள் அறிக்கையிடப்படுவதை தவிர்த்தல்
- எளிமையான மொழிபடபிரயோகம் பயன்படுத்தல்
- கேட்பவரின் அறிவு,அனுபவம்,இரசனை ஆர்வத்திற்கு ஏற்ப புலக்காட்சி ஏற்படுத்தப்படல்

மேற்குறித்த கூற்றுகளின் இயல்புகள் பொருத்தமானதாக அமைவது
1. தொலைக்காட்சி ஊடகத்துடன்
2. நவீன ஊடகத்துடன்
3. அச்சு ஊடகத்துடன்
4. சமூக ஊடகத்துடன்
5. வானொலி ஊடகத்துடன்

32) பின்வருவனவற்றில் செவிப்புல தொடர்பாடலுடன் தொடர்பு படாத கூற்று
1. ஒலிகள், சப்தங்கள், இசை மூலம் தொடர்பாடல் இடம்பெறும்.
2. ஒலிச்சமிக்ஞைகளும் செவிப்புல ஊடகங்களாக பயன்படுகின்றன.
3. கேட்டல், செவிமடுத்தல் தொழிற்பாடுகள் செவிப்புல தொடர்பாடலுடன் தொடர்பற்றவை
4. குழுத்தொடர்பிலும்வெகுசனதொடர்பிலும் செவிப்புல ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன
5. செவிப்புல தொடர்பாடல் இயற்கையாகவும் திட்டமிட்டும் மேற்கொள்ளப்படுகின்றன

33) "முறைசாராத் தொடர்பாடல் என்பது மனிதனின் ஆர்வத்தையும் சந்தேகத்தையும் வெளிப்படுத்தும் தொடர்பாடல் செயலொழுங்காகும்". குறித்த ஒரு தகவல் ஒருவரிடமிருந்து ஏனைய நபர்களுக்கு பரவலடைவதை குறிக்கும் முறை

1. தனிச்சங்கிலி முறை (Single strand chain)
2. வதந்தி சங்கிலி முறை (Gossip chain)
3. நிகழ்தகவுச் சங்கிலி முறை (Probability chain)
4. கோட்டச் சங்கிலி முறை (Cluster chain)
5. மேல் இருந்து கீழ் நோக்கிய முறை (Top to down)

34) சமூகம் - தகவல் எண்ணக்கருவை பிரதிபலிக்காத கூற்று
1. சமூக நிலைப்பாட்டிற்கு தகவல் அவசியம்
2. சமூகத்திற்கு தகவல் கிடைக்கும் வழிகளாக ஊடகங்கள் செயற்படுகின்றன
3. முறைசார் ஊடக வழிமூலம் மட்டும் தகவல்கள் சமூகத்துக்கு கிடைக்கப் பெறுகின்றன
4. முறைசார தகவல்களும் சமூக நிலைப்பாட்டிற்கு அவசியமாகிறது
5. வெகுசன ஊடகத்தை விட நவீன ஊடகம் மூலம் துரிதமாக தகவல்கள் கிடைக்கப் பெறுகின்றன

35) - குறித்த தகவல் தொடர்பிலான தூண்டலை மிகவும் கவர்ச்சியான உள்ளடக்கத் தன்மையினால் உருவாக்கும்
- பொது மக்களுடன் மிக அண்மித்த தன்மையாக காணப்படும்
- புகைப்படக்கலை,எழுத்துக்கலை,படைப்பாக்ககலைதிட்டமிடல்கலை, வடிவமைப்புக்கலை ஒன்றிணைக்கப்பட்டு தயாரிக்கப்படுவது

இவ் இயல்புகளுடன் மிகவும் நெருக்கமாக அமைவது
1. கையேடு
2. துண்டுப்பிரசுரம்
3. செய்தித்தாள்
4. சுவரொட்டி
5. சஞ்சிகை

36) "ஆக்கரீதியான வெகுசன ஊடக அறிக்கையிடல்களில் சித்தரிப்பு எழுத்துகளும் முக்கிய வழிமுறையாக அமைகின்றது". பின்வரும் இயல்புகளில் சித்தரிப்பு எழுத்துக்களை பிரதிபலிக்காத கூற்று

1. செய்தியின் பின்னணியை முன்வைப்பது
2. நிகழ்காலத்தில் கதையை முன்வைப்பது
3. அதிக தகவல் மூலங்களை கொண்டது
4. செய்தியை விட ஆழமானது
5. மிக குறைந்த அளவிலான மூலங்களை கொண்டமைந்தது

37) "வினைத்திறன் மிக்க, விளைத்திறன் மிக்க வெகுசன ஊடக மற்றும் தொடர்பாடல் செயன்முறைகளுக்கு ஊடக அறிவு (media literacy) அவசியமாகிறது"

**நபர் A** – வெகுசன ஊடகங்களில் இடம்பெறுகின்ற விளம்பரங்கள் சிறுவர்களை பெருமளவில் பாதிக்கின்றன ஆனால் அவை திட்டமிட்டு தயாரிக்கப்படுகின்றன. விளம்பரங்கள் தயாரிக்கப்படுகின்ற போது ஊடக ஒழுக்க நியமனங்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

**நபர் B** - வெகுசன ஊடகங்களில் இடம்பெறுகின்ற காட்சிகள் வன்முறைகளை தூண்டுகின்றன. நாம் எப்படி அவற்றை தடுக்கமுடியும்?

**நபர் C** – தொலைக்காட்சி ரெலி நாடகங்களை மிகவும் விரும்பி பார்க்கிறேன். பொழுது போக்குக்கு அவை உதவுகின்றன.

மேற்குறித்த நபர்களின் கூற்றுகளின் அடிப்படையில் ஊடக அறிவுள்ள பயனாளிகள் இடம்பெறக்கூடிய தொகுதி முறையே

1. செயலூக்க பயனாளி, செயலூக்க மற்ற பயனாளி ,மந்த பயனாளி
2. செயலூக்க பயனாளி ,மந்த பயனாளி செயலூக்க, மற்ற பயனாளி
3. மந்த பயனாளி, செயலூக்க பயனாளி, செயலூக்க மற்ற பயனாளி
4. செயலூக்க மற்ற பயனாளி, மந்த பயனாளி , செயலூக்க பயனாளி
5. மந்த பயனாளி, செயலூக்க மற்ற பயனாளி, செயலூக்க பயனாளி

38) காட்சி மூல தகவல் பகிர்வுக்கு எடுத்துக்காட்டுக்களாக அமையும் தொகுதி
1. இருபரிமாணப்படம், முப்பரிமாணப் படம், விளக்கப்படம்
2. காட்டூன், வரைபு, பாட்டு
3. வரைபு, ஓவியம், இசை
4. வர்ணம், அளவீடுகள், ஒலிசமிக்ஞைகள்
5. கட்டடம், திரைப்படம், ஒலிக்குறியீடுகள

39) ஊடக விமர்சனத்தின் சமூகத்தேவையை பிரதிபலிக்காதது
1. ஊடக உள்ளடக்க இயல்பையும் நிகழ்ச்சி நிரலையும் வெளிக்காட்டாது
2. மக்களை மந்த நிலையில் இருந்து செயற்படும் நிலைக்கு மாற்றியமைத்தல்
3. ஊடகம் - பெறுநர் தொடர்பை விளங்கிக் கொள்ளல்
4. ஊடக அறிவு பற்றிய விழிப்புணர்வை உயர்மட்டத்திற்கு இட்டுச் செல்லும்
5. ஊடகத்தின் சமூகவகிபங்கு கலாசார தாக்கம் பற்றிய போக்குகளை அறியச்செய்தல்

40) ஊடகங்கள் குறிப்பிட்ட கால சமூகத்தின் கலாசாரம, பழக்கவழக்கம், நடத்தை மற்றும் சம்பிரதாயங்களை அறிக்கையிடுகின்றன இவ்வாறான அம்சங்களை விமர்சனம் செய்கின்ற பிரவேசம்
1. பண்பாட்டு ரீதியிலான பிரவேசம்
2. அரசியல் ரீதியிலான பிரவேசம்
3. மொழி ரீதியிலான பிரவேசம்
4. ஒப்பீட்டு ரீதியிலான பிரவேசம்
5. வரலாற்று ரீதியிலான பிரவேசம்

# திரைப்படமாகிறது மெஸ்சியில் வாழ்க்கை



ஆர்ஜென்ரீனா கால்பந்து வீரர்மெஸ்சியின் வாழ்க்கையை, திரைப்படமாக எடுப்பதற்கான உரிமையை லாஸ் ஏஞ்சல்சை (அமெரிக்கா) சேர்ந்த எபிக் பிக்சர்ஸ் குரூப் தயாரிப்பு நிறுவனம் பெற்றுள்ளது.

சிறுவயதில் ஹார்மோன் கோளாறு காரணமாக வளர்ச்சி பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றது முதல் உலகின்தலை சிறந்த கால்பந்து வீரராகப் பிரபலமானது வரையிலான சுவாரசியமான நிகழ்வுகள் இந்தத் திரைப்படத்தில் இடம்பெறவுள்ளன என திரைப்படத் தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

# அரையிறுதிக்கு முன்னேற்றம்

(மட்ரிட்)

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டிக்கு செரீனா மற்றும் ஷரபோவா ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர். இதேவேளை முர்ரே தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.


மட்ரிட் ஓபன் சர்வதேச ரென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடைபெற்று வருகின்றது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி சுற்று ஆட்டத்தில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ஸ்பெயின் வீராங்கனை அனாபெல் மெதினாவை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் செரீனா வில்லியம்ஸ் 6-3, 0-6, 7-5 என்ற செட் கணக்கில் அனாபெல் மெதினாவை வீழ்த்தி அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மற்றொரு காலிறுதிப் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, எஸ்தோபியாவின் கியா கனிபியை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய ஷரபோவா 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில், இங்கிலாந்து வீரர் ஆன்டி முர்ரே தோல்வியடைந்து வெளியேறினார்.

ஆன்டி முர்ரே, செக்குடியரசின் தோமஸ் பெர்டிச்சை சந்தித்தார்.

டை-பிரேக்கர் வரை சென்ற முதல் செட்டை 6-7 என கோட்டைவிட்ட முர்ரே,



2ஆவது செட்டை 4-6 என இழந்தார். இறுதியில் ஆன்டி முர்ரே 6-7, 4-6 என்ற நேர் செட் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார்.

இதேவேளை, நடால் உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளனர்.

இத்தொடர் ஆண்கள் பிரிவில் நடால் கிண்ணத்தை வெல்லக் கூடிய அதிக சாத்தியக்கூறு இருப்பதாக ரென்னிஸ் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# இங்கிலாந்து வீரர் நீரில் மூழ்கி மரணம்




(சான்பிரான்சிஸ்கோ)


ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற இங்கிலாந்து வீரர் சிம்பன் பரிதாபகரமாக நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற இருக்கும் பாய்மரக் கப்பல் போட்டிகளுக்கான பயிற்சி சான்பிரான்சிஸ்கோ நகரில் உள்ள கடற் பகுதியில் நடைபெற்று வருகிறது.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஆன்ட்ரூ சிம்சன், சுவீடன் நாட்டு குழுவின் சார்பாக போட்டிகளில் பங்கேற்கவிருந்தார். இதற்காக அவர் நேற்று முன்தினம் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். அப்போது 72 அடி நீளம் கொண்ட பாய்மரப் படகு கவிழ்ந்தது. படகுக்கு அடியில் சிம்சன் மாட்டிக் கொண்டார். அவரை வெளியே கொண்டு வரும் முயற்சிகள் தோல்வி அடைந்தன. இதனால் நீரிலேயே 36 வயதான சிம்சனின் உயிர் பிரிந்தது.

இவர் 2008ஆம் ஆண்டு பெய்ஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப்பதக்கமும், 2012ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளிப்பதக்கமும் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஓய்வுபெறுகிறார் கிறிஸ்டன்

(டர்பன்)

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதாக கிரிஸ்டன் தெரிவித்துள்ளார். 45 வயதான பயிற்சியாளர் கிறிஸ்டன் தனது ஒப்பந்தத்தை நீட்டிக்க விரும்பவில்லை என்று தெரிவித்திருக்கிறார். இதனால் வருகிற ஓகஸ்ட் மாதத்துடன் கிர்ஸ்டன் பயிற்சியாளர் பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறார். இங்கிலாந்தில் அடுத்த மாதம் நடைபெறும் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியுடன் அவரது பணி முடிவடைகிறது. கிரிஸ்டன் வழிகாட்டுதலில் தென்னாபிரிக்க அணி டெஸ்ட் தர வரிசையில் முதல் இடத்தைப் பிடித்ததுடன் அதனைத் தக்க வைத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிறிஸ்டனின் விலகல் முடிவு குறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைத் தலைவர் கிறிஸ் நெசானி கருத்துத் தெரிவிக்கையில், கிறிஸ்டனுக்குஇளம் குடும்பம் உள்ளதை எங்களால் புரிந்துகொள்ளமுடிகிறது. அவர் குடும்பத்தினருடன் அதிக நேரத்தை செலவிட வாழ்த்துகள். கடந்த 2 ஆண்டுகளாக அவர் அணிக்கு அளித்த அபார பங்களிப்புக்காக நன்றி தெரிவித்து கொள்கிறோம். அடுத்து முக்கியமான போட்டிகள் வருவதால் விரைவில் தகுதியான பயிற்சியாளரைக் கண்டுபிடிக்க வேண்டியது முக்கியமானதாகும். பயிற்சியாளர் பதவியில் இருந்து கிறிஸ்டன் விலகினாலும், அவரது பங்களிப்பை நாங்கள் முழுமையாக இழக்க விரும்பவில்லை. ஏதாவது ஒரு வகையில் அவரது அனுபவத்தை பயன்படுத்த முயற்சிப்போம் என்றார். இது குறித்து கிறிஸ்டன் கருத்துத் தெரிவிக்கையில், என் மீது நம்பிக்கை வைத்து அணியை வழிநடத்த வாய்ப்பு வழங்கிய தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைக்கு இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனது நாட்டுக்காக வீரராகவும், பயிற்சியாளராகவும் செயற்பட்டதை மிகப்பெரிய கௌரவமாகக் கருதுகிறேன் எனவும் தெரிவித்தார்.

# புனேயைச் சுருட்டிய மும்பை இந்தியன்ஸ்


(புனே)

புனே வாரியர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் 58ஆவது லீக் ஆட்டம் நேற்று புனேயில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய புனே வாரியர்ஸ் அணி மும்பை இந்தியன்ஸ் அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென முதலிரு விக்கெட்டுக்களையும் 25 ஓட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்குள் பறிகொடுத்து தடுமாறியது. இதில் ஜோன்சன், மலிங்க ஆகியோர் சிறப்பான முறையில் பந்துவீசி முதலிரு விக்கெட்டுக்களையும் சாய்த்தனர். மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த யுவராஜ்சிங், பெண்டி ஆகியோர் அணியின் நிலையை உணர்ந்து பொறுமையாக ஆடினர். நிலைத்து நின்று ஆடிய இந்த ஜோடி 65 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை ஹர்பஜன்சிங்கினால் பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய அனைத்து வீரர்களும் மும்பை இந்தியன்ஸ் அணி பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ளமுடியாமல் திணறியதுடன் விரைவாக விக்கெட்டைப் பறிகொடுத்து வெளியேறினர். இறுதியில் புனே வாரியர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யுவராஜ்சிங் 29 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி அடங்கலாக 33, பெண்டி 29, உத்தப்பா 11 ஓட்டங்களைப்பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் ஜோன்சன், லசித் மலிங்க, ஏ.என். அகமட் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 113 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி, ஓட்டமெதுவும் பெற்றுக்கொள்ளாத நிலையில் முதல் விக்கெட்டைப் பறிகொடுத்தது. தொடர்ந்து சச்சின், தினேஷ் கார்த்திக் ஆகியோரின் விக்கெட்டுக்களும் வீழ்த்தப்பட மும்பை இந்தியன்ஸ் அணி நெருக்கடியை எதிர்கொண்டது. இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக களமிறங்கிய ராயுடு கப்டன் ரோகித் சர்மாவுடன் இணைந்து புனே வாரியர்ஸ் பந்து வீச்சாளர்களை நிதானமாக எதிர்கொண்டு ஓட்ட எண்ணிக்கையை வேகப்படுத்தினார். சிறப்பாக ஆடி இந்த ஜோடி 54 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை டிண்டாவினால் பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய மைக்ஸ்வெல் ரோகித் சர்மாவுடன் இணைந்து நிதானமாக ஆடினார். வெற்றிக்கு ஒரு ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் மைக்ஸ்வெல் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய ஹர்பஜன்சிங் வந்தவேகத்தில் பவுண்டரி அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் மும்பை இந்தியன்ஸ் அணி 18.5 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ரோகித் சர்மா ஆட்டமிழக்காது 37, ராயுடு 26, கார்த்திக் 17, சச்சின் 15, மைக்ஸ்வெல் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டிண்டா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக ஜோன்சன் தெரிவினார்.



# கட்டாய திருமணத்திற்கு வருகிறது தடை

## பிரிட்டிஸ் அரசின் புதிய வியூகம்




இங்கிலாந்தில் குழந்தைகளுக்கு கட்டாயத் திருமணம் செய்து வைப்பவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற பல நாட்டு மக்கள் இங்கிலாந்தில் வசிக்கின்றனர். இவர்கள் குடும்ப கௌரவத்திற்காக இளம்வயதிலேயே தங்கள் குழந்தைகளுக்கு கட்டாயத்திருமணம் செய்து வைத்து விடுகின்றனர். மதம், சாதி மாறிக் காதலிப்பவர்களைக் கௌரவக் கொலைகளும் செய்து விடுகின்றனர். இவற்றைத்தடுக்க இங்கிலாந்து அரசு தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகிறது.

எனினும் கட்டாயத்திருமணங்களும்,கௌரவக் கொலைகளும் அவ்வப்போது நடந்து வருகின்றன. கடந்த 2008ஆம் ஆண்டு மட்டும் 1,600 இற்கும் அதிகமான கட்டாய திருமணங்கள் நடந்ததாகப்புகார்கள் வந்துள்ளன. இங்கிலாந்தில் வசிக்கும் பல்வேறு நாட்டுப்பிரதிநிதிகள், பொலிஸார், உள்துறை, சட்டத்துறை போன்றவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய, கட்டாயத்திருமணத்தடுப்புப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவில் தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. குறிப்பாக இந்தியாவின் பஞ்சாப், மேற்கு வங்கம், குஜராத் மாநில மக்கள்தான் கட்டாயத்திருமணங்களில் ஈடுபடுவதாகத்தெரியவந்துள்ளது. இவர்களில் 85 சதவீதம் இளம் பெண்கள் கட்டாயத்திருமணங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், கட்டாயத் திருமணங்கள் செய்து வைக்கும் பெற்றோரைத்தண்டிக்கும் வகையில் புதுச்சட்டம் கொண்டு வர இங்கிலாந்து அரசு முடிவு செய்துள்ளது.


மேலும், படிக்கும் மாணவ, மாணவிகளைக் கண்காணிக்கவும், அவர்களில் யாருக்காவது கட்டாயத்திருமணம் செய்யப் போவது பற்றி அறிந்தால் தகவல் அளிக்கவும், பள்ளிகளுக்குத்தனியாக நிதியுதவி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்து இங்கிலாந்துப் பிரதமர் டேவிட் கமரூன் கூறுகையில், கட்டாய திருமணம் என்பது அடிமைத்தனத்தை விடப் பெரிது. ஒருவரின் விருப்பத்திற்கு எதிராக கட்டாய திருமணம் செய்துவைப்பது தவறு. அதனால்தான் புதுச் சட்டம் கொண்டுவரப்படவுள்ளது என்றார்.

உலகச் செய்திகள்



அமெரிக்காவின் பெதேஸ்டா நகரில் உள்ள இராணுவ வீரர்களுக்கு இயந்திரம் மூலம் சிகிச்சை அளிக்கும் மையத்திற்கு இராணுவ உடையில் விஜயம் செய்த பிரிட்டன் இளவரசர் ஹாரி.

## ஈரானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்



(தெஹ்ரன்)

ஈரானில் நேற்றுக்காலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6.2 ஆகப் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கம் ஈரானின் பெர்சியன் வளைகுடாப் பகுதியில் மையம் கொண்டிருந்தது. அந்நாட்டின் நேரப்படி காலை 6.59 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதன் அதிர்வுகள் ஹோர்முஸ் ஜலசந்தியின் கடலோரப் பகுதிகளில் உணரப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் பல வீடுகள் இடிந்து தரைமட்டமானதாக செஞ்சிலுவைச்சங்கம் தெரிவித்துள்ளது. ஆனால் உயிரிழப்புகள் மற்றும் பொருட்சேதம் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

கடந்த மாதம் ஈரானில் 7.8 என்ற ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் உணரப்பட்டது. இதில் பலர் உயிரிழந்ததும், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.



போலந்து நாட்டின் வர்ஷா நகரில் நடைபெற்ற கூட்டுப் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போலந்து, ரஷ்யா மற்றும் சிரியா நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்கள்.

# இடிந்து அழிந்த கட்டடத்தில் சிக்கி 17 நாட்களின் பின் மீண்ட பெண்


பங்களாதேஷ் தலைநகர் டாக்கா அருகில் ஆயத்த ஆடை நிறுவனங்கள் செயற்பட்டு வந்த 8 மாடிக்கட்டடம் ஒன்று கடந்த மாதம் 24ஆம் திகதி இடிந்து விழுந்தது. நாட்டையே உலுக்கிய இந்தக்கோர விபத்தில் 1000 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். மேலும் ஏராளமானோர் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் 17ஆவது நாளாக நடைபெற்ற மீட்புப் பணியின் போது, ஒரு பெண் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார். ரேஷ்மி என்ற அந்தப் பெண் கட்டட இடிபாடுகளில் மிகப் பெரிய தூணுக்கும், பீமுக்கும் இடையில் சிக்கியிருந்ததால் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துள்ளார்.



இடிந்து விழுந்த கட்டடத்திற்குள் தண்ணீரைச்செலுத்திய போது அதனைக்குடித்திருக்கலாம் அல்லது தண்ணீரைச் சேமித்து வைத்துக்குடித்து இத்தனை நாட்களாக உயிர் வாழ்ந்திருக்கலாம் என்று தீயணைப் புத்துறைத் தலைவர் தெரிவித்துள்ளார். கட்டட இடிபாடுகளை பிரித்து எடுத்துக் கொண்டிருந்த போது, யாராவது உயிருடன் இருக்கிறீர்களா என்று கேட்டோம். அப்போது ஒரு பெண் தன்னைக் காப்பாற்றும்படி கூறினார். அதன் பின்னர் அவரை மீட்டிருக்கிறோம் என்று மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# அமோனியாக் கசிவைத் தடுக்க நிபுணர்கள் கூடி ஆலோசனை



சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஏற்பட்டுள்ள அமோனியாக் கசிவு குறித்து அமெரிக்கா மற்றும் ரஷ்ய விண்வெளி வல்லுநர்கள் ஆலோசனை நடத்தவிருப்பதாக ரஷ்ய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சர்வதேச விண்வெளி நிலையத்தின் ரஷ்யப் பிரிவின் விமான இயக்குநர், விளாடிமிர் சோலோவ்யு கூறுகையில், விண்வெளி நிலையத்தில் அமோனியாக் கசிவு ஏற்பட்டிருப்பது தீவிரமான பிரச்சினை. சர்வதேச விண்வெளி நிலைய உறுப்பினர்களை, விண் வெளியில் சென்று இந்தக் கசிவைச்சரிசெய்ய அனுப்புவதற்கு அதிகாரிகள் யோசித்துக் கொண்டிருக்கின்றனர்.

நாஸாவின் விண்வெளி வீரர்களான, டாம் மாஷ்பர்ன், கிரிஸ் காசிடி ஆகிய இருவரும், விண்வெளிக்குச்சென்று இந்தக் கசிவை அடைக்க முயற்சி செய்யக்கூடும் என்றார். விண்வெளி நிலையைச் செயற்பாடுகளுக்கு மின்சாரம் அளிக்கும் சாதனங்கள் குளிரூட்டப்படுவதற்காக செலுத்தப்படும் அமோனியா வாயுக்கசிவினால் நிலையத்திலுள்ள வீரர்களுக்கு ஆபத்து எதுவும் இல்லை என்று நாஸா முன்பு அறிவித்திருந்தது.

அமெரிக்கப் பிரிவில் இயங்கும் நிலையத்திலிருந்துதான் கசிவு தென்படுகின்றது எனவும், ரஷ்ய பிரிவு எப்போதும் போல் செயற்படுகின்றது எனவும் மற்றொரு ரஷ்ய அதிகாரி தெரிவித்துள்ளார்.

கசிவு ஏற்பட்டுள்ள இடத்தில் வெள்ளைநிறத்துகள்கள், விண்வெளியில் மிதப்பதை வீரர்கள் உறுதி செய்துள்ளனர் என்று கூறிய நாஸா தகவல் மையம், இதுபோல் நடப்பது முதல்முறை அல்ல என்றும் கூறியுள்ளது.

ஆனால், இது குறித்த முறையான அறிவிப்பு ஏதும் ரஷ்ய விண்வெளி நிறுவனத்திடம் இருந்து வரவில்லை.

# தேனிலவு பயணத்தில் கணவரை இழந்த மனைவி




பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த 36 வயது நிரம்பிய நபர் ஒருவர், தனது மனைவியுடன் தேனிலவு அனுபவிக்க ரீயூனியன் தீவுக்குச் சென்றுள்ளார். கடற்கரையில் மனைவி அமர்ந்திருக்க, கணவர் மட்டும் கடலில் கரையோரமாக நீந்திக்கொண்டிருந்தார். அப்பொழுது அங்கு வந்த சுறா இரண்டு முறை இவரைத் தாக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார். அவருக்கு அருகில் நீந்திய இன்னொருவர், திடீரென தண்ணீரில் இரத்தம் பரவுவதைக் கண்டதும் அவசர உதவி கேட்டு தொலைப்பேசியில் தொடர்பு கொண்டுள்ளார்.

உடனே மீட்புப்படை வீரர்கள் வந்து கடலில் குதித்து சுறா மீன்கள் தாக்கியவரைத்தேடி, கரைக்குத் தூக்கிக்கொண்டு வந்துள்ளனர். சுறா மீன் அவர் கையையும், தொடையையும் கடித்திருந்ததால் இரத்தம் ஏராளமாக வெளியேறி விட்டது. மேலும் அவரது நுரையீரலும், இதயமும் செயலிழந்து விட்டதால் அவரைக் காப்பாற்ற இயலவில்லை.

கரையில் இருந்த மனைவி அதிர்ச்சியால் மயக்கமடைந்துள்ளார். இதனால் அவருக்கு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கப்பட்டது. பொதுவாக சுறா மீன்கள் மனிதரைக் கொன்று தின்பதில்லை. அவை தமது உணவான ஆமை அல்லது சீல் மீன் என்று நினைத்துத்தான் மனிதரின் கை கால்களைக் கடிக்கின்றன. மேலும் அதிகாரிகள் இந்த ரீயூனியன் தீவில், சுறாவுக்கு எதிராக பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கு மக்களின் வாழ்வாதாரத்திற்கு இந்தியா தொடர்ந்தும் உதவி வழங்கும்

## விடைபெறும் தூதுவர் அசோக் கே.காந்தா



(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்தியா தொடர்ந்தும் உதவிகளை வழங்குமென விடைபெற்றுச் செல்லும் இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியின் தேநீர் விருந்துபசார நிகழ்வு கடந்த 6 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த வேளை தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், யாழ். அரச அதிபர், மாகாண நிர்வாகத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர் மற்றும் திணைகளச் செயலாளர்களும் சமுகமளித்தனர்.

நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர், யுத்த முடிவில் வடமாகாணத்தில் பரந்து பட்ட செயற்றிட்டங்களை முன்னெடுப்பதிலும் அமுல் செய்வதிலும் உயர்ஸ்தானிகர் காந்தா ஆற்றிய பணியை நினைவு கூர்ந்தார். மாகாணம் இயல்பு நிலைக்கு மீளுவதற்கு இந்திய ஆதரவின் வகிபாகம் எந்த அளவுக்கு உதவியது என்பதை அழுத்திக் கூறினார்.

உயர்ஸ்தானிகர் தமது பதிலுரையில், ஆளுநரும் மாகாண நிர்வாக அதிகாரிகளும் இந்திய உதவியுடனான பல்வேறு செயற்றிட்டங்களை அமுலாக்குவதில் காட்டிய ஆதரவுக்கு நன்றி தெரிவித்ததோடு, இலங்கை அரசின் மீளக்குடியமர்த்தல் மற்றும் புனர்வாழ்வு முயற்சிகளுக்கும் வடமாகாண மக்களின் வாழ்வாதார வாய்ப்புக்களை மேம்படுத்தவும் இந்திய அரசு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உதவும் என்று உறுதியளித்தார்.

அதே நாளில் இந்திய உயர்ஸ்தானிகர் அரசியற் குழுக்களுடனும் சிவில் சமூகக் குழுக்களுடனும் புறம்பானதொரு சந்திப்பில் பங்குபற்றினார்.

வடமாகாண மக்களுக்கு இந்திய அரசாங்கம் வழங்கிய ஆதரவுக்கும் உதவிக்கும் நன்றி தெரிவித்த சிவில் சமூகம், தொடர்ந்தும் இந்திய அரசிடமும் மக்களிடமிருந்தும் ஆதரவை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தது. உயர்ஸ்தானிகர், தமது பதவிக் காலத்தில் இந்திய உதவிச் செயற்றிட்டங்களை விரைந்து அமுல்படுத்த எடுத்த முயற்சிகளையும் சிவில் சமூகம் நினைவு கூர்ந்தது.

மீளக்குடியமர்த்தல் மற்றும் புனர்வாழ்வு முன்னெடுப்புக்களுக்கும் நல்லிணக்க முயற்சிகளுக்கும் இந்தியா தொடர்ந்து பாடுபடும் எனத் தம்மோடு உரையாடியோரிடம் உயர்ஸ்தானிகர் உறுதியளித்தார். 2013 செம்ரெம்பரில் வடமாகாண சபைத் தேர்தல் நடைபெற இருப்பதாக வெளிவந்த அறிவிப்பை வரவேற்ற அவர், இலங்கை சமாதானத்தையும் அபிவிருத்தியையும் மீளிணக்கத்தையும் நோக்கி துரிதமாக முன்னேறும் என. நம்பிக்கை தெரிவித்தார். அதுவே எல்லா இனங்களுக்கும் நன்மை பயக்க வல்லது என்றார் உயர்ஸ்தானிகர்.

# கச்சேரியில் கோஷ்டி மோதல் ஐவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மானிப்பாய் சுதுமலை பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவமொன்றில் ஐந்து பேர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், மேற்படி மோதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள கோவிலில் கடந்த வியாழன் இரவு பாட்டுக் கச்சேரியொன்று நடைபெற்றுள்ளது. இதன் போது கச்சேரிக்கு மதுபோதையில் சென்ற இளைஞர்கள் சிலரே மோதலில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இத்தகராற்றின் போது, படுகாயம் அடைந்த 5 பேரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (25)

# தெல்லிப்பழை வைத்தியசாலையில் தோல் நோய் சிகிச்சை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடந்த வாரத்தில் இருந்து தோல் நோய்க்கான சிகிச்சைப் பிரிவு இயங்கத் தொடங்கியுள்ளதாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வைத்தியட்சகர் வைத்திய கலாநிதி எம்.உமாசங்கர் தெரிவித்தார்.

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை கடந்த இரண்டு வருடங்களாக சொந்த இடத்தில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ள நிலையில், படிப்படியாக தனது சேவைகளை விஸ்தரித்து கடமைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

குறிப்பாக பல்வேறு ஊழியர்களின் வளப்பற்றாக்குறை காணப்படுகின்ற போதிலும் கடமையாற்றும் ஊழியர்களின் மிகையான ஒத்துழைப்புடன் இத்தகைய கிளினிக்குகளை தற்போது மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## கூட்டமைப்பின்...

பதிவு தொடர்பில் கருத்துத் தெரிவிக்க நான் விரும்பவில்லை. இது சிக்கலுக்குரிய - அரசியல் சம்பந்தமான விடயம். கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு கட்சியும் வெள்வேறு நிலைப்பாடுகளில் உள்ளன. கூட்டமைப்பின் தலைமைப்பீடம்தான் இது தொடர்பில் ஆராயவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதா அல்லது இல்லையா என்பதை கூட்டமைப்பின் தலைவரே முடிவெடுக்க வேண்டும். அவரின் கையில்தான் எல்லாம் தங்கியுள்ளது என்று தெரிவித்தார்.

## இணக்கமெதுவும்...

இந்தக் கூட்டம் இடம்பெற்ற போதிலும் இதில் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவது தொடர்பான எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்வது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் ஆர்.சம்பந்தன், மற்றும் மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் விளக்கமளித்தனர்.

இதேபோன்று, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் தமது நிலைப்பாட்டை எடுத்துக் கூறினர்.

இருப்பினும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பை பதிவு செய்வதில் எந்தவிதமான முடிவுகளும் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை என சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசெப் ஆண்டகை, அருட்தந்தையர்கள் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சியின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, பதிவு செய்வது தொடர்பிலும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இணைந்துள்ள கட்சிகள் ஒரு புரிந்துணர்வு அடிப்படையில் செயற்படுவதற்குத் தமிழரசுக் கட்சியினர் சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்வதற்கு முன்வந்துள்ளதாக, அந்தக் கட்சிக்கும் டெலோ அமைப்புக்கும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தின் போது இணக்கம் காணப்பட்டதாக டெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் மன்னார் ஆயர் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பையடுத்து, வடமாகாணத்தின் பல மாவட்டங்களையும் சேர்ந்த சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில், தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகளை என்ன வகையில் எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்வது என்பது பற்றிய நீண்ட கலந்துரையாடலும் நடைபெற்றது.

இதன்போது தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை தடுத்து நிறுத்துவதற்கான பொது வேலைத்திட்டத்தினை அடையாளங்காணல், கட்சிகளையும் மக்கள் குழுக்களையும் உள்ளடக்கிய பொது அமைப்பொன்றை உருவாக்குவதற்கான ஆலோசனைபற்றி உரையாடல், அனைவரும் இணக்கங்காணக்கூடிய குறைந்தபட்ச அரசியல் நிலைப்பாட்டை அடையாளங்காணுவதற்கான செயல்முறை, வடமாகாணசபைத் தேர்தல், தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்கும் செயன்முறை, மாகாணசபையைக் கைப்பற்றியதன் பின்னரான நிகழ்ச்சி செயற்றிட்டம், மாகாண சபை முன்மொழிவுகளை அடையாளங்காணும் செயன்முறை, மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான செயன்முறை ஆகியவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது

# ஜெயலலிதா பிரதமராக வந்தால் இலங்கைப் பிரச்சினை தீருமாம்

## நாஞ்சில் சம்பத்தின் குருட்டு நம்பிக்கை

(சென்னை)

தமிழக முதல்வர் ஜெயலலிதா, இந்திய பிரதமரானால் இலங்கை பிரச்சினை முழுமையாக தீரும் என அ.தி.மு.க. துணை கொள்கை பரப்பு செயலாளர் நாஞ்சில் சம்பத் தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டம் பெரிய நாயக்கன் பாளையம் நகர அ.தி.மு.க. சார்பில் தமிழக அரசின் நிதிநிலை விளக்கப்பொதுக் கூட்டம் பேருந்து திடலில் நடந்தது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது நாஞ்சில் சம்பத் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைப் பிரச்சினைகளை தீர்க்க தமிழக முதல்வர் தொடர்ந்து முழு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியது உள்ளிட்ட துணிச்சலான நடவடிக்கைகளால் உலகம் முழுவதும் வலுவான அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளார்.

இந்தியாவிற்கு விரோதமான செயல்களில் ஈடுபட்டு வரும் இலங்கையை இனியும் நட்பு நாடாகக் கருதக்கூடாது என முதலவர் தெரிவிப்பதை மத்திய அரசு கேட்க வேண்டும்.

கருணாநிதி டெசோ உள்ளிட்ட பயணிக்காத அமைப்புகளின் மூலம் அறிக்கைகள் விட்டு மக்களை ஏமாற்றி வருகிறார்.

இதனை மக்கள் நன்கு அறிவார்கள். மத்திய அரசில் அங்கம் வகித்த காலத்தில் இப்பிரச்சினையை தீர்ப்பதை விட்டு விட்டு இப்போது முதல்வரை வசைபாடுகிறார். இதனை மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.

நதி நீர் பிரச்சினை, இலங்கை பிரச்சினை போன்றவற்றை முழுமையாக நீக்க ஜெயலலிதா பிரதமராக வேண்டும். அதற்கு வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் நாம் 40 தொகுதிகளிலும் வெற்றி காண வேண்டும் என்று தெரிவித்தார்.

## வாசனும்...

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை கருணாநிதியும் இலங்கையில் கொமன்வெல்த் மாநாடு நடத்தப்பட்டால் அதில் இந்தியா கலந்துகொள்ளக்கூடாது என அறிக்கை விட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வடமாகாணத்...

இம்முறை நடைபெறவுள்ள வட மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் முன்னணி சார்பில் பல முன்னாள் படையணியினர் நியமிக்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## தாமரைப்பூ...

(வயது - 51) என்பவரே இவ்வாறு குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார். பி.ப. 1.00 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இவரது சடலம் நேற்று பி.ப. 2.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் கோப்பாய் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. (பா)

## பால்மாவின்..

போன்ற பிரதான நாடுகள், ஒரு மெட்ரிக் தொன் பால் மாவின் விலையை 5000 டொலர்களால் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், பால்மா இறக்குமதிக்காக அறவிடப்படும் இறக்குமதி வரியையும் குறைக்குமாறு பால்'மா உற்பத்தி நிறுவனங்கள், அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கில்...

அங்கீகாரம் கிடைத்துள்ள நிலையில், அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் சட்டமூலம் நிறைவேற்றப்படும் என்று நீதித்துறை அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் பி.பி.சி தமிழோசையிடம் தெரிவித்தார்.

யுத்தகாலத்தில் வடக்கிலிருந்து வெளியேறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாக்காளர் பெயர் பட்டியலில் இடம்பெற்றிருந்தால் அதனை வடக்கு பட்டியலில் மாற்றிக்கொள்ள வசதியாக புதிய சட்டம் கொண்டுவரப்படுவதாக ரவூப் ஹக்கீம் கூறினார்.

தேர்தல் ஆணையாளருடன் அண்மையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் பின்னரே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

வட மாகாணத்திலிருந்து வெளியேறியுள்ள சகல இனத்தவர்களும் தாம் ஏற்கனவே குறித்த மாவட்டங்களில் வாழ்ந்தவர்கள் என்பதை நிரூபிப்பதன் மூலம் தம்மை வாக்காளர் பட்டியிலில் இணைத்துக்கொள்ள முடியும் என்றும் நீதியமைச்சர் தமிழோசையிடம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண வாக்காளர் பட்டியலில் புதிதாக எத்தனை பேர் இவ்வாறாக சேர்த்துக்கொள்ளப்பட வாய்ப்பிருக்கிறது என்று வினவியபோது, குறிப்பாக எண்ணிக்கையை மதிப்பிட முடியாது என்ற போதிலும் முஸ்லிம்களின் எண்ணிக்கை '15 ஆயிரம் பேர் வரை இருக்கலாம் என்றும் ரவூப் ஹக்கீம் கூறினார்.

# கந்தரோடை மக்களுக்கு சேற்று நீர் விநியோகம் - அவலத்தில் மக்கள்

(சுன்னாகம்)

சுன்னாகம் கந்தரோடைப் பகுதிக்கு நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையினால் வழங்கப்படும் குழாய் மூலமான நீர் பயன்படுத்த உகந்ததாக இல்லையென அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒரு வார காலமாக மிகவும் கலங்கிய நிலையில் சேற்று நீராக குழாய்மூலம் தண்ணீர் வருவதினால் குழாய் நீரைப் பயன்படுத்துகின்ற இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட குழாய் நீர் மூலம் தண்ணீர் பெறுவதில் உள்ள பிரச்சினை சம்பந்தமாக உடுவில் பிரதேச செயலகத்தின் கவனத்திறக்கும் மற்றும் உடுவில் பிரதேச சபைக்கும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்திலும் குழாய் நீர் பெறுவதில் பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாகவும் முறையிட்டுள்ளார்கள்.

கடந்த காலத்தில் சுன்னாகத்தில் உள்ள கிணற்றில் இருந்து இந்தப் பகுதிக்கான குழாய் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

சுன்னாகம் பகுதியில் அமைந்துள்ள மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து அகற்றப்பட்ட எண்ணெய் குறிப்பிட்ட பகுதிக் கிணறுகளில் கலந்ததைத் தொடர்ந்து தற்போது ஊரெழு பொக்கனை பகுதியில் புதிய கிணறு அமைத்து குழாய் நீர் விநியோகம் நடைபெற்று வருகின்றது.

குறித்த கிணற்றில் இருந்து பெறப்படும் நீர் பயன்படுத்த முடியாத விடயம் சம்பந்தமாக நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் மேலதிக நடவடிக்கையை மேற்கொள்வதாக சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவித்துள்ளார்கள்.

# கிங்ஸ்லெவன் பஞ்சாபை வீழ்த்தியது சன்ரைசர்ஸ்



கிங்லெவன் பஞ்சாப் அணிக்கெதிரான போட்டியில் ஹைதரபாத் சன்ரைசர்ஸ் 30 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

மொகாலியில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற கிங்ஸ்லெவன் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான பட்டேல் (61), திஸாரா பெரரே (32), கே.வி.சர்மாவின் (22) ஓட்டங்களால் 20 ஓவர் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் சந்தீப் சர்மா 3, ஆவன்னா, ஹர்மித்சிங், சாவ்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 151 என்ற வெற்றி இலக்கி நோக்கி துடுப்பெடுத்தாடிய கிங்ஸ்லெவன் வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டத்தினால் 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக கில்கிறிஸ்ட் 26, மார்ஷ் 18, பொமேர்ஸ்பச் 33, சத்திஸ் 25 ஓட்டங்களையும், எதிர்பார்க்கப்பட்ட மில்லர் 6 ஓட்டத்தையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சமி 4 ஸ்ரெய்ன் 2, பெரேரா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பட்டேல் தெரிவானார்.

## மின் கட்டண அதிகரிப்பு எதிர்த்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக 150 தொழிற்சங்கங்கள் மற்றும் 50 பொது அமைப்புக்கள் இணைந்து கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை ஏற்பாடு செய்துள்ளன.

இது எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. கொழும்பு, கெம்பல்பிட்டி மைதானத்திலிருந்து கோட்டை புகையிரத நிலையம் வரை இந்த ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பு ஆதரவு

மின்சாரக் கட்டண உயர்விற்கு எதிரான போராட்டங்களுக்கு ஆதரவளிக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் பாரிய போராட்டமொன்றை முன்னெடுக்க தொழிற்சங்கங்கள் திட்டமிட்டுள்ளன.

இந்தப் போராட்டத்திற்கு ஆதரவளிக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. தொழிற்சங்க ஒன்றிய கூட்டமைப்பிற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்படாவிட்டால் நாடு தழுவிய ரீதியில் போராட்டம் நடத்த நேரிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது

## இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவிலுள்ள இருவர் மீது சந்தேகப்படும் ஷிராணி

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் இரண்டு ஆணையாளர் பக்கச் சர்பானவர்கள் என முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் தலைவர் பாலபட்டபெந்தி மற்றும் உறுப்பினர் ஜயந்த விக்ரமரட்ன ஆகியோர் பக்கச்சார்பானவர்கள் என குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழுவின் தலைவர் விசாரணை தொடர்பான தகவல்களை அம்பலப்படுத்தியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

2006 ஆம் ஆண்டின் பின்னர் வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்ளவில்லை எனவும், கடவுச் சீட்டை ஒப்படைக்குமாறு உத்தரவிட வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த இருவரும் விசாரணைகளை நடாத்தினால் பக்கச்சார்பற்ற முறையில் விசாரணைகள் நடைபெறாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வாவிற்கும், நீதவன் பாலபட்டபந்திக்கும் காணப்படும் உறவு முறை காரணமாக, நீதவான் பாலபட்டபந்தி தமக்கு எதிராக செயற்படக் கூடுமென அவர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

நீதவான் பாலபட்டபந்தியும், முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வாவும் உறவு முறையில் சம்பந்திகள் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த விசாரணைகளில் தமக்கு நியாயம் கிட்டக் கூடிய சாத்தியங்கள் எதுவும் கிடையாது என ஷிராணி பண்டாரநாயக்க குறிப்பிட்டுள்ளார்.



## நிலை தடுமாறிய இளைஞன்; பேருந்துடன் மோதி காயம்

(புத்தூர்)

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பயணிகள் பேருந்து நேற்று மாலை 5 மணியளவில் ஆவரங்காலை அண்மித்துக்கொண்டிருந்த போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டப்பாட்டை மீறி பேருந்தின் பின்னால் மோதி விபத்துக்குள்ளானது.

இதன் போது மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞன் நிலை தடுமாறி விழுந்து விபத்துக்கள்ளானதில் படுகாயம் அடைந்து அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டள்ளார்.



மேலதிக விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் மேற்க்கொண்டு வருகின்றனர்.

(15)

## இருவேறு விபத்தில் மூவர் படுகாயம்



(நெல்லியடி)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியிலும், நெல்லியடி நாவலர் மடத்திற்கும் அருகாமையிலும் நேற்றைய தினம் இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் மூவர் காயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வலுந்தாலடிப்பகுதியில் நேற்றுக் காலை வீதி மோட்டார் சைக்கில் காற்றுப்போன நிலையில் ஆட்டோவுடன் மோதுண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவர் காயமடைந்தனர்.

இதுபோன்று நெல்லியடி நாவலர் மடத்திற்கு அருகாமையில் துவிச்சக்கரவண்டியில் சென்ற வி.கணேஸ் என்பவர் ஆட்டோவுடன் மோதுண்டு தோட்டத்திற்குள் தூக்கி வீசப்பட்டார். இதில் அவர் தலையில் பலத்த காயமடைந்தார். இந்தச் சம்பவத்தில் துவிச்சக்கரவண்டியும், ஆட்டோவும் பலத்த சேதமடைந்தது. விபத்து தொடர்பாக நெல்லியடிப்பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

(18)

## அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக ஐ.தே.க போராட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஆர்ப்பாட்டத்திற்கும் 21 ஆம் திகதி அடையாள வேலை நிறுத்தத்திற்கும் ஆதரவு வழங்கப்படும் என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு நகரில் நேற்று இடம்பெற்ற ஐ.தே.க. கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அரசுக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கை வெற்றியடையச் செய்ய அனைத்து சக்திகளுக்கும் அழைப்பு விடுப்பதாகவும் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் காலங்களில் அரசாங்கத்தின் அனைத்து தவறான நடவடிக்கைகளையும் எதிர்த்து போராட்டம் செய்யத் தாம் தயார் எனவும் அதன் மூலம் 2014 ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றத்தை செய்யும் அரசாங்கத்தை அமைப்பதே ஐ.தே.க.வின் நோக்கம் எனவும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.